# மலர்ந்த மலர்ச்சுடரே!

## 1

"நல்லா இருக்கு தாத்தா!" என்றான் குழந்தை.

"மெத்து மெத்துன்னு இருக்கு தாத்தா..!" என்று [illegible] மடியில் குதித்துக் குதித்து அமர்ந்து பார்க்கிற பேரனின் கன்னத்தை கிள்ளிக் கொஞ்சினார்.. வெள்ளியங்கிரி.

"இருக்கும்பா. இருக்கும்!" என்று சிரித்தார்.

"தாத்தா..! நமச்சிவாய வாழ்க.. சொல்லு தாத்தா" என்றான் பேரன்.

"நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!

இமைப் பொழுதும் என்னெஞ்சில்

நீங்காதான் தாள் வாழ்க!

கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!



ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!

ஏகன். அநேகன் இறைவன் அடி வாழ்க!"

என்று கணீரென்ற குரலில் பாடினார் வெள்ளியங்கிரி. தாத்தாவின் சால்வைக்குள் முடங்கிக் கொண்டு அவரது மடியில் அமர்ந்தபடி அந்த அதிகாலை நேரத்தில் தெய்வீகக் குரலைக் கேட்பது பேரனுக்கு வெகு உற்சாகமாய் இருந்தது.

நிவேதிதா வெள்ளியங்கிரியின் மகள். இந்த மாதிரி நல்ல பழக்க வழக்கங்கள் குழந்தைக்கு ஏற்பட வேண்டும் என்பதற்காகவே விடுமுறைகளில் வந்து விடுவாள்.

உள்ளூரில்தான் புகுந்த வீடு. அதிலும் இரண்டு மூன்று கிலோ மீட்டர் கூட இல்லை. அதனால் தன் ஸ்கூட்டியிலேயே அங்கேயும் போய் மாமனார், மாமியார் தேவைகளையும் கொஞ்சம் கவனித்து விடுவாள். அதனால் அந்த பக்கமும் பெரிய எதிர்ப்பில்லை.

நிவேதிதாவின் மாமனாரும் மாமியாரும் அரசு உத்யோகங்களில் இருந்தார்கள். நிவேதிதாவும் ஒரு தனியார் கம்பெனிக்கு வேலைக்கு போனாள். குழந்தையின் தேவைகள் எல்லாம் பூர்த்தியானால் கூட இது போன்று பண்பாட்டு கலாச்சார சமாச்சாரங்களைக் கொடுப்பதற்கு அவர்கள் யாருக்கும் நேரமில்லை.

மாமனாருக்கு இன்னும் ஓரிரண்டு ஆண்டுகள் சர்வீஸ் இருந்தது. மாமியாருக்கு இன்னும் நான்கு ஆண்டுகள் இருந்தது. முடிந்த மட்டும் வேலைக்கு போகிறோம் என்றார்கள். நிவேதிதாவும், அவள் கணவன் கீதானந்தனும் பெரிதாக ஆட்சேபிக்கவில்லை.

''தாத்தா..! இந்தப் பாட்டு படத்திலே வருதில்லை?'' என்றான் பேரன்.

''படத்துலயா? எந்தப் படத்துல?'' என்றார் தாத்தா.

''அதான்.. தாத்தா..! திருவிளையாடல் படத்துல..'' என்றான் பேரன்.

தாத்தா சிரித்தார் ''ஆமா! வருது ஆனா.. இதைப் பாடினது ஒரு பெரிய பக்தர். மாணிக்க வாசகர்னு பேரு!'' என்றார்.

''தாத்தா.. தாத்தா.. அவரு கதை சொல்லு தாத்தா..''

''சொல்றேன்.. இப்பக் காலைல வேண்டாம் சாயங்காலமா.. சொல்றேன்'' என்றார்.

''போ.. தாத்தா'' என்று கோபித்தான் பேரன்.

''டேய்! வா.. கொஞ்ச நேரம் பாடம் சொல்லித் தரேன்'' என்றாள் குகப்பிரியா.

''போ.. சித்தி நீ வேற..!'' என்று பெரிய மனிதன் போல சலித்துக் கொண்டான்.

''வாடா! ஒழுங்காக் கணக்குப் போட்டு முடிச்சா.. ஃபைவ் ஸ்டார் சாக்லேட் வாங்கித் தரேன்'' என்றாள்.

''அப்ப சரி..'' என்று எழுந்த ஜெயந்தன் சந்தேகத்துடன் நின்றான்.

''அப்புறமா.. அது பல்லுக்கு நல்லதில்லேனு சொல்ல மாட்டியே..'' என்றான்.

எல்லோரும் சிரித்தார்கள். ''சரி.. ஆனா.. நீ ஒழுங்கா பிரஷ் பண்ணிக்கணும்..'' என்றாள் குகப்பிரியா.

ஒப்பந்தம் முடிவானதும் ஒரு வழியாகப் படிக்கக் கிளம்பினான் எல்.கே.ஜி. வகுப்பில் படிக்கும் ஜெயந்தன்.



''அம்மா.. நான் ஆஃபீஸ்க்கு லீவ். அந்த வீட்டுக்குப் போய் அத்தைக்கு கொஞ்சம் ஹெல்ப் பண்ணிட்டு வரேன்'' என்றாள் நிவேதிதா.

''என்னத்துக்கு லீவு..?'' என்றாள் அம்மா.

''உன்கிட்டே சொல்லலை இல்லே! இன்னைக்கு சித்ரமாலாவோட மாமியாரும் மாமனாரும் வடக்கத்திய டூர் முடிஞ்சு வர்றாங்க தெரியுமா?''

''ஓஹோ..!''

''ஆமா.. அதனால இன்னைக்கு மத்தியானம் அங்கே போகணும்'' என்றாள் நிவேதிதா.

''அக்கா...! நானும் வரேன்'' என்றாள் குகப்பிரியா.

''ஏண்டி..! கிளாஸ் இல்லையா?''

''நானும் லீவு'' என்றாள் குகப்பிரியா.

உள்ளூரிலேயே இருந்த கல்லூரியில் விரிவுரையாளராகப் போய்க் கொண்டிருந்தாள் குகப்பிரியா.

அன்றைக்கு குகப்பிரியாவுக்குத் தெரியவில்லை சித்ரமாலா வீட்டிற்குப் போய் விட்டு வருவது எத்தனை விஷயங்களை அவள் தலையில் சுமத்தப் போகிறதென்று.

* * *

''வாங்க..! வாங்க..!'' என்று உற்சாகமாய் வரவேற்றான் அறவாழி சித்ரமாலாவின் கொழுந்தன்.

''வந்துட்டோம்..'' என்று சிரித்துக் கொண்டே நுழைந்தாள் நிவேதிதா மேலும் தொடர்ந்து, ''அறவாழி..! உங்களுக்குத் தெரியாதில்லே.. இது என் சிஸ்டர் குகப்பிரியா..'' என்று தங்கையை அறிமுகம் செய்து வைத்தாள்.

குகப்பிரியா இது வரை அவர்கள் வீட்டுக்கு ...
றிரண்டு முறைதான் வந்திருப்பாள். அந்த சமயங்க...
அறவாழியை அவள் பார்த்ததில்லை. அவன் கம்பெ...
வேலையாகப் பெரும்பாலும் வெளியூர்களுக்குச் செ...
விடுவான்.

பெரும்பாலும் குகப்பிரியாவின் வருகையும் மிக...
குறுகியதாகவே இருக்கும். நிவேதிதா சிரித்தபடி...
சொன்னாள்.

"எங்க குகப்பிரியாவுக்கு டிராவல்ன்னா ரொம்...
பிடிக்கும். ஆனா.. அவளுக்கு அப்படிப் போறதுக்...
வாய்ப்புகள் கம்மி. இப்படி யாராவது வெளி...
போயிட்டு வந்தாங்கன்னா. அந்த ஊர் எப்படி ...
ன்னு கேட்டுத் தெரிஞ்சுக்கறதுல அவளுக்கு ரொ...
ஆர்வம்" என்று சொன்னவள் அப்போதுதான் நினை...
வந்தவள் போல.

"என்.. அறவாழி.. நீங்க கூட நிறைய ஆபீஸ் வி...
யமா வெளியூர் போவீங்களே! அந்த அனுபவமெல்...
சொன்னா.. ரொம்ப ரசிப்பா.." என்றாள்.

அறவாழியின் முகத்தில் கூட வெளிச்சம் கூடியது...
"அப்படியா? இப்படி ஒருத்தர் கிடைச்சா பொளந்...
கட்டிட மாட்டேன். ம்..!" என்றவன் முகத்தை மேலு...
சோகமாக்கிக் கொண்டான். "ம்.." எங்க வீட்ல நான் இந்...
மாதிரிப் பேச ஆரம்பிச்சாலே அலறிட்டு ஓடறாங்...
ஏதோ.. சித்ரா அண்ணிதான் கொஞ்சம் காது குடுத்து...
கேட்பாங்க" என்றான்.

"இப்ப இன்னொரு ஆளு கிடைச்சாங்க போ" என்...
நிவேதிதா.. "அப்புறம்.. அம்மா அப்பாவெல்லாம் எங்கே?"



என்று ஹாலுக்குள் நுழைய முற்பட்டாள். அதற்குள்ளாக அவள் குரல் கேட்டு உள்ளேயிருந்து சித்ராமாலா வந்தாள்.

"ஹாய்! நிவேதிதா.. வா வா!" என்றவள் குகப்பிரியாவை பார்த்தவுடன் இன்னும் உற்சாகமாக "ஆஹா..! பிரியா கூட வந்திருக்காளா? வாங்க.. வாங்க!" என்று உள்ளே போனார்கள்.

வடநாட்டில் டூர். கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு மேல் செலவழித்து விட்டு வந்திருந்தார்கள் சுந்தா வடிவேலும் தெய்வநாயகியும்.

உறவினர்கள் நிறைய பேர் வந்திருந்தார்கள் ஹாலே கலகலவென்று இருந்தது. கிட்டத்தட்ட இருபது பேருக்கு மேல் இருந்தார்கள். சித்ராமாலா எல்லாரையும் உபசரிப்பதற்குத் திணறியதைக் கண்டு நிவேதிதா சட்டென்று உதவிக்குப் போனாள். "இருக்கா. நானும் வரேன்" என்று குகப்பிரியா கூட வர சித்ராமாலா தன் மாமனார், மாமியாரிடம் அவளை அறிமுகப் படுத்தினாள்.

"தெரியுமில்லே..! நம்ம நிவேதிதாவோட சின்ன தங்கை" என்று.

நிவேதிதா நின்று ஒரு நிமிடம் பேசிவிட்டு சித்ராமாலாவுடன் அடுக்களைக்கு ஓடினாள்.

"திடீர்னு இத்தனை பேரு வருவாங்கனு எதிர்பார்க்கலை" என்றாள் சித்ரமாலா.

"அறவாழிகிட்டே சொல்லி ஸ்வீட் காரம் வாங்கிட்டு வரச் சொல்லலாமான்னு யோசிக்கறேன்" என்றாள்.

"பேசாம.. இரு சித்ரா! இவ நல்லா சமாளிப்பா.." என்றாள் நிவேதிதா.

அதற்குள்ளாகவே பாத்திரங்களைத் துழாவி இருக்கும் பொருட்களை வைத்து ஸ்வீட் காரம் செய்ய திட்டமிட்டாள் குகப்பிரியா.

''இருங்கக்கா..! இதோ ரவை இருக்கு! அப்புறமென்ன எல்லா வீடும் மாதிரி திடீர் ஸ்வீட் கேசரிதான். ஒரு மாறுதலுக்கு இந்த சேமியாவுல கேசரி செய்வோம்'' என்று தயார் செய்தாள். வாழைக்காய் பஜ்ஜி போட்டு எடுத்தாள். கொஞ்சம் ரொட்டித் துண்டுகளைப் போட்டு கொஞ்சம் பஜ்ஜி தயாரித்தாள். கொஞ்சம் அப்பள பஜ்ஜி தயாரித்தாள்.

எல்லாருக்கும் சூடாகக் கேசரியும் பஜ்ஜியும் போட்டு தட்டுக்களில் இறக்கவும் வந்தவர்களுக்கு மகிழ்ச்சி. 'யார் இந்தப் பெண்! சுட்டிகையா இருக்காளே!' என்று பாராட்டு வேறு.

அறவாழியும் வந்து உதவி செய்தான்.

''எனக்குத் திடீர்னு சந்தேகம் வந்துருச்சு நம்ம வீட்ல பெண் பார்க்கும் படலம் ஏதாவது நடக்குதான்னு இருக்காதே..! நான்தானே இருக்கேன் வேணுன்னா.. ஆண் பார்க்கும் படலம் வேண்ணா நடத்தலாம்'' என்றான். அதுமட்டுமல்லாமல் ''எங்கே டேஸ்ட் பார்க்கிறேன் என்று தனக்குத் தேவையானதையும் பார்த்துக் கொண்டான்.

குகப்பிரியாவும் நிவேதாவும் சிரித்தார்கள். ''இன்னும் கொஞ்ச நாள்ல அப்படித்தான் நடக்கப் போகுது பாருங்க! என்னா.. இப்பவே ஆண், பெண் விகிதாச்சாரம் கம்மியாகிட்டு இருக்காம். இனிமே பெண்கள் கிடைக்கிறது கஷ்டமாப் போயிடும்.. தெரியுமா?'' என்றாள் குகப்பிரியா.



''அப்படியா.. சொல்றீங்க'' என்று கவலையானான் அறவாழி.

''போதும் தம்பி.. நடிச்சது இந்த காபியை கொண்டு போய் சர்வ் பண்ணு'' என்றாள் சித்ரமாலா.

''போங்கண்ணி.. சீரியஸா கவலைப் படக்கூட விட மாட்டேங்கறீங்க!'' என்றான் அறவாழி.

உறவினர்களெல்லாம் புறப்பட்டுப் போன பிறகு கூட நிவேதிதாவும், குகப்பிரியாவும் இருந்தார்கள் எல்லாமே சிறப்பாகப் போய் விட்டது என்றும் சொல்ல முடியவில்லை.

நிவேதாவிடம் தனிமையில் சித்ரமாலா.

''என்னமோ.. தெரியலை நிவேதிதா, எனக்கு மனசுக்குள்ளே ஏதோ பயம் தோணுது. அத்தைகிட்டே ஏதோ வித்தியாசம் தெரியுது'' என்றாள்.

''அது வேற ஒண்ணுமில்லடி! மூணு மாசம் வெளியூர் போயிட்டு வந்திருக்காங்க இல்லே! நிறைய அனுபவம் கிடைச்சிருக்கும். கற்பனை உலகத்துல இருந்து வெளியுலகத்துக்கு வந்தா சரியாப் போயிடும்'' என்று தேறுதல் சொன்னாள். தொடர்ந்து ''ஏன்.. அப்படி நினைக்கற?'' என்று கேட்டாள்.

''இல்லை..! இது வரைக்கும் அத்தை என்னைக் கூப்பிடும் போதெல்லாம் ஏம்மா.. சித்ராங்கற வார்த்தையைத் தவிர வேற மாதிரிக் கூப்பிட்டதில்லே! ஆனா.. இப்ப ஊர்ல இருந்து வந்ததிலேருந்து இந்தா.. சித்ரமாலான்னுதான் கூப்பிடறாங்க. அப்படிக் கூப்பிடறதுல ஒண்ணும் தப்பில்லே..! ஆனா கூப்பிடற தொனி இருக்கே.. அதுலதான் வித்தியாசம் தெரியுது''

''ம்..!'' என்று உள்வாங்கிக் கொண்டாள் நிவேதிதா.

''இருக்கலாம்.. சித்ரா! வாழ்க்கையில முதல் உட வையா வெளியுலகம் பார்த்திருக்காங்க இல்லே! அந்த பந்தாவா இருக்கும்'' என்று தேறுதல் கூறினாள் நிவேதிதா.

சித்ரமாலா மனம் தேறிக் கொண்டாள். ''அப்படியும் இருக்கலாம். நாலு பேருக்கு முன்னால பாரு..! நான் என் மருமகளை எப்படி அடக்கி வச்சிருக்கேன்னு காட்டறதுக்காக கூட இருக்கலாம்..'' என்று அவளும் கூட ஒரு சமாதானம் சேர்த்துக் கொண்டாள்.

எல்லாச் சமாதானமும் அன்று இரவு வரைதான் என்று அப்போதைக்கு அவளுக்குத் தெரியவில்லை.

குகப்பிரியா தெய்வநாயகியிடம் போய் ''அம்மா உங்களோட வடநாட்டு அனுபவமெல்லாம் நிறையக் கேட்கணும்'' என்றாள்.

குகப்பிரியா செய்து கொடுத்த பஜ்ஜியும் கேசரியும் தெய்வநாயகியின் மனத்தைச் சற்றே குளிர வைத்தது போல இருந்தது. எனவே உற்சாகமாக ''ஏன்.. இப்பவே கொஞ்சம் சொன்னாப் போச்சு..'' என்றார்.

''சொல்லுங்க'' என்று குகப்பிரியா குஷியாக எதிரில் அமர அறவாழியும் கூட வந்து ஒரு சேரில் அமர்ந்தான்.

''வடநாட்டுல கொல்கத்தாவுக்குப் பக்கத்திலே இவர் கூட வேலை செஞ்சு ரிடையரான ஃபிரண்ட் ஒருத்தர் கிராமம் இருக்கு. அங்க விவசாயம் பார்க்கறாரு. ஜாட் ஃபாமிலின்னு சொல்வார்கள்ல.. அந்த மாதிரி கிட்டத்தட்ட பத்து நாள் தங்கியிருந்தோம். வசதின்னு பாத்தா நம்ம ஊரு மாதிரியில்லே. இன்னும் வீடுக எல்லாம்



பழைய காலக் கட்டிடங்கதான். ஆனா பண்பாடுன்னா என்னன்னு அவங்ககிட்டத்தான் தெரிஞ்சுக்கணும்'' என்று நிறுத்தினார்.

கண்ணாடியைக் கழற்றி தன் மருமகளையும், நிவேதிதாவையும் ஒரு பார்வை பார்த்தார். நிவேதிதாவுக்கு ஒன்றும் வித்தியாசமாகத் தெரியவில்லை. ஆனால் சித்ரமாலாவுக்குத் தனக்கான செய்தி ஒன்று வரப் போகிறது என்று தோன்றியது.

தெய்வநாயகி தொடர்ந்தார், ''கூட்டுக் குடும்பமாத்தான் இருக்காங்க! வீட்டில மாமியார்தான் எல்லா முடிவும், மகன்களும், மாமனாரும் தொழில் விஷயங்களைக் கவனிக்கறாங்க. மருமகப் பொண்ணுகளைப் பார்க்கணுமே! ஒரு வசதியும் இல்லே. இப்பத்தான் மிக்ஸி ஏதோ ஒன்று ரெண்டு வீட்டில் தலை காட்டுது. கூட்றது, புடைக்கறது, அரைக்கறதுன்னு எல்லா வேலையும் செஞ்சுட்டு ராத்திரியில படுக்கப் போறதுக்கு முன்னால் வீட்டுல இருக்கற பெரியவங்க காலை எல்லாம் பிடிச்சு விட்டு மசாஜ் செய்றாங்க'' என்றார்.

நிவேதிதாவும், குகப்பிரியாவும் ஒருவரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள். சித்ரமாலா எந்த உணர்வையும் காட்டாமல் இருக்கப் படாத பாடு பட்டாள்.

''அது மட்டுமில்ல..! ஏதாவது காரணம் கிடைச்சா.. போதும் மகனுகளுக்கு ரெண்டாம் கல்யாணம் பண்ணிடறாங்க'' என்றார்.

குகப்பிரியாவின் முகத்தில் லேசான கோபம் தலை காட்டியது. அவள் சட்டென்று ''அப்படீன்னா.. பொம்பளைகளே பொம்பளைகளுக்கு எதிரியா இருக்காங்கன்னு சொல்லுங்க'' என்றாள்.

அண்ணியின் வாடிய முகத்தைப் பார்த்த அர… சட்டென்று தானே தலையிட்டான்.

''அப்படிப் போடுங்க குகப்பிரியா! எம்மா… னம்மா.. பேசிட்டிருக்கே! ஏதோ வடநாடெல்ல… போயிட்டு வந்திருக்கே! அங்க இருக்கிற கோயில், … பார்த்த இடம் பத்திச் சொல்லுவேன்னு பாத்தா.. … காலை அமுக்கி விட்டாளாம். இந்தக் காலத்துல ம… காலை அமுக்கி விடறதில்லே! நீ சொல்லு.. உன் … யாருக்கு நீ கால் அமுக்கி விட்டிருக்கியா?'' என்றான்.

இப்படி ஒரு தலையீட்டை எதிர்பார்க்காத தாய் ''… டா! அங்க நடக்கறதைச் சொல்றேன்'' என்ற… அசட்டுக் குரலில்.

''நல்லாச் சொன்னே போ? அங்கெல்லாம் பொண்… ணுக இன்னும் படிக்கலே. அப்படி நடக்குது! இங்க எல்… லாப் பொண்ணுகளும் படிச்சு வேலைக்குப் போகுதுங்க! இப்ப அண்ணியையே எடுத்துக்க வேலைக்குப் போற… துக்குள்ளே உங்களுக்கு எல்லாம் செஞ்சு வச்சுட்டுத் தானே போறாங்க! அதைப் பாராட்டு! அதை விட் டுட்டு..'' என்று சலித்தாற் போலச் சொல்லவும் எதிர்ப்பை உணர்ந்த தெய்வநாயகி பொதுவாகப் பேச்சை மாற்றி தான் பார்த்த இடங்களைப் பற்றிச் சொல்லலானார்.

கொஞ்ச நேரம் இருந்து விட்டு குகப்பிரியாவும், நிவேதிதாவும் கிளம்பினார்கள்.

நிவேதிதாவின் மனதில் மட்டும் உண்மையாகவே சித்ரமாலாவின் மாமியாரிடம் ஏதோ மாற்றம் இருக்கிறது என்ற எண்ணம் தீவிரமாய்த் தோன்றிய படியே இருந்தது.



# 2

''ஏங்க! இன்னைக்காவது லீவு எடுத்திருக்கலாம் இல்லே..!'' என்றாள் சித்ரமாலா.

அமர்ஜித் அமைதியாகக் கட்டிலில் அமர்ந்தான். சலிப்புடன் சொன்னான்.

''ஏன்.. சித்து! இன்னைக்குப் பார்த்துதான் அந்த மும்பை மேனேஜர் வர்றார். நீதான் நல்லா வேலை செய் வேன்னு சொல்லியே பூரா வேலையும் என் தலைல கட்டிடறாரு! அம்மாவும், அப்பாவும் ஊர்ல இருந்து வர் றாங்கன்னு எங்க மேனேஜர்கிட்டே சொல்லித்தான் வச்சிருந்தேன். அவரும் லீவு எடுத்துக்கோப்பான்னுதான் சொல்லியிருந்தாரு..! ஆனா.. கடைசி நேரத்துல மும்பை மேனேஜர் வந்து கழுத்தறுத்துட்டாரே'' என்றான்.

''அது சரி..! பர்மிஷன் போட்டிருக்கலாம் இல்லே! சாயங்காலம் நிறைய கெஸ்ட் வந்திருந்தாங்க.

''என்ன.. சித்து..! நீயும் புரிஞ்சுக்காம பேசறே! யாரோ எங்க பிராஞ்ச் மேனேஜரைப் பத்தி ஏதோ மேல தட்டி விட்டுட்டாங்க போல இருக்கு..! மும்பை மேனேஜர் குடை குடைன்னு குடையறாரு. கிளம்பவும் மாட்டேங் கறாரு. ஆசாமி எட்டு மணிக்குத்தான் கிளம்பினாரு! உடனே ஓடி வந்தேன்'' என்றான்.

அமர்ஜித் வரும்போதே மணி எட்டரை ஆகிவிட்டது. அநேகமாக விருந்தாளிகள் எல்லாரும் போய் விட்டிருந் தார்கள்.

''ஏண்டா.. இன்னைக்குக் கூடவா உனக்கு லீவு போட முடியலை'' என்று அம்மா கடிந்து கொண்ட போது பதில் சொல்கிற தெம்பு கூட அவனிடத்திலே இருக்கவில்லை. அப்பாதான் அவனது களைத்த முகத்தைப் பார்த்து விட்டு, ''விடு! அதான் வந்தாச்சுல்லே! இனிமே எங்கே போகப் போறோம். டயர்டா வந்துருக்கான். போப்பா.. போய் சாப்பிடு..'' என்ற மனைவியின் வாயை அடைத்தார்.

கணவனுக்கு உணவு பரிமாறி சாப்பிட வைத்து விட்டுத் தங்களுக்கென்று தனிமை கிடைத்த இடைவேளையின் போதுதான் கணவனும், மனைவியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அமர்ஜித் சித்ரமாலாவிடம் திரும்பி ''அப்புறம் நிறைய பேரு வந்திருந்தார்களா?'' என்று கேட்டான்.

''ஆமா.. உறவுக்காரங்க நிறைய பேர் வந்திருக்காங்க..! ரொம்பக் கலகலப்பா இருந்துச்சு. என் ஃபிரண்டு நிவேதிதா கூட வந்திருந்தா! அவ சிஸ்டர் குகப்பிரியா வந்திருந்தா'' என்றாள்.

''ம்ஹூம்! நிவேதிதா வந்திருந்தாங்களா! அடடா! அவங்களைப் பாத்தே ரொம்ப நாளாச்சல்லே..!'' என்றான்.

''ஆமா..!'' என்றாள்.

அமர்ஜித் மனைவியைக் கூர்ந்து பார்த்தான்! மனைவியின் முகத்தில் ஏதோ மாற்றம் தெரிந்தது.

''என்ன.. சித்து..! வேலை ஜாஸ்தியா?'' என்றான்.

அவள் உச்சுக் கொட்டினாள். ''வேலை அதிகம்தான். ஆனா.. உறவுக்காரங்க வரும்போது அப்படித்தான் இருக்கும்! அது பரவால்லே..!'' என்றாள்.



வேறு ஏதோ இருக்கிறது என்று அமர்ஜித்துக்குப் புரிந்தது.

''என்னம்மா'' என்றான் வாஞ்சையுடன். அதுவரை அடக்கி வைத்திருந்த உணர்வுகள் எல்லாம் வெடித்துக் கிளம்பியது. சித்ரமாலாவும் தேம்பி அழுது விட்டாள்.

''டேய்..! என்னடா..!'' என்று மலைத்துப் போனான் அமர்ஜித்.

சித்ரமாலா அழுகையை மெல்ல மெல்ல நிறுத்தினாள். ஆனால் வாய் திறக்கவில்லை.

''என்னடா..'' அத்தை வரப் போறாங்க..! மாமா வரப் போறாங்கன்னு நீ தானே வாய்க்கு வாய் சொல்லிட்டிருக்கே'' என்றான்.

அவள் தலையை மேலும் கீழும் ஆட்டினாள். ''ஆமா..! சொல்லிட்டிருந்தேன்! இப்பவும் அவங்க வந்ததுல சந்தோஷம்தான்! ஆனா..'' என்று நிறுத்தினாள்.

''ஆனா..!'' என்று அவன் சற்று நேரம் ஆழ்ந்து பார்த்தான்.

''இல்லே..! அத்தே என்னமோ வந்ததுல இருந்தே.. ஒரு மாதிரியாய் பேசிட்டிருக்காங்க!'' என்றாள்.

''ஓ..! அம்மா.. அப்படியெல்லாம் பேச மாட்டாங்களே.. என்றான்.

''அதான்! அதான்! எப்பவுமே பேசறவங்களா இருந்தாத் தெரியாது ஆனா.. இப்ப என்னவோ.. புதுசா இந்த மாதிரியெல்லாம் பேசும்போது..'' என்று அவள் தேம்பினாள்.

அமர்ஜித்துக்கு என்ன சொல்கிறாள் தெரியவில்லை... மனைவி இப்படி மனம் வருந்திப் பேசும்போது பே... இருப்பதும் சரியில்லை என்று தோன்றியது.

"என்ன சொல்றாங்க?" என்றான்.

"இல்லே! வடநாட்டில ஒரு ஜாட் ஃபாமிலியில பழ... தாங்களாம். இளவயசுப் பெண்கள் வீட்டு வேலை... யெல்லாம் முடிச்சுட்டு ராத்திரியில மாமியாரின் கால்... லாம் அமுக்கி விடறாங்களாம்" என்றாள்.

"ம்..! நீ என்ன முடிவு பண்ணியிருக்கே?"

"ம்..?" என்று அவள் விழித்தாள்.

"இல்லே! கால் அமுக்கறதா.. முடிவா..? இல்லை..?" என்று அவன் சிரிக்க அவள் முகம் வாடியது.

"அவசியம்னா.. செய்யறேன்" என்றாள்.

"தேவைப்பட்டா.. நீ செய்வே! அது எனக்கும் தெரியும்!" என்றவன் மெல்லத் தன் மனைவியை அருகில் இழுத்துக் கொண்டான்.

"இத பார்! நாற்பது வயசில நாய்க்குணம்பாங்க! அப்புறம் போகப் போக அது அப்படியே.. அதிகமாகி இப்படித்தான் நடந்துப்பாங்க! இன்னொரு விஷயம் தெரியுமா? பெண்களுக்கு வயசு அதிகமாக ஆக.. ஒரு பாதுகாப்பற்ற தன்மையை உணர்றாங்க! அதனால.. தான்.. மருமகள் மேல ஆதிக்கம் செலுத்தணும்கிற எண்ணமே வருது! அந்த சைக்காலஜியைப் புரிஞ்சுக்க..! அவங்களை ஒரு குழந்தையா நினைச்சுக்க.. எல்லாமே சரியாப் போயிடும்" என்றான்.

"அட இது கூட நல்லாருக்கே! இப்படி நாம யோசிக்கலையே.." என்று எண்ணினாள். அவள் மனம் கொஞ்சம்



தெளிவானது. ஆனால் இன்னமும் முழுசாகத் தெளியவில்லை. மறுபடியும் முணுமுணுத்தாள்.

"என்ன முணுமுணுப்பு?" என்றான் அவன். அவன் கைகள் அவளை சமாதானப் படுத்தும் முயற்சியில் இறங்கியிருந்தது.

"விடுங்க!" என்று விலகியவள் "எல்லாத்துக்கும் மேலே இன்னொன்றும் சொன்னாங்க!" என்றாள்.

"ம்.. சொல்லு..!" என்றான்.

"அங்கயெல்லாம்.. ஒரு பொண்ணுக்குக் குழந்தை பொறக்கலேன்னா.. உடனே மகனுக்கு வேற கல்யாணம் பண்ணி வச்சுடுவாங்களாம்" என்றாள்.

குரலில் அவ்வளவு ஆற்றாமை. அவனுக்கு மனைவியின் வருத்தத்தின் ஆழம் சட்டென்று புரிந்தது. அவள் முகத்தை நிமிர்த்தினான்.

"மக்கு!" என்றான் மனத்து அன்பையெல்லாம் கண்களில் தேக்கி அவளைப் பார்த்தான்.

"அது பேரப்பிள்ளை வேணும்கற ஏக்கத்துல உளர்ற உளறல்! விட்டு! இதெல்லாம் வடநாட்டுல எங்கேயோ உள்ளடங்கிய கிராமங்கள்ல நடக்கலாம். இங்கே அப்படியில்ல நீயும் படிச்சவ..! உன்னுடைய அனுமதியில்லாம எதுவும் நடக்காது.." என்றான்.

அவள் அவனிடம் இருந்து விலகினாள். வெறித்துப் பார்த்தாள்.

"அனுமதி குடுத்தா.. நடக்குமா??" என்றாள் அவள் மறுபடியும் சிரித்தான்.

"ஹேய்! நீயே அனுமதி குடுத்தாலும் நடக்காது.. தெரியுமா? சரி.. தெளிவா.. சொல்றேன்.. கேட்டுக்க..

இந்தப் பிறவிக்கு.. நீதான் எனக்கு..! அ...
ஏழு பிறவிக்கும் நீதான் என்ன வேணும்!'' எ...

அவன் முகம் தெளிந்தது. அவன் சமாதானம் ...
சொன்னான்.

''உனக்கும் எனக்கும் எந்தக் குறையுமில்லே. ...
எப்ப வேணாலும் பிறக்கலாம்னு.. டாக்டர்லே ...
வீட்டாங்களே..! அப்புறம்.. என்ன?'' என்றான்.

அவள் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''எங்க..! வள்ளுவர் கூட சொல்லியிருக்காரு..

குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள்
மழலைச் சொல் கேளா தவர்.

அப்படீன்னு'' என்றாள்.

''கிடைக்கும்! கண்டிப்பாக் கிடைக்கும், ஆழ்ந்து பிரார்த்தனை பண்ணு. பிரார்த்தனைக்கு இருக்கிற சக்தி எதுக்குமே இல்லைங்கறாங்க.

உனக்குத் தெரியுமோ என்னவோ! மனிதனுடைய மனம் சக்தி வாய்ந்ததாம். உள்மனம் வெளிமனம் ஆழ் மனம்னு நம்ம மனசுல மூணு நிலைகள் இருக்காம் தியானத்தின் போது நாம ஆழ்மனதுக்குப் போயிடறோம் கறாங்க. ஆழ்ந்த பிரார்த்தனையின்போதும் நாம ஆழ் மனத்துக்குப் போயிடறோம்கறாங்க! பிரார்த்தனையை ஆழ்ந்து செய்யும்போது நம்ம ஆழ்மனத்துக்கும் பிரபஞ்ச சக்திக்கும் தொடர்பு ஏற்படுதாம். அப்போ நம்ம பிரார்த் தனை நிறைவேர்றதுக்கான சூழ்நிலைகள் உருவாகு தாம்'' என்றான்.

''ஆமா..! நானும் இப்ப மனசார பிரார்த்தனை பண்ண ஆரம்பிச்சிருக்கேன்.. அந்த தெய்வம்தான் வழி காட்ட ணும்'' என்றாள் சித்ரமாலா.



''இங்க.. பார்! எதைப் பத்தியும் கவலைப் படாதே! ...காரணம் கொண்டும் நமக்குள்ளே பிரிவு கிடையாது. உனக்கோ எனக்கோ குழந்தை பெறுகிற சக்தி இல் ...லைன்னாக் கூட என் முடிவு இதுதான் அதைக் கண்டிப்பா நிரூபிப்பேன்'' என்றான்.

ஆறுதலுக்காக அப்படிச் சொன்னாலும் அப்படி நிரூபிக்க வேண்டிய அவசியம் வரும் என்று அவன் நினைக்கவில்லை. ஆனால் எதிர் காலத்தில் வரத்தான் போகிறது என்றும் அப்போது அவன் கைமீறி விஷ யங்கள் நடக்கப் போகிறது என்று அப்போது அவனுக்குப் புரியவில்லை.

* * *

அறவாழி பெரியபுராணத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்தான்.

அவன் நண்பர்கள் அவனைக் கேலி செய்வார்கள்.

''ஏண்டா..! அவனவன் செல்ஃபோன், ஐ பாட், இன்டர் நெட்ன்னு உட்கார்ந்துகிட்டிருக்கறப்ப நீ என்ன.. பெரிய புராணம், கம்பராமாயணம்னு உட்காந்துகிட்டிருக்கே!'' என்று,

அறவாழி சிரித்துக் கொண்டே சொல்லுவான்.

''டேய்! நான் பிறந்த நாடு தமிழ்நாடு. என் மொழி தமிழ். இதுல எத்தனை எத்தனை இலக்கியங்கள் இருக்கு தெரியுமா? அத்தனையும் வாழ்நாள்ல ஒரு தடவை படித்துப் பார்த்துடணும்னு என்னோட ஆசை! பக்திக்காக இல்லேன்னாலும் ஒரு ரசிகனா எல்லா இலக்கியங்களை யெல்லாம் படிக்கணும்னு நினைக்கிறேன். என்ன தப்பு?''

''ஒரு தப்புமில்லையே!'' என்று அவர்கள் பின் வாங்கி விடுவார்கள்.

"இல்லடா! நம்ம தமிழ்நாட்டுல இருக்கிற சி
பத்தின விஷயங்களைப் படிச்சிருக்கேன். அவங்க
காலத்துல என்னென்னவோ அற்புதங்களை நி
யிருக்காங்க? எண்ணங்களாலேயே நோயைக் கு
படுத்த முடியும்ன்னு இப்ப ஆராய்ச்சிகள் நடக்கு
யுமா "டெலிபதி"ன்னு ஒரு விஷயம். இப்ப வி
உலகமும் ஏத்துகிட்டிருக்கு தெரியுமா? இன்னைக்
ஃபிஸிக்ஸ்ல சொல்ற நிறைய விஷயங்களை அ
னைக்கே நம்ம பெரியவங்க சொல்லியிருக்காங்க.. தெரி
யுமா" என்று ஆரம்பிப்பான்.

முதலில் அலட்சியமாகக் கேட்க ஆரம்பிப்பவர்கள்
அவன் விஷயங்களைச் சொல்கிற விதம் பார்த்து வாய
பிளந்து கொண்டு கேட்க ஆரம்பித்து விடுவார்கள்.

அறவாழியும் ஒரு கம்ப்யூட்டர் துறை வல்லுநர்தான்.
அதே சமயம் நமது பாரம்பரியம் பற்றிய பெருமையும்
சிந்தனைகளும் அவனுக்கு உண்டு. இப்போது சுந்தரர்
வரலாறு படித்துக் கொண்டிருந்தான். அதில் "முதலை
யுண்ட சிறுவனை மீட்ட" கதை பற்றிப் படித்துக் கொண்
டிருந்தான்.

சுந்தரர் ஆணையிட்டவுடன் நிகழ்ந்த அற்புதங்கள்
தான் அவன் மனதை ஈர்த்தன. அவிநாசி என்ற ஊரில்
சுந்தரர் நிகழ்த்திய அற்புதம் அது.

சுந்தரர் அவிநாசியில் ஒரு தெருவில் நடந்து வரு
கிறார். ஒரு வீட்டில் மங்கல ஒலியும், இன்னொரு வீட்டில்
அழுகை ஒலியும் கேட்கிறது. ஏனென்று விசாரிக்கிறார்.
விழாக் கோலம் பூண்ட வீட்டிலே ஒரு சிறுவனுக்கு
பூணூல் போடுகிறார்கள். இந்த சிறுவனும், எதிர்வீட்டுச்
சிறுவனும் தாங்கள் ஐந்து வயதில் இருக்கும் போது



ஊரில் உள்ள குளத்துக்கு சென்றார்கள். ஒரு சிறுவனை அங்கே இருந்த முதலை விழுங்கி விட்டது இன்னொரு சிறுவன் பிழைத்து வந்து விட்டான். பிழைத்து வந்தவனுக்கு விழா எடுக்கிறார்கள் என்றார்கள்.

இறந்து விட்ட சிறுவனின் பெற்றோர்கள் சுந்தரர் வருவதை அறிந்து தங்கள் அழுகையை நிறுத்திவிட்டு அவரை வணங்கி மகிழ்ந்தார்கள். நெகிழ்ந்து போன சுந்தரர் அந்தக் குளம் எங்கே இருக்கிறது என்று விசாரித்து அங்கே போய்ப் பதிகம் பாடினார். குழந்தை இப்போது உயிருடன் இருந்திருந்தால் என்ன வளர்ச்சியுடன் இருக்குமோ அதே வயதில் வளர்ச்சியில் குழந்தையை முதலை கொண்டு வந்து மேலே விட்டது.

அற்புதம் என்னவென்றால் அவர் போனபோது வறண்டு கிடக்கிறது குளம். முதலில் குளத்தில் நீரை வரவழைக்கிறார். பிறகு தாமரை மலர்கள் தோன்றுகின்றன. பிறகு குழந்தை விழுங்கப்பட்ட கால கட்டத்தில் எப்படி முதலைகள் இருந்தனவோ அப்படியே முதலைகள் தோன்றுகின்றன. அதன் பிறகு விழுங்கிய பையனை முதலை கொண்டு வந்து சேர்ப்பித்தது. அந்த பதிகத்தை ஒருமுறை படித்துப் பார்த்தான்.

"உரைப்பார்" உரைஉகந்(து)

உள்க வல்லார் தங்கள் உச்சியாய்!

அரைக்கா(டு) அரவா

ஆதியும் அந்தமும் ஆயினும்

புரைக்காடு சோலைப்

புக்கொளியூர் அவிநாசியே

*கலரக்கால் முதலலைப்*

*பிள்ளை தரச்சொல்லு காலனையே*

என்றிருந்தது பதிகம் ''காலனைக் குழந்தையைக் கொண்டு வரச் சொல்லு..'' என்று இறைவனுக்கே ஆணையிடக் கூடிய தொனியில் இருந்த பாட்டை அறவாழி மிகவும் ரசித்தான்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும், சித்தர்களும் அருளாளர்களும் எத்தனை எத்தனை அற்புதங்களை நிகழ்த்தியிருக்கிறார்கள். இதெல்லாம் உண்மையில் நடக்கக் கூடிய விஷயங்கள்தானா? என்றெல்லாம் எண்ண ஓட்டங்கள் அவனுக்குள் எழுவதுண்டு.

எண்ணங்களுக்கு சக்தி இருக்குமானால் அந்த எண்ணங்களை உருவாக்குகிற எண்ணங்களும் கடந்த பக்தியும் இருக்க வேண்டுமல்லவா? என்று எண்ணிக் கொண்டான்.

அமர்ஜித் கூட அவனைக் கேலி செய்வதுண்டு ''ஏண்டா! வயசுக்கு மீறி யோசிக்கறே? என்று.

''யோசிச்சா.. என்ன தப்பு?'' என்று பதில் சொல்லி நகர்ந்து விடுவான். நம்பிக்கை சார்ந்த விஷயங்களைப் பொறுத்த வரை விவாதத்தில் பயனில்லை என்பது அவன் கருத்து.

அனுபவங்கள் வேறு..! அறிவியல் வேறு என்பதில் தெளிவாக இருந்தான். அவனது இந்த மாதிரிக் கேள்விகளுக்கு எப்படியும் விடை கிடைக்கும் என்று அவன் நினைத்ததுண்டு.

கிடைத்தது! ஆனால் அன்று எதிர்பாராத ஆளிடம் இருந்தது. அதுவும் ஒரு இனிய அனுபவமாத்தான் இருந்தது.



# 3

வெள்ளியங்கிரி மிக மும்முரமாய்ப் பூஜையில் ஆழ்ந்திருந்தார்.

''வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க.

பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க

புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்குழல்கள் வெல்க

சிரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க

கரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடி போற்றி எந்தை அடிபோற்றி

தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி

மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி

திருவாசகத்தில் சிவ புராண வரிகளை அவர் வாய் முணுமுணுத்துக் கொண்டே இருந்தது. அவரது பூசை அறையில் மூன்று தட்டுக்கள் நிறைய தெய்வங்களின் படங்கள் அவைகளுக்கும் சாம்பிராணி காட்டி விட்டு வீடு முழுக்க சாம்பிராணி காட்டினார்.

வெள்ளியங்கிரி வீடு, முழுதும் நடக்கையிலே பேரன் ஜெயந்தனும் கூடவே நடந்து கொண்டிருந்ததது. பார்ப்பதற்கு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தன் பிஞ்சுக் கைகளால் கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

''ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க'' என்று அவர் சொல்லி முடித்து விட்டு இடைவெளி கொடுத்தால்

அவனும் தன்னால் இயன்றவரை அற்புதமாகச் சொன்னான்.

ஒரு பெரிய மனிதனுக்கு எவ்வளவு மரியாதை கொடுப்பாரோ அந்த மரியாதையை அந்தக் குழந்தை சொல்லி முடிக்கும் வரை வெள்ளியங்கிரி அவனுக்கும் கொடுத்தார்.

குகப்பிரியா நின்று அதை மிகவும் ரசித்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். ''ஷ்'' என்று வாயில் விரல் வைத்து அவர்களுக்கு சைகை வேறு காட்டினான் ஜெயந்தன்.

''சரிப்பா..!'' என்று அவளும் பவ்யமாகத் தலையாட்டிக் கொண்டாள். ஒரு குழந்தை இருந்தால் வீடு நிறைந்து விடும் என்பார்களே அது போல் ஜெயந்தன் வீட்டில் இருந்தால் வீடே கலகலப்பாகிவிடும்.

வெள்ளியங்கிரியின் பின்னாலேயே சுற்றிக் கொண்டே இருப்பான். அவரும் அவன் கேட்கிற கேள்விகளுக்கு சலிக்காமல் பதில் சொல்வார். அவனுக்கேற்ற மாதிரி பதில் சொல்லி விடுவார். ''ஏண்டா..! இப்படி நச்சறே!'' என்று சலித்துக் கொள்வதோ, மிரட்டுவதோ இருக்காது.

''குழந்தைகள் நிறையக் கேள்விகள் கேட்கறாங்கன்னா அது அவங்களோட அறிவு வளர்ச்சிக்கு அடையாளம். பதில் சொல்லணுமே தவிர.. போடா.. சும்மா கேள்வி கேட்டுட்டு.. என்று மிரட்டி அதட்டக் கூடாது'' என்பார்.

தனது இரு பெண் குழந்தைகளையும் அப்படித்தான் அவர் வளர்த்தார். பெண் பிள்ளைகள்தானே என்று எந்த விதத்திலும் வித்தியாசம் காட்டவில்லை. அதனாலேயே என்னவோ குகப்பிரியா எதையும் ஆராய்ந்து பார்க்கிற மனப்பான்மை உள்ளவளாக இருந்தாள்.



''அப்பா.. இவனைப் பாருங்கப்பா!'' என்ற மகனை அள்ளிக் கொண்டாள் குகப்பிரியா.

''விடு.. சித்தி..! டிஸ்டர்ப் பண்ணாதே..! நான் பூஜை செய்யறேன் இல்லே'' என்று பந்தா காட்டினான் குழந்தை.

எல்லாரும் சிரித்தார்கள்.

பூஜை முடிந்தவுடனே தாத்தாவின் மடியில் அமர்ந்து கொண்டான்.

''தாத்தா..! எதுக்கு பூஜை பண்றே?'' என்றான்.

''சாமி சாப்பாடு.. துணிகள் எல்லாம் குடுத்திருக்காரே.. அதுக்கு நன்றி சொல்லணுமில்லே..!'' என்றார் தாத்தா.

''போ.. தாத்தா..! நீ தானே வேலைக்குப் போய் சம்பளம் வாங்கறே! சாமியா எல்லாம் குடுக்குது?''

''சாமி.. நேரடியாக் குடுக்காது! நாம உழைச்சா அதுக்கு சம்பளம் கிடைக்குது இல்லே! வேலை கிடைக்கறதே சாமியோட அருளாலதான்!''

''ஒஹோ..! வேலை கிடைக்காதவர்களும் இருக்காங்களா?''

''ஆமா..! பிச்சைக்காரங்களைப் பாக்கறே.. இல்லே..''

''சாமி.. ஏன் அவங்களைப் பிச்சைக்காரரா வச்சிருக்கு.''

அவங்க உழைக்கறதில்லே! அதனால! எப்பவுமே நாம உழைக்க சம்பளம் வாங்கறதுதான் நல்லது..''

''போ.. தாத்தா.. புரியலே!''

தாத்தா சிரித்தார். ''நீ கொஞ்சம் பெரியவனானா புரியும்..!''

''சரி.. இப்பக் கதை சொல்லு!''

''சொல்றேன்.. நைட் படுக்கும்போது கதை சொல்றேன்..''

''தாத்தா.. பிரகலாதன் கதை சொல்லு..!''

''கண்டிப்பா சொல்றேன்டா.. ராஜா..! நீ இப்ப சா... பிடுவியாம்'' என்றார்.

''வா.. நான் உனக்கு டிஃபன் ஊட்டி விடறேன்'' என்று அள்ளிக் கொண்டாள் குகப்பிரியா.

அதே நேரம்!

நிவேதிதா அவசரமாய் கிளம்பினாள்.

''டீ.. பிரியா..! பாத்துக்க! நான் இன்னைக்கு சீ... ராவைப் பிக்கப் பண்ணிக்கணும். அறவாழி இல்லை... யாம்'' என்றார்.

குகப்பிரியாவின் முகத்தில் லேசான புன்னகை தோ... றியது. ஏனோ தெரியவில்லை அறவாழியை நினைக்கும் போதெல்லாம் அப்படி ஒரு புன்னகை அவள் முகத்தில் மலர்ந்தது.

''ஏன்.. சித்தி.. சிரிக்கறே!'' என்றான் ஜெயந்தன்.

''நீ கேள்வி கேட்டயே! அதை நினைச்சுத்தான்'' என்றாள் குகப்பிரியா.

''ஓஹோ..!'' என்றான் குழந்தை பெரிய மனிதனைப் போல. அதற்கும் சேர்த்து குகப்பிரியாவின் முகத்தில் ஒரு புன்னகை பிறந்தது.

* * *

''சித்ரா.. சித்ரா..'' என்று அழைத்தார் மாமியார் சித்ரமாலா ''வர்றேன் அத்தை!'' என்று பரபரப்பாக வந்தாள்.

''இந்தா.. பாரு! இந்த டீ டம்ளர் எவ்வளவு நேரமா இங்கே கிடக்கு!'' என்றார்.



சித்ரமாலா இதை எதிர்பார்க்கவில்லை. எப்போதுமே தான் தேநீர் அருந்திய பிறகு தானே டம்ளரைக் கொண்டு போய்க் கழுவி விடுவார். இப்போதெல்லாம் இருந்த இடத்தில் இருந்தே சித்ரமாலாவிடம் நிறைய வேலை வாங்கினார்.

சித்ரமாலாவும் மனம் சளைக்காமல் செய்தாள். ஆனாலும் இது என்னமோ அதிகம் என்று தோன்றியது. கஷ்டப்பட்டு முகம் மாறாமல் பார்த்துக் கொண்டாள்.

''சாரிங்க.. அத்தை! இதோ கொண்டு போறேன்'' என்று எடுத்துக் கொண்டாள்.

எடுத்துக் கொண்டும் போனாள். அவள் நகர்ந்ததற்குப் பின் ''ஆமா..! படிச்சவளுங்க இல்லையா? இந்த வார்த்தை கத்து வச்சுருக்காங்க.ஆ... ஊன்னா.. சாரி.. சாரி.. ன்னு ஒரு வார்த்தையை எடுத்து விட்டுர்றாங்கப்பா..!'' என்று அவள் காதுபட முணுமுணுத்தார்.

சித்ரமாலாவுக்குக் கொஞ்சம் ''சுருக்''கென்றது. முகம் வாடிவிட்டது. ஆனால் காதில் விழாதவள் போலவே உள்ளே போய்விட்டாள்.

சுந்தரவடிவேலு மனைவியை முறைத்தார். ''என்னத்தை முறைக்கறீங்க..! எல்லாம் காரணமாத்தான்'' என்று கிசுகிசுத்தார் தெய்வநாயகி.

''என்ன காரியமோ..! நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வர்றேன்..'' என்று சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பிவிட்டார்.

''புரிஞ்சுக்கவே மாட்டார். கூறுகெட்ட மனுஷன்'' என்று முணுமுணுத்துக் கொண்டார் தெய்வநாயகி.

அமர்ஜித்துக்குத் திருமணம் நடந்த போது சாதாரண வேலையில் இருந்தான். சித்ரமாலா பட்டப்படிப்பு படித்திருந்தாலும் அவளது குடும்பம் மிகவும் சாதாரண குடும்பம். ஆனால் சித்ரமாலா வேலைக்குப் போய்க் கொண்டிருந்தாள்.

குறைவாகச் செய்தாலும் நிறைவாகச் செய்தார்கள்.

''இங்க பாரு! குடும்பம் நல்ல குடும்பம் அக்கம் பக்கத்துல எல்லாம் விசாரிச்சேன். இருக்கற இடமே தெரியாம இருப்பாங்களாம். பொண்ணு நல்ல பொண்ணுங்கறாங்க! அதைத்தான் பாக்கணும். நகையெல்லாம் பார்க்கக் கூடாது. அதுவுமில்லாம பொண்ணும் வேலைக்குப் போறா.. எப்படியோ ரெண்டு பேரும் சம்பாதிச்சு.. அவங்க பொழப்பைப் பார்த்துக்குவாங்க..! அதுதானே முக்கியம்'' என்று கணவர் அன்றைக்கு சொன்னபோது தெய்வநாயகிக்கும் அது சரி என்றே பட்டது.

சித்ரமாலாவும் அந்த எதிர்பார்ப்புக்குக் குறை வைக்காமல்தான் நடந்து கொண்டாள். அமர்ஜித்தும் அவளும் வீட்டுக்கு கொடுத்த பணம் போக சிக்கனமாகச் செலவு செய்து ஓரளவு சேமித்து இடம் என்று கூட வாங்கிப் போட்டிருந்தார்கள். ஆனால் சமீபகாலமாக தெய்வநாயகிக்கு மகனுக்கு குழந்தையில்லையென்பது பெரிய குறையாகத் தோன்ற ஆரம்பித்திருந்தது.

வடநாட்டில் அந்தக் கிராமத்துக்குப் போய் வந்ததற்குப் பிறகு மேலும் சில விஷயங்களை சேர்த்து கொண்டார். மாமியார் என்ற தோரணையைக் காட்ட வேண்டும் என்ற எண்ணமும் பத்து ஆண்டுகள் ஆகியும் குழந்தை பெற்றுக் கொடுக்க முடியாதவள் என்ன மருமகள் என்று குத்திக் காட்ட வேண்டும் என்ற எண்ணமும் தொடர்ந்து தோன்றியது.



சுந்தரவடிவேலுக்கு இது பிடிக்கவேயில்லை. அற வாழிக்குத் தெரிந்தால் அவன் ருத்ரதாண்டவம் ஆடிவிடுவான் என்பதால் அவன் இருக்கும்போது அடக்கியே வாசித்தார்.

சுந்தரவடிவேலு முதல் நாள்தான் மனைவிக்கு அறிவுரை சொல்லியிருந்தார். ''பாரு! தெய்வா.. இப்படியெல்லாம் எண்ணாதே! இப்பல்லாம் குடும்ப வன்முறைச் சட்டம்னு வந்திருக்கு தெரியுமா? ரொம்பக் குத்திக் குத்திப் பேசி அந்தப் பொண்ணு பாட்டுக்கு அம்மா வீட்டுக்குன்னு கிளம்பிடப் போகுது'' என்று.

அந்த அறிவுரை நேர்மாறான விளைவை ஏற்படுத்தியது என்பதை அறியவில்லை.

''அப்படிப் போகணும்னுதானே எதிர்பார்க்கிறேன்'' என்று தெய்வநாயகி மனதுக்குள் சொல்லிக் கொண்டதை அவர் அறியவில்லை.

மருமகள் கணவனிடம் புகார் சொல்ல வேண்டும். அதனால் குடும்பத்தில் குழப்பம் வர வேண்டும். ''என்னவோ பண்ணிட்டுப் போங்க!'' என்று மகன் சலித்துக் கொள்கிற நிலைமைக்குப் போக வேண்டும். அதற்குப் பிறகுதான் தனது அடுத்த கட்ட வேலையை ஆரம்பிக்க வேண்டும் என்று திட்டம் போட்டுக் கொண்டிருந்தார்.

சித்ரமாலாவோ நேர் எதிரான மனநிலையில் இருந்தாள். அவள் தனது மாமியாரின் வார்த்தைத் தாக்குதல்களைத் தான் மட்டுமே தாங்கிக் கொள்வது என்று முடிவு செய்திருந்தாள். கணவனிடம் ஓரிரு முறை வருத்தத்தைப் பகிர்ந்து கொண்ட போது அவன் பட்ட வேதனையைப் பார்த்துத்தான் அவள் அந்த முடிவுக்கு வந்திருந்தாள். அது மட்டுமல்லாமல் தன் மாமனாரும்

மனைவிக்கு அட்வைஸ் செய்தார். அவ்வளவும் [illegible]
காணாதது போலக் கவனித்துக் கொண்டிருந்[illegible]
தாள்.

விஷயம் அளவு மீறிப் போகும்போது [illegible]
கொள்ளலாம் என்றும் தெளிவான முடிவில் இருந்[illegible]

சுவற்றில் அடித்த பந்து போல் தன் வார்த்தைகள் [illegible]
முகத்திலேயே திரும்பத் திரும்ப வந்து அறைவதை[illegible]
பார்த்த தெய்வநாயகிக்கு மேலும் மேலும் [illegible]
பேறியது.

உள்ளுக்குள்ளேயே கறுவிக் கொண்டிருந்தார். [illegible]
வன் கோயிலுக்குப் போய் விட்டு வரட்டும் என்று [illegible]
கொண்டிருந்தார்.

இரவு எட்டு மணியிருக்கும்!

தெய்வநாயகி தங்களது பீரோவில் எதையோ அரக்க
பரக்கத் தேடிக் கொண்டிருந்தார்.

''என்னத்தைத் தேடறே?'' என்று கேட்டார்.

''ம்..! இல்லே.. நம்ம பசங்களோட ஜாதகக்கட்டு
இருந்ததே.. எங்கேன்னு தேடறேன்'' என்றார்.

''எதுக்கு?!'' என்றார் சுந்தரவடிவேல்.

''எதுக்கு?'' நம்ம ஜோசியர்கிட்டே கொண்டு போய்
பார்க்கத்தான்!

''என்ன திடீர்ன்னு?'' என்றார்.

''பெரியவனுக்கு எப்ப ஏதோ பூச்சி பொட்டு கிடைக்
கும்? இந்த சின்னதுக்கு எப்பக் கல்யாணம் கில்யாணம்னு
அமையும்னு பாக்கறதுக்குதான்'' என்றார்.



''ம்ஹும்!'' ஆமா.. ஜோசியர்கிட்டே பேசு விட்டது
[illegible] ஆறேழு மாசமாயிருக்க..'' என்று தானும் கூடச்
சேர்ந்து தேடலானார் சுந்தரவடிவேல்.

உண்மையில் அவர் தன் மனைவியின் உள்ள ஓட்
டத்தைப் புரிந்து கொள்ளவேயில்லை.

அதே சமயத்தில் தங்களது அறையில் கணவனுக்
காகக் காத்துக் கொண்டிருந்தாள் சித்ரமாலா.

அமர்ஜித் வருவதற்கு ஒன்பது மணியாகிவிட்டது.
சமீப காலமாக அவன் இப்படி நேரங்கழித்து வருவது
சகஜமாகத்தான் இருந்தது.

அவனுக்கு உணவு பரிமாறிக் கவனித்து விட்டுத்
தானும் சாப்பிட்டு விட்டுப் படுக்கையறைக்கு வந்தாள்.

கொஞ்ச நேரம் தங்கள் படுக்கையறையில் இருக்கிற
டி.வியை சத்தம் குறைவாக வைத்துக் கொண்டு பார்ப்
பான் அமர்ஜித்.

இன்றைக்கு அதற்குக் கூட மனமில்லாதவன் போல
விட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு படுக்கை
யில் சாய்ந்திருந்தான்.

''என்னங்க.. யோசனை?'' என்று அவன் அருகில்
அமர்ந்தாள் சித்ரமாலா.

அவன் கவலையுடன் அவளைப் பார்த்தான். ''எப்படி
உன்கிட்டே சொல்றதுன்னுதான் தெரியலை'' என்றான்.

''என்னங்க?'' என்றாள் லேசான திகிலுடன்.

''இல்லே..! சித்ரா.. எனக்கு மாற்றலாகி இருக்கு!''
என்றான்.

''எங்கே..?'' என்றாள் கவலையுடன்.

''எங்க.. ஹெட் ஆஃபீஸ் இருக்கில்ல.. மும்பையில் அங்கே..!'' என்றான்.

சித்ரமாலா கொஞ்சம் அதிர்ந்துதான் போனாள். ஆனா உடனே சுதாரித்துக் கொண்டாள்.

''அதுக்கு ஏன் கவலைப் படறீங்க?''

''இல்லை! ஒரு வருஷமாவது கண்டிப்பா நீங்க அங்கே வேலை செய்யணும்! அப்புறம் நாங்க இங்கே மேனேஜர் போஸ்ட்டே தர்றோம்கறாங்க!'' என்றான்.

சித்ரமாலா அப்போதுதான் ஒரு அரசு அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்திருந்தாள். ''ப்ரொபேஷனரி பீரியட்'' என்பதால் அவளும் வேலையை விட முடியாது. அப்ப டியே மாற்றல் கிடைத்தாலும் அது தமிழ் நாட்டுக்குள் மட்டும்தான். இன்னும் சொல்லப் போனால் அதிகமா மாறுதல் தேவையில்லாத அரசுத் துறை அலுவலகம் அது.

எல்லாவற்றையும் யோசித்தபடி அமர்ந்திருந்தாள் சித்ர மாலா.

''பரவால்லைங்க! நீங்க போய்ட்டு வாங்க..! நான் மேனேஜ் பண்ணிக்கறேன்'' என்றாள்.

அமர்ஜித் மறுபடியும் கவலையுடன் பார்த்தான்.

''ஐய்யோ! எதுக்கு இப்படிக் கவலைப் படறீங்க! நான் என்ன காட்லயா இருக்கேன். நம்ம வீட்டில் அத்தை மாமாவோட இருக்கேன். அறவாழி வேற இருக்காரு..! அப்புறம் என்ன?'' என்றாள்.

அமர்ஜித் அமர்த்தலான குரலில் பேசினான்.

''இல்லே! சித்து..! அம்மா வேற இங்கே என்னென்னவோ பேசறாங்க.! எப்படியெப்படியோ நடந்துக்கறாங்க'' என்றான்.



அவள் கலகலவெனச் சிரித்தபடி கணவனைத் தன் மார்போடு சேர்த்துக் கொண்டாள்.

''ஐய்யோ..! இது பெரிய விஷயமா? எல்லா வீட்லயும் இருக்கறதுதாங்க..! நீங்க ஏங்க கவலைப் படறீங்க! நான் அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன். ஒரு வருஷம்தானே இதோங்கறதுக்குள்ளே ஓடிப் போயிடும். மாசம் ஒரு தரம்னு வருவீங்கதானே!''

''ம்.! அது வரலாம்! ஃபிளைட் ஃபெஸிலிட்டியே தராங்களாம். இரண்டு நாளைக்காவது இருக்கலாம்'' என்றான்.

''அப்புறம் என்னங்க? நான் மேனேஜ் பண்ணிக்க றேங்க'' என்று அவள் வெகுவாக ஆறுதல் சொல்லவும் அவன் மனம் தேறினான்.

''எப்பப் போகணும்?'' என்றாள்.

''ஒரு வாரம் ஜாயினிங் டைம் தராங்க!'' என்றான்.

மெல்லக் கண்ணயர்ந்தான். கணவனை சமாதாப் படுத்தினாலும் அவளுக்குள்ளே பயம் தோன்றியது.

''சமாளிச்சுக்கலாம்'' என்று தன்னை அவள் தேற்றிக் கொண்டாலும், விஷயங்கள் அவ்வளவு சுலபமாக இருக்கப் போவதில்லை என்பது அப்போது அவளுக்குப் புரியவில்லை.

## 4

அறவாழி அந்த அலுவலக மேனேஜரைப் பார்த்து விட்டு வெளியே வந்தான்.

பெரிய அலுவலகம் அது! அந்த அலுவலக ஊழியர்களுக்காக ஒரு மலேஷியா டூர் ஏற்பாடு செய்யுமாறு அவர்கள் கம்பெனியில் கேட்டிருந்தார்கள். அறவாழி ஒரு டிராவல்ஸ் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தான். ''ஃபார்வர்ட் டிராவல்ஸ்'' என்று அந்தக் கம்பெனிக்குப் பெயர்.

மேலதிகாரிகளுக்கு இப்போதெல்லாம் பல கம்பெனிகள் ஒரு ஊக்க போனஸ் போல இது போன்ற பயணங்களை ஏற்பாடு செய்கிறார்கள். அதிலும் ஃபார்வர்ட் டிராவல்ஸ் மிகச் சிறப்பாகச் செய்கிறார்கள் என்று பெயர் எடுத்திருந்தார்கள். முக்கியமான பெரிய அலுவலகங்களுக்கான டூர் என்றால் அறவாழியிடம் பொறுப்புக் கொடுத்து விடுவார்கள்.

அறவாழியும் ஃபோனிலேயே முடிக்கலாம் என்று நினைக்காமல் இரண்டு, மூன்று முறை நேராகப் போய் விடுவான். அலுவலக நேரத்தை வேறு பணிகளுக்காகப் பயன்படுத்துவது 'அதான் அங்கேயே.. போறமே.. அப்படியே நம்ம வேலையும் முடிச்சுக்கலாம்' என்று நினைப்பது என்பது போன்ற பலவீனங்களெல்லாம் அவனிடத்தில் இருக்கவில்லை என்பதால் கம்பெனியிலும் அவனைப் பற்றி நல்ல எண்ணம்தான். அசிஸ்டென்ட் மேனேஜர் என்று பொறுப்புக் கொடுத்திருந்தார் எம்.டி. இது மாதிரி வேலைகளுக்குப் போகும்போது ஆஃபீஸில் இருந்து காரும் கொடுத்து விடுவார்கள்.

அலுவலகக் காரில்தான் வந்திருந்தான் அறவாழி. அவன் பேசிய விதம் அந்தக் கம்பெனி மேனேஜருக்கு மிகவும் பிடித்திருந்தது.



தனது அலுவலகத்தை விட்டு அவன் கூடவே பேசிக் கொண்டு வெளியே வந்தார். அவரிடம் நின்று பேசி விட்டு அவனும் அலுவலக வாசலுக்கு வந்தான்.

காரை எடுக்கும் நேரம் அவன் கண்ணில் அந்தக் காட்சி பட்டது. ஒரு இரு சக்கர வண்டியில் பின்னாலே ஒரு குழந்தையை அமர வைத்துக் கொண்டு குகப்பிரியா வந்து கொண்டிருந்தாள்.

இரண்டு பேரும் ஒரே நேரத்தில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். கார்க்கதவைத் திறந்தவன் சட்டென்று நிறுத்தி விட்டு அவளிடம் பேசுவதற்காக நின்றான்.

''ஹல்லோ.. மேடம்!'' என்றான்.

''ஹல்லோ.. சார்!'' என்றாள் அவள்.

''எப்படியிருக்கீங்க?''

''நல்லாயிருக்கேன்.. நீங்க.?''

''நானும் நல்லாயிருக்கேன். இந்த சாஃப்ட்வேர் கம்பெனியில் ஒரு ஃபாரின் டூருக்காக எங்க கம்பெனியை அப்ரோச் பண்ணியிருக்காங்க. ஃபாரின் டூர்ன்னா.. நான் தான் பொறுப்பு..! அதான்'' என்றான்.

''ஹல்லோ.. அங்கிள்.!'' என்று குறுக்கே புகுந்தான் குழந்தை.

''ஹாய்டா.. ராஜா!'' என்று அவனும் குழந்தையின் கன்னத்தைத் தட்டினான்.

''ஜெயந்தன்..! அக்கா.. பையன்!'' என்று அறிமுகப் படுத்தினாள்.

''நிவேதிதா.. மேடம் பையனா! குட் படிக்கறியா...''

''ம்.. எல்.கே.ஜி'' என்றான் குழந்தை பெரிய மனுஷனாக.

''குட்.. நல்லாப் பேசறியே!'' என்று மேலும் பாராட்டினான். தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து இரண்டு மூன்று சாக்லெட்டுகளை எடுத்து நீட்டினான்.

''பரவாயில்லையே..! ரெடி மேடா கையில் வச்சிருக்கீங்க..'' என்றாள் குகப்பிரியா.

''இல்லே..! இன்னைக்கு யாரோ குடுத்தாங்க! அதை...''

''சரி.. நான் கிளம்பட்டுமா? கம்ப்யூட்டர் கிளாசுக்கு போகணும்'' என்றாள்.

''காலேஜ் போயிட்டு வந்தாச்சா?'' என்றான் அறவாழி.

''ம்..! ஈவ்னிங் அவர்ஸ்ல எதுக்கும் கம்ப்யூட்டர் கோர்ஸ்ல் கொஞ்சம் எடுத்துக்கலாமேனுட்டு..''

''ஆமா.. நல்லதுதான்'' என்றான் அறவாழி.

வேண்டுமென்றே பேச்சை வளர்க்கிறோம் என்று அறவாழிக்குப் புரிந்தது. ஆனால் புறப்படவும் மனம் வரவில்லை.

''கம்ப்யூட்டர் கிளாசுக்கு இவரும் வர்றாரா?'' என்றான்.

''இல்லைல்லே..!'' என்று சிரித்தாள் குகப்பிரியா.

''ஐயாதான் எங்க வீட்ல சீஃப் கெஸ்ட்! ரெண்டு தாத்தா பாட்டி வீட்டுக்கும் மாத்தி மாத்திப் போயிகிட்டிருப்பாரு. துணைக்கு நானோ.. அக்காவோ போகணும்.. என்றாள்.

''கேட்டியல் அடிக்கறீங்க!'' என்றவன் தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டு ''ஹலோ! மிஸ்டர்.. மகேசியா போலாமா? என்கூட வர்றீங்களா?'' என்றான்.



''எங்கப்பா.. அம்மாவையும் கூப்பிட்டுக்கலாமா!'' என்றான் பையன்.

''போச்சு.. போ..! சித்தியை விட்டுட்டியே'' என்றான் அறவாழி.

''சித்தி.. எங்க கூட வரமாட்டாங்களாம்! கல்யாணமாகி சித்தப்பா.. வந்தப்பறம் அவங்க கூடத்தான் போவாங்களாம்'' என்றான் பையன்.

அறவாழி ''அப்படிப் போடு'' என்று சிரித்தான். குகப்பிரியாவின் முகம் சிவந்து போனது.

''என்னடா.. உளறிகிட்டு!'' என்று செல்லமாக ஒரு தட்டு தட்டினாள்.

''நீ தானே.. சித்தி சொன்னே!'' என்றான் அவன் உறுதியாக.

அவள் அசடு வழிந்தாள். ''இல்லே..! அவங்க போனவாட்டியோட எங்கேயோ போகும்போது.. என்னையும் வரச்சொல்லி வற்புறுத்தினான். அப்ப சும்மா சொன்னது'' என்று விளக்கம் அளித்தாள்.

அவன் அமர்த்தலாக சிரித்துக் கொண்டான். ''சரி வரட்டுமா? என்று காரில் ஏறி அமர்ந்தான்.

''ஓ.கே.. சார்!'' என்று அவளும் கிளம்பினாள்.

''ஏண்டா.. அவருகிட்ட போயி இப்படியெல்லாம் சொல்லிகிட்டு..'' என்று அவள் கேட்க ''போ.. சித்தி.. சும்மா மிரட்டாதே.. நீதானே சொன்னே'' என்று அவன் பதில் சொல்லுவதும் காதில் விழ சிரித்துக் கொண்டே காரை எடுத்தான் அறவாழி.

பொதுவாக பெண்களிடம் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசி விட்டு நகர்ந்து விடுவான். ஆனால் இந்தப்

பெண்ணிடம் மட்டும் தான் ஏன் இப்படி நின்று பே
கிறோம் என்று அவனுக்குப் புரியவில்லை.

தன்னைக் குறித்தே அவனுக்கு ஒரு வெட்க உணர்ச்
தோன்ற தலையை ஒரு குலுக்கிக் கொண்டு தெருவைப்
பார்த்துக் காரை ஓட்டினான்.

* * *

''அண்ணி அண்ணி'' என்று உற்சாகமாக வந்தான்
அறவாழி.

''சொல்லு.. தம்பி..!'' என்றாள் சித்ரமாலா.

''அண்ணி.. இன்னைக்குக் காலமே நான் கம்பெனி விஷயமா ஒரு இடத்துக்குப் போயிருந்தேன். வெளியே வரும்போது உங்க ஃபிரண்டோட சிஸ்டரைப் பார்த்தேன்.''

''என்னப்பா.. ஒரே பூடகமாச் சொல்றே?'' என்றாள் சித்ர மாலா.

''அதான்.. அண்ணி..! உங்க க்ளோஸ் ஃபிரண்ட் நிவேதிதா.. இல்லே..! அவங்க சிஸ்டர் குகப்பிரியாவைப் பார்த்தேன்.''

''ஓஹோ..! எங்க வச்சு?''

''உங்க ஃபிரண்டோட குழந்தையை அவங்க தாத்தா.. பாட்டி வீட்டுல விட்டுட்டு வர்றதுக்குப் போயிட்டிருந் தாங்க! என்னைக் கண்டவுடனே சிரித்துப் பேசினாங்க..!'' என்றான் உற்சாகமாக.

''ஆமா! எல்லார்கிட்டயும் குகப்பிரியா பழகிக்கு வாப்ல..'' என்று பாராட்டிக் கொண்டாள் சித்ரமாலா.

அறவாழி கண்களைச் சுழற்றிப் பார்த்தான். ''எங்கே அம்மா.. அப்பாவையும் காணோம்?'' என்றான்.



''ரெண்டு பேரும் கோவிலுக்குப் போறேன்னுட்டுப் போயிருக்காங்க..'' என்றவள் ''தம்பி காஃபி.. கீஃபி ஏதாவது சாப்பிடறீங்களா?'' என்றாள்.

''வேண்டாண்ணி.. நான்தான்.. ஈவ்னிங் ஆஃபீஸ்லேயே சாப்பிடறேனே'' என்றான்.

''அது சரி..! கொஞ்சமே.. கொஞ்ச நேரம்.. பொறுங்க..! டிஃபன் ரெடி பண்ணிடறேன்..'' என்றாள்.

''செய்ங்கோ..! உங்க ஸ்பெஷலான கிச்சடி பண்ணுங்க'' என்றான்.

அவள் கிச்சடி செய்வதற்கான ஏற்பாடுகளைப் பார்த்துக் கொண்டிருக்கையிலே அவன் அடுப்பு மேடைக் கருகில் வந்து நின்று கொண்டான்.

''அண்ணி..!'' என்றான் ஆழ்ந்த குரலில்.

''என்னப்பா.!'' என்றாள் சித்ரமாலா.

''அண்ணி..! அம்மா ஊருக்குப் போயிட்டு வந்ததுல இருந்தே.. ஒரு மாதிரிப் பேசிகிட்டிருந்தாங்களே! இப்பவும் அது மாதிரிப் பேசறாங்களா?'' என்றான்.

சித்ரமாலா லேசான வருத்தத்துடன் அவன் முகத்தை பார்த்தாள்.

''தம்பி..! அவங்க வருத்தம் அவங்களுக்கு.. குழந்தை யில்லேன்னு குறை! ஆனா.. அவங்க ஒண்ணு புரிஞ்சுக்க மாட்டேங்கறாங்க..! எங்களுக்கும் அந்த ஏக்கம் இருக் கும்னு.. அவங்களுக்குப் புரியலே..!'' என்றாள்.

''அண்ணி..! வடநாட்டுல சில கிராமங்கள்ல மருமகள் களை அடக்கி ஆள்றதுங்கறது இருக்குதுதான். ஆனா.. அதைத் தவிர எத்தனையோ விஷயங்கள் நல்ல விஷ யங்கள் இருக்கில்லே.. அதையெல்லாம் அப்சர்வ் பண்

நதை விட்டுட்டு இதைக் கத்துக்கிட்டு வந்திருக்காங்க நீங்க ஒண்ணுக்கும் கவலைப் படாதீங்க. அண்ணனை இல்லையேனு பயப்பட வேண்டாம்.. அம்மாவோட பேச்சு.. ஒரு மாதிரிப் போச்சுன்னா.. என்கிட்டே சொல்லுங்க.. நான் பாத்துக்கறேன் ஏற்கனவே.. மிரட்டித்தான் வச்சிருக்கேன்'' என்றான்.

சித்ரமாலாவுக்கு இப்போது ஒரு விஷயம் புரிந்தது. அறவாழி வீட்டில் இருக்கும்போது மாமியார் அடக்க வாசிப்பது ஏன் என்று இன்றைக்குப் புரிந்தது.

சித்ரமாலாவின் முகபாவத்தைப் பார்த்து விட்டான் அறவாழி சட்டென்று சொன்னான்.

''அண்ணி.. டிப்ளமாட்டிக்கா இருக்கறதா நினைச்சுகிட்டு அம்மா.. பேசறதெல்லாத்தையும் மறைக்காதீங்க! அம்மா.. என்னவோ பழைய மாதிரித் தெரியலே..! அண்ணி.. ஜாக்கிரதை! என்னமோ.. மாமியாரை விட்டுக் கொடுக்காம நடந்துக்கற நல்ல மருமகளா நடந்துக்கறதா நெனச்சுகிட்டு உங்க தலையில மண்ணை வாரி அள்ளிப் போட்டுக்காதீங்க இப்பவே நீங்க என்னமோ மறைக்கிற மாதிரிதான் தெரியுது'' என்றான் ஆற்றாமையுடன்.

அதற்குப் பிறகுதான் சித்ரமாலா மெதுவாக மனம் திறந்தாள். ''இல்ல தம்பி..! நீங்களும் அவரும் இருக்கறப்ப எதுவும் பேசறதில்லே மாமா.. இருக்கறப்ப கூட ஏதோ ஜாடைமாடையாப் பேசுவாங்க.. ஆனா.. ஒருத்தரும் இல்லாதப்ப.. சாட்டை மாதிரி வார்த்தைகள் சொடுக்கறாங்க! அவங்களைச் சொல்லியும் குத்தமில்லே! எங்களுக்குக் கல்யாணமாகிப் பத்து வருஷம் ஆயிருச்சு.. இல்லே..'' என்றாள்.



பெருந்தன்மையாகவே பேசுகிற அண்ணியைப் ...மாகப் பார்த்தான் அறவாழி.

''ம்ஹும் நீங்க சரிவர மாட்டீங்க! நீங்க சாஃப்டா இருந்தா.. ஆகாது.. சீக்கிரமே உங்களுக்கு ஒரு சப்போர்ட் கிடைக்கிற மாதிரிப் பாக்கணும்'' என்றான்.

சித்ரமாலா முதலில் விழித்தாள். ''புரியலே.. தம்பி..'' என்று ஆரம்பித்தவளுக்கு சட்டென்று புரிந்தது.

''தம்பீ..!'' என்றாள். ''ஓஹோ..!'' என்று சிரித்தாள்.

''பேசறதைப் பாத்தா.. கல்யாண ஆசை வந்துருச்சு.. போல இருக்கு..'' என்றாள்.

''ரொம்ப லேட்டாப் புரிஞ்சுக்கறீங்க.. அண்ணி'' என்றான் அறவாழி.

எப்போதுமே அண்ணியுடன் ஒரு தோழமை உணர்வோடுதான் பழகுவான். அம்மாவிடம் சொல்லாத விஷயங்களைக் கூட அண்ணியிடம் பகிர்ந்து கொள்வான்.

''அப்படிப் போடுங்க..!'' என்று சிரித்தாள் சித்ரமாலா.

கிச்சடியை எடுத்து ஹாட்பேக்கில் வைத்தாள். சட்டினிக்குத் தயார் செய்தாள். மெதுவாகத் திரும்பிப் பார்த்துப் புன்னகையுடன் கேட்டாள்.

''தம்பி.. பேசறதைப் பார்த்தா.. ஆள் பாத்து வச்சிருக்கிற மாதிரித் தெரியுது'' என்றாள்.

அவன் முகம் சிவந்து ''கிட்டத்தட்ட அப்படித்தான். ஆனா.. அந்தப் பக்கத்துல இன்ட்ரஸ்ட் இருக்கற மாதிரித் தெரியணுமே..'' என்றான்.

''நான் ஏதும் ஹெல்ப் பண்ணணுமா?'' என்றாள் குறும்பு சிரிப்புடன்.

அவனும் குறும்பாகப் புன்னகைத்தான். "நியாய... இந்த விஷயங்கள்லே நாமதான் முட்டி மோதணும்... விடக் கூடாது ஆனா.. உங்க அட்வைஸ் வாங்கிக்க... என்றான்.

"கண்டிப்பா.. தம்பி.." என்றாள் அவளும்...

"அதுவும் கூட ஏன்னா.." என்று அவன் இழுக்க அவ... கண்கொட்டாமல் பார்த்தாள்.

"பொண்ணு.. உங்களுக்குத் தெரிஞ்ச பொண்ணுதான்..." என்றான்.

"ஓஹோ..!" என்று அவள் கேள்விக் குறியாக... பார்க்க.. அவன் அவளை நேராகப் பார்க்காமல் ஏதோ... ஒரு பாத்திரத்தில் எதற்காகவோ அவள் வைத்திருந்... தண்ணீரில் ஒரு கரண்டியைப் போட்டு கலக்கினான்.

"கலக்கறீங்க.. தம்பி..!" என்று அவள் இரு பொருள்... படச் சொல்லி சிரித்தாள்.

சட்டென்று அவன் கரண்டியைச் சுழற்றுவதை நிறுத்தி... விட்டு அவள் முகத்தைப் பார்த்தான். பிறகு சொன்னான்.

"அது.. வந்து உங்க ஃபிரண்டோட சிஸ்டர் குகப்... பிரியாதான்.." என்றான்.

சித்ரமாலாவின் முகம் மலர்ந்தது. "ஓஹோ.. அப்... படியா?" என்று குதூகலமானாள். சட்டென்று சிந்தனை... வயப்பட்டாள்.

"ஏன் தம்பி..! நம்ம வீட்ல ஒத்துக்கணும்.. அவங்க... வீட்ல ஒத்துக்கணும்.."

"முதல்ல.. அந்தப் பொண்ணு ஒத்துக்கணும்.." என்... றான்.



"ஆமா.. அது வேற..!" என்றாள் சித்ரமாலா. பிறகு தொடர்ந்து "ரொம்ப நல்ல பொண்ணுதான். வேண்ணா.. நான் பழகறதுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தர்றேன். பழகிப் பாருங்க.." என்றாள் சித்ரமாலா.

"அண்ணி.. அந்தக் கவலையெல்லாம் என்கிட்ட விட்ருங்க! நீங்க மட்டும் யாருகிட்டேயும் சொல்லாதீங்க" என்றான்.

"கண்டிப்பா.. சொல்ல மாட்டேன்..!" என்றாள்.

"இல்லண்ணி..! இந்த எண்ணம் இப்பத்தான் என் மனசுல முளைவிட்டிருக்கு! அந்தப் பொண்ணுக்கும் ஒப்புதல் இருக்கணும். பாக்கலாம். நடந்தா சரி.. நடக்கல்லேன்னாலும் சரி..! அதுக்காக வருத்தப்பட மாட்டேன். என்னமோ மனசு.. அந்த பொண்ணுகிட்டே போகுது. வொர்க் அவுட் ஆனாச் சரி.. இல்லேன்னாலும் சரி.." என்றான்.

"ஆமா.. தம்பி..! பெரிய எதிர்பார்ப்பு எதுவும் இல்லாமே இருந்தா நல்லதுதான். ஆனா சந்தோஷம். ஆகல்லேன்னா அதுக்கும் வருத்தப்பட வேண்டாம்" என்றாள் சித்ரமாலா.

"சரிங்கண்ணி..! இந்த மேட்டரை மனசுல ஒரு ஓரமாப் போட்டு வைங்க! அம்மாகிட்டே ஜாக்கிரதையாயிருங்க! எது பேசினாலும் எனக்கு உடனே சொல்லுங்க.." என்றான்.

"சரி.. தம்பி..!" என்றாள் சித்ரமாலா.

"என்ன திடீர்னு கோயிலுக்குப் போயிருக்காங்க..?" என்றான்.

"போயிட்டு வரட்டுமே!" என்றாள் சித்ரமாலா.

கோவிலுக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டு அறவாழியின் தாய் வேறு ஏதோ இடத்துக்குப் போயிருக்கிறார்கள் என்பதும் சித்ரமாலாவின் வாழ்க்கைக்கு உலை வைக்கிற மாதிரித் திட்டங்களை மாமியார் போட்டுக் கொண்டிருக்கிறார் என்றும் சித்ரமாலாவுக்குத் தெரியவில்லை.

அறவாழியோ இரண்டும் கெட்டான் மனநிலையில் இருந்தான். ஒரு பக்கம் குகப்பிரியாவின்பால் மனம் சென்றதால் அது பற்றிய ஒரு மகிழ்ச்சி உள்ளே ஓடிக் கொண்டிருந்தது என்றால் அம்மா மாறியிருக்கிற விதம் குறித்துக் கவலையும் தோன்றியது. இனிமேல் வரும் நாட்களில் சித்ரமாலா எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகள் குறித்து இருவருமே அறிந்திருக்கவில்லை.

## 5

‘‘ஒழுங்கா.. உட்கார்றா..’’ என்று ஜெயந்தனின் தலையை அழுந்தப் பிடித்து உட்கார வைத்தாள் குகப்பிரியா.

ஜெயந்தனுக்கு எண்ணெய் தேய்த்து குளிக்க வைப்பதென்பது ஒரு திருவிழா போல அந்த வீட்டில் நடைபெறும்.

‘‘போடி.. இவன் கூட ஓட என்னால முடியாது’’ என்று சலித்துக் கொள்வாள் மகேஸ்வரி.

குகப்பிரியாவுக்கு ஜெயந்தன் மேல் கொள்ளை அன்பு. அவனும் ‘‘சித்தி சித்தி’’ என்று அவள் கழுத்தைக்



கட்டிக் கொள்வான். மழலையின் பேச்சும் அந்தப் பிஞ்சுக் கைகள் மென்மையாக மேலே படருவதும் அவளுக்கு இன்பமாக இருக்கும். சித்திக்குத் தன்மேல் மிகவும் அன்பு என்று அவனும் ஏதோ விதத்தில் உணர்ந்து கொண்டிருந்தான். சற்று நேரம் அவளோடுதான் இருப்பான். அவளும் வேலை நேரம் போக மீதி நேரம் அவனைத் தன் பொறுப்பில் வைத்துக் கொள்வாள்.

இன்றைக்கு அவனுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிக்க வைக்கலாம் என்ற எண்ணத்தில் அவள் படையெடுப்பு நடத்த அவனும் தன் பங்குக்கு ஆட்டம் காட்டிக் கொண்டிருந்தான்.

‘‘போ.. சித்தி.. எண்ணெய்.. வேண்டாம்’’ என்று அவன் ஓட.

‘‘போடா.! அப்படியெல்லாம் சொல்லக் கூடாது..! எண்ணெய் தேய்ச்சுக் குளிக்கிறது ரொம்ப நல்லதுடா’’ என்று கெஞ்சினாள் அவள்.

‘‘நீ.. தலையைப் போட்டுத் தேய்ப்பே..!’’ என்று சிணுங்கினான்.

‘‘ஐய்யோ..! கோபிச்சுக்கும்போது ரொம்ப அழகா இருக்கேடா.. நீ’’ என்று தாஜா செய்து குளிக்க வைத்துக் கொண்டிருந்தாள்.

‘‘புடவையை எடுத்து செருகிக் கொண்டு அவன் தலையை அரப்புத் தூளைக் குழைத்து அப்பிக் கனகாரியமாகத் தன் காரியத்தைச் செய்து கொண்டிருந்தாள்.

*‘‘சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி*

*ஆராத இன்பமருளும் மலை போற்றி*

*சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்*
*அவனருளாலே அவன்தாள் வணங்கிச்*
*சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை*
*முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்*

என்று வெள்ளியங்கிரி பாடும் குரல் கேட்டவுடன் பையன் பாத்ரூமில் பிளாஸ்டிக் ஸ்டுலின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தவன் "ஹை.. தாத்தா பாடறாங்க" என்று எழுந்து ஓடி வந்தான்.

"டேய்.. டேய்.. என்னடா.. நீ!" என்று குகப்பிரியாவும் பின்னாலே ஓடி வந்தவள் கொஞ்சம் திடுக்கிட்டு நின்றாள்.

வீட்டு வாசலில் அறவாழி நின்று கொண்டிருந்தான். அவள் தூக்கிக் கட்டியிருந்த புடவையை எடுத்துக் கீழே விட்டபடி அவனைப் பார்த்து அசடு வழியச் சிரித்தாள்.

கைநிறைய அரப்போடு அவள் குழந்தை பின்னாலே ஓடிய காட்சியை அவன் ரசித்துக் கொண்டான். அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் இருக்க மிகவும் சிரமப் பட்டு விட்டான்.

"வாங்க..! வாங்க..!" என்றாள்.

அவன் உள்ளே வந்தான். அவள் "அப்பா.." என்று குரல் கொடுக்க அப்பா வெளியே வந்தார்.

"ஓ.. பூஜையில இருக்காங்களா!" என்று அவன் தடுமாற.

"இல்லல்லே.. முடிச்சுட்டேன்.. வாங்க!" என்று அவர் வரவேற்றார்.



"அப்பா! சித்ராக்காவோட கொழுந்தன்" என்று அவள் அறிமுகப் படுத்த,

"ம்.. பாத்திருக்கேன்" என்றார் அவர்.

அவள் அவனிடம் திரும்பி "பேசிக்கிட்டிருங்க.." என்று சொல்லிவிட்டு குழந்தையை இழுத்துக் கொண்டு போனாள்.

"ஒன்றுமில்லே! அண்ணி இன்னைக்கு லீவு லெட்டர் ஆஃபீஸ்ல குடுத்தரச் சொல்லி நிவேதிதா மேடம்கிட்டே குடுக்கச் சொன்னாங்க..! அப்புறம் ஏதோ பலகாரம் செஞ்சேன்னு குடுத்துவிட்டாங்க" என்று ஒரு டிஃபன் பாக்ஸை நீட்டினான்.

"நல்லதுப்பா! உட்காரு!" என்றவர் "இந்தா நிவேதிதா.." என்று குரல் கொடுத்தார்.

நிவேதிதா உள்ளே இருந்து வந்தாள். அறவாழியைப் பார்த்தவுடன் முகம் மலர்ந்தாள்.

"அறவாழி..! வா.. வா..!" என்று உற்சாகமாக வரவேற்றாள். மறுபடியும் வெள்ளியங்கிரியிடம் சொல்லிய அதே விஷயங்களைச் சொன்னான்.

நிவேதிதா டிஃபன் பாக்ஸை வாங்கிக் கொண்டாள்.

"உட்காருப்பா..! அப்பாகிட்டே பேசிகிட்டிரு" என்று உள்ளே போனாள்.

"அப்புறம்.. என்ன வேலைப்பா.. செய்யறே?" என்றார் வெள்ளியங்கிரி.

"நான் ஒரு டிராவல்ஸ் கம்பெனியில ஒர்க் பண்றேன். பெரிய கம்பெனி. தமிழ்நாட்டோட முக்கியமான நகரங்கள்ல கிளையிருக்கு..! இங்க கோயம்புத்தூர் பிராஞ்சில அசிஸ்டென்ட் மேனேஜரா இருக்கேன்" என்றான்.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்" என்றார் வெள்ளி யங்கிரி.

நிவேதிதா சூடான காஃபியுடன் வந்தாள். அற... கையில் வாங்கிக் கொண்டான். அதே நேரம் ஜெய... தனைத் தூக்கிக் கொண்டு வந்து டைனிங் டேபிள்... சேரில் மேல் நிறுத்தி அவன் தலையைத் துவட்டின... குகப்பிரியா.

"ஹை! காட்பரீஸ் அங்கிள்" என்று ஜெயந்த... அடையாளம் கண்டு கொண்டான்.

"ம்..! சமத்தாத் துடைச்சிட்டு வா..! கைவசம் இருக்கு... தர்றேன்" என்று சிரித்தான் அறவாழி.

தங்கள் முந்தைய சந்திப்பைப் பற்றி ஏற்கனவே சகோ... தரியிடம் சொல்லியிருந்தாள் குகப்பிரியா.

"ஆமடா! இதெல்லாம் நல்லா ஞாபகம் வச்சுக்... வியே.." என்று சிரித்த நிவேதிதா அப்பாவிடம் விவர... சொன்னாள். அவரும் சிரித்துக் கொண்டார்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தாள் "ஆமா..! என்ன... லீவு" என்றாள் நிவேதிதா.

"ஒண்ணுமில்லே! அண்ணி.. திருப்பூர் போறாங்க... அம்மா வீட்டுக்கு? இந்த வீக் எண்ட் அங்கே இருந்துட்டு வர்லாம்னு லீவு போட்டிருக்காங்க.." என்றான்.

"போயிட்டு வரட்டும்! அவனுக்கும் கொஞ்சம் ரிலீஃப்" என்று தன்னை மறந்து வாயை விட்ட நிவேதிதா நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

அறவாழிக்குக் கொஞ்சம் வலித்தது. ஆனால் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.



தனக்காக ஒரு காரணம் கண்டு பிடித்துத்தான் அண்ணி தன்னை இங்கே அனுப்பியிருக்கிறார் என்பது அவனுக்குப் புரிந்தது. ஆனாலும் அந்தச் சாக்கை வைத்துக் கொண்டு இன்னும் எத்தனை நேரம் அங்கே இருப்பது என்று அவனுக்குப் புரியவில்லை.

கொஞ்ச நேரம் கழித்துப் புறப்பட்டான். இனிமேல் எந்தச் சாக்கை வைத்துக் கொண்டு சந்திப்பது என்று எண்ணிக் கொண்டே வெளியில் நகர்ந்தான்.

"பையன் ரொம்ப நல்ல பையனா இருக்கான் இல்ல" என்று வெள்ளியங்கிரி சொல்வது காதில் விழவும் கொஞ்சம் நிம்மதியானான்.

எப்படி எந்தச் சாக்கை வைத்துக் கொண்டு சந்திக்கப் போகிறோம் என்பது போக ஒரே மாதத்திற்குள்ளாக தானும் குகப்பிரியாவும் அடிக்கடி சந்தித்துக் கொள்ளப் போகிறோம் என்பது அப்போது அவனுக்குப் புரிய வில்லை.

* * *

"வாங்க..! வாங்க..!" என்று உற்சாகமாக புரோக்கரை வரவேற்றார் தெய்வநாயகி.

புரோக்கர் கண்ணுசாமியும் வாயெல்லாம் பல்லாக உள்ளே வந்தார்.

"அம்மா..! நல்லா யோசிக்கணுங்க..! என்னா.. மகனும் மருமகளும் ஒத்துக்கலேன்னா.. விவகாரம் வேற மாதிரி யாப் போயிடும். அதுலயும் உங்க மருமக புகார் குடுத் தால் பெரிய பிரச்சினையாயிடும்" என்றார் கொஞ்சம் பயத்துடன்.

"இத பாருங்க! பொண்ணு வீடு மட்டும் ஸ்ட்ராங்கா நின்னாப் போதும் மத்ததெல்லாம் நான் பாத்துக்கறேன்" என்றார் தெய்வநாயகி.

சுந்தரவடிவேலு ஒன்றுமே பேசவில்லை! புரோக்கர் அவரிடம் "அய்யா! நீங்க ஒண்ணுமே பேசலையே" என்றார்.

"அதான்.. எல்லாம் அவளே பேசறாளே.." என்றார் பட்டும் படாமலும்.

சுந்தரவடிவேலுக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை. ஆனால் 'எனக்கும் பேரப்பிள்ளையைப் பாக்கறதுக்கு ஆசையிருக்காதா' என்று அழுது, புலம்பிக் கொஞ்சமாகக் கரைத்து வைத்திருந்தார் தெய்வநாயகி.

"அவருக்குக் கொஞ்சம் வருத்தம்தான் புரோக்கரய்யா! ஆனா.. அப்படிப் பாத்தா முடியுமா..? எல்லாத்தையும் சம்மதிக்க வைக்க வேண்டியது என் பொறுப்பு. ரெண்டு வீட்டுக்கும் சம்மதம்ங்கற பாயிண்ட் வரட்டும் அந்த ஸ்டேஜ்ல எல்லாத்தையும் நான் சம்மதிக்க வைக்கறேன்" என்றார் தெய்வநாயகி உறுதியாக.

"பொண்ணு பேரென்ன?" என்றார் தெய்வநாயகி.

"பொண்ணு.. பேரு.. ஸ்மிதா.." என்றார் கண்ணுசாமி.

"என்னமோ.. தஸ்ஸுன்னு, புஸ்ஸுன்னு பேர் வச்சுக்கறாங்க.. எத்தனை வயசு?"

"இருபத்தியாறாச்சு..! கொஞ்சம் தோஷ ஜாதகம் ஆனா.. உங்க பையனோட ஜாதகத்தோட ரொம்பப் பொருந்திப் போகுது. அதான் தைரியமா இறங்கறாங்க" என்றார்.. கண்ணுசாமி.



"நல்லது."

"அப்புறம்.. நகை.. கிகைன்னு.." என்று கண்ணுசாமி ஆரம்பிக்க தெய்வநாயகி இடைவெட்டினார்.

"அதான்.. வசதியில்லாத குடும்பமாச்சே.. அவங்ககிட்டே போய் நகை கேட்கலேன்னா என்ன? இந்த சித்ரா மாதிரி குடும்பன்னாத்தான் யோசிக்கணும்" என்றார் தெய்வநாயகி.

சுந்தரவடிவேலு ஒன்றுமே பேசவில்லை. எப்படியும் அது நடக்கப் போவதில்லை என்று ஒரு குரல் சொன்னது அப்படி மீறி நடக்க வேண்டும் என்று இருந்தால் ஆண்டவர் சித்தம்! யாரால தடுக்க முடியும் என்று தன் கையாலாகாத் தனத்துக்கு வேதாந்தத் திரையிட்டுக் கொண்டார் சுந்தரவடிவேலு.

கண்ணுசாமியோடு உற்சமாகத் திட்டம் போட்டார் தெய்வநாயகி. அது மட்டுமில்லாமல் அடுத்த பத்து நாட்களில் மெது மெதுவாகக் காயும் நகர்த்தினார்.

"எம்மா..! நீ வேணுணா.. ஒரு மாசம் உங்கம்மா வீட்ல இருந்துட்டு வாயேன்" என்றார்.

சித்ரமாலாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. உள்ளூர் இல்லையென்றாலும் ஆஃபீசுக்கு வந்து போகும் தூரத்தில்தான் பிறந்த வீடு என்பதால் அம்மா வீட்டிலிருந்து கூட ஆஃபீஸுக்கு வந்து போகலாம் என்பதால் உற்சாகமாகவே ஒத்துக் கொண்டாள்.

சுந்தரவடிவேலு தான் அறவாழியிடம் சொன்னார். "டேய் அறவாழி..! இன்னும் ஒரு மாதத்துக்கு நமக்கு நாக்குக்கு ருசியாக் கிடைக்காது போல இருக்கு" என்று.

அறவாழி சிரித்தான். "விடுங்கப்பா! அண்ணி நிம்மதியா ஒரு மாசம் இருந்துட்டு வரட்டும்" என்றான்.

அந்த நேரத்தில் மகனிடம் சொல்லி விடலாமா என்று நினைத்தார் சுந்தரவடிவேலு. ஆனால் உடனே மனைவி சாமியாட்டம் போடுவாள் என்று தோன்ற அந்த எண்ணத்தை அப்படியே உள்ளே அமுக்கிக் கொண்டார்.

அறவாழிக்கு உள்ளூர அம்மா ஏதோ செய்கிறார் என்று தெரிந்தது. ஆனால் என்னவென்று கண்டு பிடிக்க முடியவில்லை. 'ஒருவேளை அம்மாவை நாமும் தவறாக நினைத்து விட்டோமோ? 'வெளியூர் போய்ப் பார்த்து விட்டுக் கொஞ்ச நாள் அந்த நினைவில் அப்படி இப்படி நடந்து கொண்டாலும் இப்போது இயல்பான பழைய குணம் வந்து விட்டது போலும்" என்று நினைத்துக் கொண்டான்.

சித்ராமாலாவும் வித விதமாக மறுத்துப் பார்த்தாள். "வேண்டாங்கத்தே..! நான் ஜஸ்ட் ஒரு வாரம் இருந்துட்டு வந்தர்றேன். நீங்க தனியாக் கஷ்டப்படுவீங்க" என்றாள்.

"என்னத்தைத் தனியாக் கஷ்டப் படப் போறேன். அறவாழி ஹெல்ப் பண்ணுவான். வேலைக்காரி இருக்காளே. அப்புறம்.. என்ன?" என்று மாமியார் தெம்பாகப் பேசவும் அவளுக்கே ஆச்சரியமாகப் போய் விட்டது.

ஒரு வழியாக மனம் தேறிக் கொண்டு புறப்பட்டாள். ஆனால் தெய்வநாயகி விளையாட்டுப் போல் காரியங்களை நடத்திக் கொண்டிருக்கிறார் என்றும் விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்றும் சுந்தரவடிவேலுக்குப் புரிந்தது. சொல்லிக் கேட்கப் போவதில்லை பார்க்கலாம். விஷயம் கை மீறும்போது நாம் இறங்கிக் கொள்ளலாம் என்று முடிவெடுத்துக் கொண்டார்.



அவரது கணக்கையும் மீறிக் காரியங்கள் நடக்கப் போகின்றன என்று அப்போது அவருக்கும் புரியவில்லை.

* * *

"அம்மா.. இப்ப.. என்ன எனக்குக் கொஞ்சம் வயசு கூடிப் போச்சு. அதுக்காக இப்படி ஒரு மாப்பிள்ளை பாக்கணுமா?" என்று கேட்டாள் ஸ்மிதா.

"எங்களுக்கு மட்டும் இப்படி ஒரு மாப்பிள்ளை பாக்கணும்னு ஆசையா.. என்ன? ஆனா.. வேற வழியில்லே" ஸ்மிதா கோபமாக அமர்ந்து கொண்டாள்.

"அப்படியாவது நான் கல்யாணம் பண்ணிக்கலைன்னா.. என்ன?" என்று கேட்டாள்.

"என்னடி பேசறே.. நீ எங்கப்பன் நூறு பவுன் போட்டாரு. இந்த வீட்டையும் குடுத்தாரு. உங்க அப்பன் என்ன பண்ணினார் தண்ணி, சீட்டுன்னு எல்லாப் பழக்கமும் இருந்துச்சு. எல்லாத்தையும் முடிச்சுக் கட்டினார். ஏதோ வீடு என் பேர்ல இருந்ததாலே எல்லா அடி உதையையும் பொறுத்துக்கிட்டு இந்த வீட்டைக் காப்பாத்தினேன். உங்கண்ணன் கல்யாணம் ஆனவுடனே கழண்டுகிட்டான். அப்புறம் உனக்கு ஏதாவது வழி பண்ணணும் இல்லே?" என்றாள் ஆவேசமாக.

அம்மா துளசிமணி சொல்கிற எல்லா விஷயமும் அவளுக்குப் புரிந்துதான் இருந்தது. அதற்காக இரண்டாம் தாரமாகப் போவதா? அவளால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

"சரிம்மா..! எப்படியும் நான் சொல்றதை நீ கேக்கப் போறதில்லே..!" என்றாள்.

''அது சரி..! படிக்கிற காலத்துல நான் சொன்னதைக் கேட்டியா! ஒரு டிகிரியாவது முடிச்சு வைடி.. எதிர்காலத்துல உனக்கு உதவும்னா அப்பப் புரிஞ்சுக்கலையே.. நீ!'' என்று அம்மா சரியான வீக் பாயிண்டில் அடித்தாள்.

அதற்குப் பிறகு ஸ்மிதாவுக்குப் பேசுவதற்கு எதுவுமே இருக்கவில்லை.

''சரி.. அப்பப் புரியலை! இப்பப் புரியுது! நான் வேன்னா.. பிரைவேட்டாப் படிச்சுக்கறேன்.''

''டூ லேட்.. அம்மிணி'' என்றாள் அம்மா.

மனம் நொந்து போனவளாக ''சரி..! நான் கொஞ்ச நேரம் வெளியே போயிட்டு வர்றேன்.''

''எங்கே போறே?'' என்றாள் அம்மா.

''எங்கே போவேன்? கோயிலுக்குத்தான்'' என்று புறப்பட்டாள் ஸ்மிதா.

'பக்கத்தில் இருக்கிற கோவில் வேண்டாம்' என்று எண்ணியவள் வடவள்ளி ரோட்டில் இருக்கும் பஞ்சமுக ஆஞ்சநேயர் கோவிலுக்குப் போகத் திட்டம் போட்டாள்.

பஞ்சமுகங்களுடன் கூடிய ஆஞ்சநேயர் கொஞ்சம் உயரமாகவே இருந்தார். மனமாரப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

''தைரியத்துக்கு அனுமனைத்தான்டி கும்பிடணும்'' என்று அம்மா அடிக்கடி சொல்லுவார். அம்மாவும் பாவம் அப்பாவிடமும் அண்ணனிடமும் மிகவும் கஷ்டப்பட்டு விட்டார்.

அப்பா பொறுப்பில்லாமல் எல்லாக் கெட்ட பழக்கங்களும் இருப்பிடமாக இருந்தாரென்றால் அண்ணன்



எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லாமலே பொறுப்பில்லாதவனாக இருந்தான்.

பிரைவேட் கம்பெனி என்றாலும் நல்ல வேலை கிடைத்தது. முதல் வேலையாக மாமா பெண்ணையே காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டான். மிகவும் சௌகரியமாக மாமனார் வீட்டில் போய் செட்டிலாகி விட்டான். அவனது மாமனார் துளசிமணியின் சொந்த சகோதரர்தான் சீனிவாசன் என்று பெயர். மகேந்திரன் அந்த வீட்டு மாப்பிள்ளையாகப் போவதற்கு முன்பாகவாவது அவர் சில உதவிகள் செய்து கொண்டிருந்தார். மகேந்திரன் போய் அதையும் கெடுத்தான்.

''சும்மாயிருங்க மாமா! நீங்க எத்தனை குடுத்தாலும் அவங்களுக்குப் பத்தாது. எல்லாத் தப்பும் அம்மா மேல தான். அவுங்கதானே அப்பாவைத் திருத்திக் கொண்டு வந்திருக்கணும். போதும் மாமா செஞ்சதெல்லாம்..'' என்று தடுத்து விட்டான்.

மருமகனுக்குத் தெரியாமல்தான் வந்து ஏதாவது உதவிகள் செய்து விட்டுப் போவார். ''அப்படியாவது ஹெல்ப் வாங்கணுமா?'' என்று ஸ்மிதா அம்மாவிடம் கோபித்துக் கொள்வாள்.

''ஸ்மிதா ஏதோ ஒரு பள்ளிக் கூடத்தில் அட்டெண்டர் மாதிரி வேலை செய்தாள். இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தார்கள். ஆயிரத்தைநூறு ரூபாய்க்கு வீட்டுக்கு மளிகைச் சாமான்கள் வாங்கிக் கொடுப்பாள். ஐநூறு ரூபாயில் தன் செலவு போக சேமித்தாள்.

தனக்கு இந்தக் கல்யாணம் ஆகி விட்டால் அம்மா பாவம் மளிகை சாமானுக்குக் கூடத் திண்டாடுவாங்க

"அது சரி..! படிக்கிற காலத்துல நான் சொன்னதை கேட்டியா! ஒரு டிகிரியாவது முடிச்சு வைடி.. காலத்துல உனக்கு உதவும்னா அப்பப் புரிந்... கலையே.. நீ!" என்று அம்மா சரியான வீக் பாயின்... அடித்தாள்.

அதற்குப் பிறகு ஸ்மிதாவுக்குப் பேசுவதற்கு எதுவு... இருக்கவில்லை.

"சரி.. அப்பப் புரியலை! இப்பப் புரியுது! நா... வேண்ணா.. பிரைவேட்டாப் படிச்சுக்கறேன்."

"டூ லேட்.. அம்மிணி" என்றாள் அம்மா.

மனம் நொந்து போனவளாக "சரி..! நான் கொஞ்ச நேரம் வெளியே போயிட்டு வர்றேன்."

"எங்கே போறே?" என்றாள் அம்மா.

"எங்கே போவேன்? கோயிலுக்குத்தான்" என்று புறப்பட்டாள் ஸ்மிதா.

'பக்கத்தில் இருக்கிற கோவில் வேண்டாம்' என்று எண்ணியவள் வடவள்ளி ரோட்டில் இருக்கும் பஞ்சமுக ஆஞ்சநேயர் கோவிலுக்குப் போகத் திட்டம் போட்டாள்.

பஞ்சமுகங்களுடன் கூடிய ஆஞ்சநேயர் கொஞ்சம் உயரமாகவே இருந்தார். மனமாரப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

"தைரியத்துக்கு அனுமனைத்தான்டி கும்பிடணும்" என்று அம்மா அடிக்கடி சொல்லுவார். அம்மாவும் பாவம் அப்பாவிடமும் அண்ணனிடமும் மிகவும் கஷ்டப்பட்டு விட்டார்.

அப்பா பொறுப்பில்லாமல் எல்லாக் கெட்ட பழக்கங்களும் இருப்பிடமாக இருந்தாரென்றால் அண்ணன்



எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லாமலே பொறுப்பில்லாதவனாக இருந்தான்.

பிரைவேட் கம்பெனி என்றாலும் நல்ல வேலை கிடைத்தது. முதல் வேலையாக மாமா பெண்ணையே காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டான். மிகவும் சௌகரியமாக மாமனார் வீட்டில் போய் செட்டிலாகி விட்டான். அவனது மாமனார் துளசிமணியின் சொந்த சகோதரர்தான் சீனிவாசன் என்று பெயர். மகேந்திரன் அந்த வீட்டு மாப்பிள்ளையாகப் போவதற்கு முன்பாக வாவது அவர் சில உதவிகள் செய்து கொண்டிருந்தார். மகேந்திரன் போய் அதையும் கெடுத்தான்.

"சும்மாயிருங்க மாமா! நீங்க எத்தனை குடுத்தாலும் அவங்களுக்குப் பத்தாது. எல்லாத் தப்பும் அம்மா மேல தான். அவுங்கதானே அப்பாவைத் திருத்திக் கொண்டு வந்திருக்கணும். போதும் மாமா செஞ்சதெல்லாம்.." என்று தடுத்து விட்டான்.

மருமகனுக்குத் தெரியாமல்தான் வந்து ஏதாவது உதவிகள் செய்து விட்டுப் போவார். "அப்படியாவது ஹெல்ப் வாங்கணுமா?" என்று ஸ்மிதா அம்மாவிடம் கோபித்துக் கொள்வாள்.

"ஸ்மிதா ஏதோ ஒரு பள்ளிக் கூடத்தில் அட்டெண்டர் மாதிரி வேலை செய்தாள். இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தார்கள். ஆயிரத்தைநூறு ரூபாய்க்கு வீட்டுக்கு மளிகைச் சாமான்கள் வாங்கிக் கொடுப்பாள். ஐநூறு ரூபாயில் தன் செலவு போக சேமித்தாள்.

தனக்கு இந்தக் கல்யாணம் ஆகி விட்டால் அம்மா பாவம் மளிகை சாமானுக்குக் கூடத் திண்டாடுவாங்க

என்று நினைத்தபோது அம்மாவின் மேல் அவளுக்கு பரிதாபம் தோன்றியது.

கோவிலுக்கு வெளியே வந்தவள் அப்போது தான் தன் பள்ளித் தோழியான அந்தப் பெண்ணைப் பார்த்தாள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகையுடன் ''ஹேய்'' என்று கத்திக் கொண்டு நெருங்கினார்கள்.

# 6

அறவாழிக்கு அந்த வாரத்தில் தலைக்கு மேல் வேலை இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். அலுவலகத்தில் உடன் பணியாற்றுகிறவர்களிடம் கூட அவன் வேடிக்கையாகச் சொன்னான்.

''ஏண்டா.. பறக்கறே? அப்படீன்னு சாதாரணமாகக் கேட்பாங்க! அப்படி என்னடா தலைக்கு மேலே வேலை அப்படீம்பாங்க! உண்மையாவே நமக்குத் தலைக்கு மேல வேலைதான். அது மட்டுமில்லாம பறந்து பறந்து தான் வேலை செய்யணும்'' என்று.

மிகவும் கண்டிப்பானவர் என்று பெயர் பெற்ற அவர்களின் எம்.டி. கூட ''சும்மாயிரப்பா.!'' என்று செல்லமாகத்தான் திட்டுவார். அறவாழி இருந்தாலே அங்கே சிரிப்பும் கலகலப்புமாக இருக்கும். ஆனால் ''என்னப்பா.. சும்மா சிரிச்சுகிட்டுப் பொழுதைப் போக்கறீங்க?'' என்று யாரும் கடிந்து கொள்ளவும் முடியாது.

''அந்த ஃபைல்.. இந்த ஃபைல்'' என்று எந்த ஃபைலைக் கேட்டாலும் கிடைக்கும். வேலையும் வேலையாக நடந்து விடும்.



''ஃபார்வர்ட் டிராவல்ஸ் கம்பெனி வளர்ந்து வரும் கம்பெனியாக இருந்தது. முக்கியமாக அவர்கள் நடுத்தரக் குடும்பங்களுக்கான வெளிநாட்டுப் பயணங்களை ஏற்பாடு செய்வதில் ஆர்வம் காட்டினார்கள். அதுவும் கூட அறவாழி போன்ற இளைஞர்கள் கொடுத்த ஐடியா தான்.

மேல் தட்டு மக்களுக்கு விமானப் பயணம் என்பது அடிக்கடி நடக்கிற விஷயம். ஆனால் அதுவே நடுத்தர மக்களுக்கு ஒரு 'காஸ்ட்லி கனவு' என்பார்களே அது போன்ற எட்டாத விஷயம்.

''சார்...'' ஒரு பி.எஃப். பணம் வருது அல்லது ஏதோ அரியர் வருதுங்கறப்ப அவங்க அதைப் பயன்படுத்தி ஏதோ ஒரு வெளிநாட்டுக்குப் போயிட்டு வந்தா எவ்வளவு சந்தோஷப்படுவாங்க'' என்று சொல்லுவான்.

அவர்கள் கம்பெனியில் அவர்களது கருத்துக்களை ஏற்றுக் கொண்டார்கள். அறவாழி அதற்கு சொல்லுவான். ''முத முதலா.. தவணை முறையில பொருட்களை விக்க ஏற்பாடு செஞ்சவங்களோட சிந்தனையைப் பற்றி நினைச்சுப் பாருங்க! இந்த மாதிரி சிந்தனைகளைத்தான் நாம இன்னொவேஷன்னு சொல்றோம்'' என்பான்.

அறவாழியின் புதிது புதிதான கருத்துக்களினால் கம்பெனியும் வளர்ந்தது என்பதால் கம்பெனியில் செல்வாக்கும் அவனுக்கு அதிகம்.

அடுத்த மாதத்தில் இருக்கப் போகிற அந்த மலேசியா பயணத்துக்காக அவன் நிறைய ஏற்பாடு செய்ய

''எங்க வச்க?'' என்றாள்.

''மருதமலை அடிவாரத்துக்கு வந்துருங்க.. வச்சுப் பேசுவோம்'' என்றான்.

இந்த ஏற்பாட்டை முடிவு செய்ததற்குப் பிறகுதான் குகப்பிரியாவின் மனம் தேறியது.

* * *

அன்றைக்கு முதல் நாள்!

''ஹேய்..! குக்கூ'' என்று உற்சாகமாகத் தன்னிடம் வந்து பேசிய.. ஸ்மிதாவின் நினைவு வந்தது.

''ஸ்மிதாக்கா..!'' என்று அவளும் உற்சாகமாகப் பேசினாள். குகப்பிரியாவுக்கு குக்கூ என்று பெயரிட்டு அழைக்க ஆரம்பித்ததே அவள்தான்.

''அக்கா.. இதென்ன.. பேரு! குக்கூன்னு'' என்று அவள் கேட்டால் ''பறவை மாதிரி சுதந்தரமா இருக்கே.. இனிமையாப் பேசறே.. அதான்'' என்பாள் ஸ்மிதா.

''போங்கக்கா.. வேற மாதிரிக் கூப்பிடுங்க'' என்றாள் குகப்பிரியா.

''வேற மாதிரி.. ம்..! ''குக்'' அப்படீன்னு கூப்பிடலாம் என்று கேட்டால் அதுக்கு இதுவே தேவலை..!'' என்று சிரிப்பாள்.

உண்மையில் ஸ்மிதாவும், குகப்பிரியாவின் சகோதரியும் தான் பள்ளியில் ஒரு வகுப்புத் தோழிகள். ஆனால் ஸ்மிதாவும், குகப்பிரியாவும் வாலிபால் விளையாட்டில் இருந்தார்கள். சீனியர்களுக்கான டீமில் ஸ்மிதாவும், ஜூனியர்களுக்கான டீமில் குகப்பிரியாவும் இருந்தார்கள்.



குகப்பிரியாவை எல்லாருக்குமே மிகவும் பிடிக்கும் ஸ்மிதாவுக்கும்தான்.

''அக்கா..! நல்லாருக்கீங்களா? அப்புறம்...'' என்றாள் குகப்பிரியா.

''நல்லாத்தான் இருக்கேன்!'' என்றாள் ஸ்மிதா. குரலில் சலிப்புத் தெரிந்தது.

''எங்கக்கா..! ஒரு மாதிரி சொல்றீங்க?''

''என்னத்தைச் சொல்வது எங்கம்மா அப்பத் தலையால தண்ணி குடிச்சாங்க..! ஒழுங்காப் படிடன்னு. அது தான் வாழ்க்கைக்கு உதவும்னு. அப்ப எனக்கு அது புரியலே! எங்க அம்மாவாவது எனக்குக் குடும்பக் கஷ்டத்தை முழுமையாப் புரிய வச்சிருக்கணும். அப்ப ஏதோ காப்பாத்தற மாதிரி நினைச்சுக்கிட்டு எதையும் சொல்லலே! செல்லமா வளத்தாங்க. இன்னைக்கு செல்லாக் காசா நிக்கறேன்'' என்றாள்.

பொதுவாக ஸ்மிதா அப்படியெல்லாம் புலம்பமாட்டாள். ஆனால் இன்றைக்கு மனம் நொந்திருந்தாள். சின்னப் பெண்ணிடம் போய் இப்படிப் புலம்புகிறோமே என்று கூட யோசிக்கவில்லை. ஆனால் அன்றைக்குத் தன் மனத்தில் இருந்ததையெல்லாம் கொட்டிவிட வேண்டும் என்று தோன்றியது.

குகப்பிரியாவுக்கு பாவமாக இருந்தது.

''என்னக்கா.. மனசுல ஏதாவது சங்கடமா? எங்கயாவது உட்கார்ந்து பேசலாமா?'' என்றாள்.

''ஆமாடி..! குக்கூ! எனக்கும் கொஞ்சம் பேசினாத்தான் தேவலை போலிருக்கு'' என்றாள் ஸ்மிதா.

"வாங்க வண்டியில உட்காருங்க!" என்றாள்.

"சித்தி.. நானு..?" என்றான்.

ஜெயந்தனை அழைத்துக் கொண்டுதான் கோவிலுக்கு வந்திருந்தாள் குகப்பிரியா. "வண்டியில போலாம் சித்தி.." என்று துளைத்தெடுத்தான் ஜெயந்தன்.

அந்த மாதிரி சமயங்களில் பெரும்பாலும் கோவில்களைக் குறி வைத்துப் போவாள் குகப்பிரியா. கோவிலுக்குப் போனாற் போலவும் ஆயிற்று. அவனை வண்டியில் கூட்டிக் கொண்டு போனாற் போலவும் ஆயிற்று என்பது அவளது எண்ணம்.

சில வேளைகளில் அவளது அம்மாவோ.. சித்ரா... தரியோ என்று யாராவது ஒருவர் வருவார்கள். ஆனால் இன்றைக்கு அக்கா இன்னும் வந்து சேரவில்லை.

இளமாலை நேரம்! அவளுக்கும் எங்காவது போய் விட்டு வரலாம் போல இருந்தது.

'சித்ரமாலா அக்கா வீட்டிற்குப் போகலாமா?' என்று யோசித்தாள். 'அவர்கள்தான் வெளியூருக்குப் போயிருக்கிறார்களாமே..?' என்று எண்ணிக் கொண்டு தன் திட்டத்தை மாற்றிக் கொண்டாள்.

அப்படித்தான் அவள் கோவிலுக்கு வந்தது! இங்கே ஸ்மிதாவைப் பார்த்ததில் அவளுக்கு சந்தோஷம்தான்! ஆனால் ஸ்மிதாவின் சோக முகத்தைப் பார்த்தவுடன் அவளுக்கு அப்படியே விட்டு விட்டுப் போக மனம் ஒப்பவில்லை. அதனால்தான் பேசலாம் என்ற யோசனையை முன் வைத்தாள்.

மருதமலை அடிவாரத்துக்குப் போகிற சாலையில் போய் ஆள் நடமாட்டம் இருக்கிற இடமாகப் பார்த்து ஆனால் ஒதுக்குப் புறமாக அமர்ந்தார்கள்.



தன் சகோதரிக்கு நான்கு வயதில் ஒரு குழந்தையே இருக்கையில் ஸ்மிதாவுக்கு இன்னும் திருமணமே நடக்கவில்லை என்பது அவளுக்கும் தெரியும். ஆனால் அதற்கு ஏதோ காரணம் இருக்கும் போலத் தெரிகிறதே?

குகப்பிரியா யோசனையுடன் வண்டியை நிறுத்தினாள். ஜெயந்தனுக்குத் தின்பண்டம் கொடுத்து தங்கள் பார்வையில் இருக்கிற மாதிரி விளையாடவிட்டு விட்டு ஒரு சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தார்கள்.

"என்னக்கா.. மனசில சங்கடம்?" என்றாள் குகப்பிரியா.

ஸ்மிதா பொரிந்து தள்ளி விட்டாள். "தங்களுக்கு எந்த வழியும் செய்யாமல் தனக்கு மட்டும் பாதுகாப்பு தேடிக் கொண்டு விட்ட அண்ணன். பொறுப்பில்லாத அப்பா..! தனக்குத் திருமணமே வேண்டாம் என்று சொன்ன போதும் எப்படியாவது தன்னை இரண்டாம் தாரமாகவாவது தள்ளி விட முயற்சிக்கும் அம்மா.." என்று அவள் தனது சோகத்தையெல்லாம் கொட்டித் தீர்த்தாள்.

குகப்பிரியா குறுக்கிடாமல் கேட்டாள்! "சில நேரங்களில் நாம் அப்படிக் கொட்டும் போதே மனத்துக்குள்ளே சில தீர்வுகள் கிடைக்கும் அல்லது மனம் தாங்கவொண்ணாத் துக்கத்தில் இருந்து மீளும்."

பேசப் பேச ஸ்மிதா சட்டென்று நிறுத்தினாள்.

"ஹேய்..! நீ பாவம் சின்னப் பொண்ணு! தேவையில்லாம நான் உன்னைப் போட்டுக் குழப்பறேனோ..?" என்றாள்.

"ஆமா..! வாயில விரலை வச்சாக் கடிக்கத் தெரியாத பாப்பா. நானும் இருபத்திரண்டு வயசை முழுங்கியாச்சுக்கா! உலக நடப்பு எல்லாம் ஏதோ கொஞ்சம்

புரியத்தான் செய்யும். தைரியமா சொல்லுங்க'' என்றாள் குகப்பிரியா.

மறுபடியும் தன் கதையைத் தொடர்ந்து சொல்லி முடித்தாள் ஸ்மிதா.

''பேரு ஒண்ணு தான்.. மாடர்ன்! வேற ஒரு விஷயமும் இல்லே! தலையெல்லாம் மண்ணுதான்'' என்றாள் ஸ்மிதா.

குகப்பிரியா சிரித்தாள். அக்கா.. கடவுள் படைப்பிலே யாருமே முட்டாள்கள் கிடையாது. நீங்க அந்த எம்ப் ராய்டரி வொர்க் எல்லாம் நல்லாப் பண்ணுவீங்கதானே! அது மாதிரி ஏதாவது கிளாஸ் எடுங்க'' என்றாள் குகப் பிரியா.

''அதெல்லாம் அப்புறம்? முதல்ல இந்தச் சிக்கலுக்கு விடிவு சொல்லு..'' என்றாள் ஸ்மிதா.

''அக்கா..! உங்க சிக்கல் என்ன? கல்யாணமே வேண் டாமா? இல்லே இரண்டாம் தாரமா.. வேண்டாமா?'' என்றாள்.

''இப்போதைக்குக் கல்யாணத்தைப் பத்தி ஒண்ணும் எனக்கு எதிர்ப்பு இல்லே..! ஆனா இரண்டாம்தாரமா நிச்சய மாப் போக மாட்டேன். தெரியுமா? ஃபர்ஸ்ட் வைப் இருக் காங்களாம். கல்யாணமாகிப் பத்து வருஷம் ஆச்சாம்! குழந்தையில்லேங்கறதுக்காக மறு கல்யாணமாம் நாளைக்கே அந்த பர்ஸ்ட் வைஃபுக்கும் குழந்தை பிறந்தா என்ன செய்வாங்களாம்? இது என்னமோ ஆகற காரிய மாத் தெரியலே!''

''அது கரெக்ட்தான்க்கா..! இன்னொன்று தெரியுமா? ஃபர்ஸ்ட் வைஃப் இருக்கறப்ப என்னதான் சம்மதம் குடுத் தாலும் இரண்டாம் கல்யாணம் செல்லாது தெரியுமா?''



''ஓஹோ.. இது வேற இருக்கோ?''

''ஆமாக்கா..!'' என்றாள் குகப்பிரியா.

''இதெல்லாம் இருக்கட்டும்டி..! ஒரு வைஃப் இருக்கறப்ப.. இன்னொருத்தியைப் பண்ணிக்கறேன்னு ஒருத்தர் சொன்னா.. அவனை எப்படி மனுஷனா மதிக் கறது! நாளைக்கு என்னையும் விட்டுட்டு இன்னொருத் தியை தேட மாட்டான்னு என்ன நிச்சயம்! ஒத்து வரவே வராது'' என்றாள் தலையைக் குலுக்கிக் கொண்டு.

''கரெக்ட்டுக்கா..'' என்றாள் குகப்பிரியா. தொடர்ந்து ''ஒத்துக்காதீங்கக்கா..'' என்றாள்.

''எங்கம்மா.. புரிஞ்சுக்கவே மாட்டேங்கறாங்க! அது மட்டும் இல்லைடி! இப்ப வரைக்கும் மாப்பிள்ளையோட அம்மா.. அப்பாதான் அதிலயும் அப்பா கூட இல்லே. அம்மாதான் பேசறாங்க! இப்போதைக்கு மாப்பிள்ளை மும்பையிலே இருக்கிறாராம். வைஃப் கோயமுத்தூர்ல கவர்ன்மென்ட் வேலையாம். நான் டிரான்ஸ்ஃபரபிள் ஜாபாம். மாப்பிள்ளையோட நான் மும்பையாம். அந்தம்மா.. இங்கேயாம்!'' என்றாள்.

சட்டென்று குகப்பிரியாவுக்கு அது உதித்தது. 'ஸ்மி தாக்கா சொல்கிறதையெல்லாம் பார்த்தால் சித்ரமாலாக் காவாக இருக்குமோ' என்று தோன்றியது.

''ஏங்கக்கா.. மாப்பிள்ளை பேரு என்னக்கா?'' என்றாள்.

''பேரு என்னமோ.. வித்தியாசமா இருந்துச்சடி. இந்திர ஜித்தோ.. அமர்ஜித்தோ என்னமோ சொன்னாங்களே! போட்டோவெல்லாம் பாக்கலே!'' என்றாள்.

குகப்பிரியா உண்மையாகவே அதிர்ந்து போனாள். நிவேதிதா அக்கா கூட சமீப காலமாக சித்ரமாலாவின்

மாமியார் நடந்து கொள்ளும் விதம் சரியில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தாள். ஆனால் அதற்காக இப் படியா?

அமர்ஜித் இதற்கு ஒப்புதல் கொடுத்திருப்பாரா? கண்டிப்பாக இல்லையென்று தோன்றியது. அறவாழி சாருக்குத் தெரியுமா?

நிச்சயமாக இருக்காது.

சட்டென்று குகப்பிரியா உற்சாகமாகச் சொன்னாள்.

''ஸ்மிதாக்கா, கவலையே படாதீங்க! அமர்ஜித்தும், சித்ரமாலா அக்காவும் எங்களுக்கு ரொம்ப வேண்டிய குடும்பம். எனக்குத் தெரிஞ்சவரை அமர்ஜித் அங்கிள் ஒப்புதல் குடுத்த மாதிரித் தெரியலே! நான் பாத்துக் கறேன். இந்த விஷயத்தை'' என்றாள்.

''ரியலி?'' என்று உற்சாகமானாள் ஸ்மிதா.

''ஆமாக்கா..! நீங்க ஒண்ணு செய்ங்க! சம்மதம்னு சொல்லுங்க!'' என்றாள்.

''என்னடி விளையாடறியா?'' என்றாள் ஸ்மிதா.

''இல்லைக்கா! உண்மையாத்தான் சொல்றேன். சம்மதம்னு சொல்லுங்க! பாக்கலாம்! அவுங்க எவ்வளவு தூரம் போறாங்கன்னு.''

''விஷப்பரிட்சை செய்யற விஷயமாடி.. என் வாழ்க் கைடி..''

''கவலையே படாதீங்க! அந்தம்மா நினைக்கறது நடக்கவே நடக்காது! கல்யாணம் தானா நிக்கும். நீங் களும் உங்க வீட்டில நல்ல பேர் வாங்கிக்கலாம்'' என் றாள்.



''ஓஹோ! நீ அப்படி வர்றியா?''

''ஆமா..! நான் வேற விதமா இதை டீல் பண்றேன்'' என்றாள்.

அவள் தீவிரமாகத் திட்டமிடத் தொடங்கினாள். ஸ்மி தாவுக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. சிரிப்பும் வந்தது.

''ஆஹா..! ஆஞ்சநேயர்தான் எனக்கு நல்லது பண்ணி யிருக்கார்'' என்றாள்.

''ஆமாக்கா! கடவுள் சித்தம்தான்! நீங்க தைரியமா இருங்க! அனுமன் சாலீஸான்னு ஒரு தோத்திரம் இருக்கு..! அதைப் படிங்க!'' என்று பெரிய மனுஷியாக உபதேசம் செய்து விட்டுப் புறப்பட்டாள்.

தனது திட்டத்தின் முதல் படியாகத்தான் இப்போது அறவாழியைச் சந்திக்க வந்திருந்தாள்.

## 7

அறவாழி முகவாய்க்கட்டையை நீவிக் கொண்டான்!

முதலில் அதிர்ச்சியாக இருந்தது. இப்போது கொஞ்சம் வடிந்து விட்டது. 'ஓஹோ..! இதுதானா விஷயம். இதனால்தான் அம்மா வலிந்து வலிந்து நயமாகப் பேசி அண்ணியை ஒரு மாதம் ஊருக்கு அனுப்பினாரா?' என்று எண்ணிக் கொண்டான்.

அவனுக்கு சிரிப்பதா அழுவதா என்றே தெரிய வில்லை. பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகம் இருண்டு விடுமா.. என்ன? அண்ணியை ஒரு மாதம்

ளருக்கு அனுப்பி விட்டால் கல்யாணம் முடிஞ்சு விடுமா என்ன?

அப்பா எப்படிப் பேசாமல் இருக்கிறார் என்று அவனுக்குக் கோபமாக இருந்தது. அவன் சிந்தனையுடன் குகப்பிரியாவைப் பார்த்தான்.

நேற்றுப் போலவே இன்றும் மருதமலை அடிவாரத்தில் அமர்ந்து பேசலாம் என்றுதான் நினைத்தார்கள். பிறகு மனதை மாற்றிக் கொண்டு ''பிரியா! வாங்க கோவிலுக்கே போயிட்டு வந்தர்லாம்..'' என்று மலைக்குப் போனார்கள்.

படியேறிப் போய் வருவதற்கு நேரமில்லை என்பதால் தேவஸ்தானம் விடுகிற பஸ்ஸிலேயே ஏறிப் போனார்கள்.

''இங்க ஒரு சித்தர் இருந்ததாகப் பேசிக்கறாங்க'' என்றான் அறவாழி பேச்சைத் துவக்கும் விதமாக.

''ஓஹோ..!'' என்றாள் குகப்பிரியா.

முருகனைக் கும்பிட்டு விட்டு வந்து ஒரு புறமாக அமர்ந்தார்கள். மேலே இருந்து பார்ப்பதற்குக் கோயமுத்தூர் மிக அழகாகத் தெரிந்தது. எப்போதுமே அந்தக் காட்சியை ரசிப்பாள் குகப்பிரியா. இப்போதும் ஒரு ஒரிரு நிமிடம் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை. அவள் முகத்தில் தெரிகிற உணர்வுகளை அவன் ரசித்தான். பிறகு மெல்லத் தொண்டையைக் கனைத்தான். அவள் சட்டென்று திரும்பி அவனைப் பார்த்தாள்.

பிறகுதான் தனக்கும் ஸ்மிதாவுக்கும் ஆன சந்திப்பை அவள் விவரமாகச் சொன்னாள்.

அதற்குப் பிறகுதான் அவனுடைய எண்ண ஓட்டங்கள் இப்படி ஓடின.

திடீரென்று அந்த சந்தேகம் முளைத்தது. ஒருவேளை அண்ணனுக்கு இதில் உடன்பாடு இருக்குமோ? அண்ணனுடைய ஒப்புதல் இல்லாமலா இந்த அளவுக்கு அம்மா போயிருப்பார். தனது சந்தேகத்தை அவன் வாய்விட்டே சொன்னான்.

''ஏன்.. குகப்பிரியா.. ம்.. உங்க ஃபிரண்ட் என்னன்னு கூப்பிடுவாங்கன்னு சொன்னீங்க! குக்கூவா..! நானும் அப்படியே கூப்பிடவா?'' என்றான்.

அவள் வெட்கத்துடன் நின்றாள்.

''ம்ஹூம்..'' என்பது போல் தலையசைத்தாள். அப்போதுதான் அவனுக்கு அது உறைத்தது. என்ன இருந்தாலும் ஒரு இளம் வயதுப் பையன் அப்படியெல்லாம் உரிமையாகக் கூப்பிடலாமா? என்று.

''ஓ..கே.. ஓ..கே.. சரி.. சரி..'' என்றான்.

''பாவங்க ஸ்மிதாக்கா..!'' என்றாள்.

அப்போது அவன் சொன்னான்.

''எனக்கென்னமோ.. அண்ணன் அப்படியெல்லாம் முட்டாள்தனமா முடிவெடுக்கறவன் இல்லே! அதை முதல்ல வெரிஃபை பண்ணுவோம். அப்புறம் உங்க ஃபிரெண்டைப் பத்திக் கவலைப்படாதீங்க! எனக்கு ஃப்ரண்ட்ஸ் வட்டம் நிறைய இருக்கு..! ஒரு மாப்பிள்ளையைப் பிடிச்சர்லாம்..'' என்றான்.

''என்ன குரங்கு பிடிக்கற மாதிரிச் சொல்றீங்க?'' என்று அவள் சிரித்தாள்.

"ஆமாங்க..! கிட்டத்தட்ட அப்படித்தான்! [illegible] யாணம்னு ஆனா.. அப்புறம் ஆட்றா.. ராமா..! [illegible] ராமாதானே.." என்றான்.

அவள் சிரித்தாள்.

"பாவமில்லே.. உங்களைக் கல்யாணம் செஞ்சுக்க போற பொண்ணு ரொம்ப லக்கிதான்" என்றாள்.

அவன் தொண்டைக்குள் உணர்வுப் பந்து ஒன்று எழுந்தது. மிகவும் கஷ்டப்பட்டுத் தன் உணர்வுகளை முழுமையாக வெளிப்படுத்தாமல் அடக்கிக் கொண்டான் மெல்லப் புன்னகையுடன்.

"பிரியா..! எங்க அண்ணன் சைட்ல நான் மேனேஜ் பண்ணிக்கிறேன். ரொம்ப டெலிகேட்டான விஷயம். நீங்க ஒரு ஹெல்ப் பண்ணணும்" என்றான்.

"நானா?" என்றாள்.

"ஆமா..! உங்களுக்கும் ஒரு கமிட்மெண்ட் இருக்கு மில்லே. ஸ்மிதா மேடமும் உங்க ஃபிரண்ட் எங்க அண்ணியும் உங்க ஃபிரண்ட்! அதனால ரெண்டு பேருக்கும் ஹெல்ப் பண்ண வேண்டிய அவசியம் உங்களுக்கு இருக்கில்லே..!"

அவள் யோசித்தாள்.

அவன் தொடர்ந்தான். "எங்க அண்ணிகிட்டே நான் க்ளோஸ்தான். இருந்தாலும் இந்த மாதிரி மேட்டர்ல லேடீஸ் டீலிங்தான் பெட்டரா இருக்கும்."

அவள் உண்மையென்பது போலத் தலையாட்டினாள். உடனே அவன் அந்த வாய்ப்பைப் பிடித்துக் கொண்டான்.



"சரி.. இப்படிச் செய்வோம். நான் முதல்லே அண்ணன்கிட்டே பேசறேன். இப்போதைக்கு நீங்க அண்ணி கிட்டே எதுவும் சொல்ல வேண்டாம். ஸ்மிதா மேடம் கிட்டே சம்மதம்கற மாதிரியே நடந்துக்கச் சொல்லுங்க! மேற்கொண்டு என்ன செய்யலாம்னு பாத்துக்குவோம்" என்றான்.

தீவிரமாகத் திட்டமிட்டார்கள்!

குகப்பிரியாவின் அண்ணை மிகவும் இதமாக இருந்தாலும் அம்மாவின் நடத்தை மேல் மிகவும் கோபமாகவும் இருந்தது. ஆனால் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செய்யாமல் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டிய அவசியமும் இருந்தது.

விடைபெறும் போது அடுத்து எங்கே எப்போது சந்திப்பது என்று முடிவு செய்து கொண்டார்கள்.

* * *

"ஹல்லோ..!" என்றான் அமர்ஜித்.

"அண்ணா..! என்றான் அறவாழி உற்சாகமாக.

"தம்பி.. நல்லாயிருக்கியா..!" என்றான் அண்ணன் வாஞ்சையாக.

"நல்லாயிருக்கேண்ணா.. நீ எப்ப வர்றே..?" என்றான்.

"நான் இனி நெக்ஸ்ட் மன்த்தான் வருவேன்" என்றான்.

"ஓ..!" என்றான் அறவாழி சுரத்தில்லாமல். அண்ணன் தம்பி தன்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் தான் உற்சாகமிழக்கிறான் என்று எண்ணிக் கொண்டான்.

"ஆச்சுடா! கொஞ்ச நாள்தான்! இப்பவே ஆறு மாசம் ஓடிருச்சு! வந்தர்றேன்டா" என்றான்.

''அது சரிண்ணா..! உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணுமே'' என்றான்.

''ஓஹோ.. இரு நான் வெளியே வர்றேன். நல்ல வேளை இப்ப லஞ்ச் டைம்'' என்று வெளியே வந்தான் அமர்ஜித்.

சகோதரன் மெது மெதுவாகச் சொன்ன விஷயங்களையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டான். அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஆனால் சுதாரித்துக் கொண்டான்.

''ஏன்.. தம்பி! இதெல்லாம் சித்ராவுக்குத் தெரியுமா?''

''இல்லே! தெரிஞ்சிருந்தா உன்கிட்டே சொல்லியிருப் பாங்கல்லே!''

''எந்த நம்பிக்கையிலே இப்படியெல்லாம் ஏற்பாடு பண்றாங்க..!'' என்றான் கவலையுடன்.

''எந்த நம்பிக்கையிலே! எல்லா ஏற்பாடும் செஞ்சு முடிச்சுட்டு.. அப்புறம் கால்ல கையில விழுவாங்க! இல்லே.. அப்படிப் பண்ணிக்குவோம், இப்படிப் பண்ணிக்கு வோம்னு மிரட்டுவாங்க!'' என்றான் அறவாழி.

''அது சரிடா! அப்பாவுக்கு இது தெரியுமா?''

''அதுதாண்ணா... புரியலே! அப்பா இப்படி மண்ணாந் தையா மாறிப் போவார்ன்னு நான் நினைக்கவே இல்லே?''

''சித்ரா... படிச்ச பொண்ணு! வேலைக்குப் போறா...! அமைதியானவதான். அவ பாத்து கம்ப்ளெயின்ட் குடுத்தா எல்லாரும் கம்பி எண்ணணும் தெரியுமா?'' என்றான் அமர்ஜித்.



''சேச்சே! அண்ணி அப்படியெல்லாம் பண்ணமாட் டாங்க?'' என்றான் அறவாழி.

''ஆமடா! உனக்கு அண்ணியாவும் எனக்கு வைஃபாவும் இருக்கிற வரைக்கும் பண்ணமாட்டா! முதலுக்கே மோசம் வந்தா சும்மாயிருப்பாளா?''

அறவாழி அப்போதுதான் இப்படிக் கேட்டான். ''எண்ணா...! நீ பேசறதைப் பாத்தா அண்ணி ஒத்து கிட்டா நீ சம்மதிப்பியோ...!'' என்றான்.

''போடுவேன் ரெண்டு தலையிலே! அப்புறம் நாங்க ரெண்டு பேரும் பத்து வருஷம் நடத்துன வாழ்க்கைக்கு என்ன அர்த்தம்?''

''அதானே... பார்த்தேன்'' என்று நிம்மதியானான் தம்பி!

''இத பார்றா...! அண்ணன்கிட்டே சொல்லிட்டேயில்லை. விடு..! அம்மாவுக்கு நல்லா ஒரு பாடம் கற்பிக்கறேன்'' என்றான்.

''அண்ணா!'' என்று அறவாழி ஏதோ சொல்ல அமர் ஜித் தன் தரப்பு நியாயத்தைச் சொன்னான். சற்று நேரம் பேசிய பிறகு.

''யார் மூலம் தெரிய வந்துச்சு...?'' என்று கேட்டான்.

அறவாழி குகப்பிரியா மூலம் தெரிய வந்ததைச் சொன் னான்.

''ஒஹோ... அந்த குகப்பிரியாவா?'' என்று இழுத்தான் அண்ணன். அதில் ஏதோ ஒரு அர்த்தம் இருந்த மாதிரித் தோன்றியது அறவாழிக்கு.

''எண்ணா... அப்படிக் கேட்கறே...?'' என்றான்.

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.

''இல்லே...! உங்கண்ணி ஏதோ ஜாடை மாடையா சொன்னா'' என்றான்.

''சொல்லிட்டாங்களா?'' என்றான்.

''ஆமா...! நடத்து... நடத்து...?'' என்று கேலி செய்தான் அண்ணன்.

அண்ணனுக்கு இதில் சம்மதம்தான் என்று தெரிந்த திருப்தியில் இரண்டு பேரும் மேற்கொண்டு சில திட்டங்கள் போட்டுக் கொண்டார்கள்.

அதே நேரம்!

குகப்பிரியாவும், ஸ்மிதாவும் இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தையை முடித்துக் கொண்டார்கள்.

ஸ்மிதா மீண்டும் மீண்டும் சந்தேகத்தோடு கேட்டாள்.

''பாரு! குக்கூ! நீ சொன்னதை நம்பி எங்கம்மாகிட்டே சம்மதம்னு சொல்லிட்டேன். எங்கம்மா ரொம்ப ஆர்வமா அந்த அமர்ஜித்தோட அம்மாகிட்டே பேசறேன்னுட்டுப் போயிருக்காங்க'' என்றாள் கவலையுடன்.

''விடுங்கக்கா...! ரெண்டு பேரும் திட்டம் போட்டு என்னென்னவோ செஞ்சுகிட்டிருக்காங்க! நடக்கட்டும்! கனவுலயே கோட்டை கட்டட்டும்'' என்று சிரித்தாள் குகப்பிரியா.

ஸ்மிதாவுக்கு இன்னும் கவலை தீரவில்லை. ''என்னவோ இந்தச் சின்னப் பெண்ணை நம்புகிறோமே! சரியென்று சொல்லியாகிவிட்டது'' என்ற கவலை.

''சரி... அதனால் என்ன? எப்படியும் கடைசியில் மணவறையில் உட்காரப் போவது தான்தானே! ஒன்றும் முடியாவிட்டால் கடைசியில் மாப்பிள்ளை கால்லயே விழுந்துர வேண்டியதுதான்'' என்று முடிவு செய்ததற்குப்



பிறகுதான் அவள் மனம் தேறியது. ஆனால் இந்த இரண்டு சந்திப்பிலேயே ஸ்மிதா ஒன்று புரிந்து கொண்டாள்.

குகப்பிரியா ஒன்றும் அவ்வளவு விவரமில்லாதவளாக இல்லை. அது மட்டுமில்லாமல் அந்த அமர்ஜித்தின் குடும்பத்தை முழுமையாகத் தெரிந்து வைத்திருக்கிறாள். நீண்ட நாட்கள் பழக்கம் வேறு. தெய்வம்தான் இவளைத் தன் வழியில் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. இல்லாவிட்டால் சம்மந்தமே இல்லாமல் அந்தக் கோவிலுக்கு எதற்காக குகப்பிரியா வரவேண்டும். இந்த எண்ணம் தோன்றியவுடன் அவன் மனம் முற்றிலும் தெளிவாகியது.

''அக்கா... இப்போ... நீங்க... என்னோட ஒரு இடத்துக்கு வர்றீங்க..!'' என்றாள் குகப்பிரியா.

''சரி... இப்போதைக்கு நீதான் எனக்கு ஃபுல்சப்போர்ட்... நீ என்ன சொன்னாலும் கேட்கத்தான் வேணும்...'' என்றாள் ஸ்மிதா.

இருவரும் சிரித்தார்கள்! ஆனால் புறப்பட்டுப் போனார்கள்.

''யாரைடீ... பார்க்கப் போறோம்?'' என்று கேட்டாள் ஸ்மிதா.

''அக்கா! உங்கம்மா எப்படீடி உன் மனசு திடீர்ன்னு மாறுச்சுன்னு கேட்கலையா?'' என்று கேட்டாள் குகப்பிரியா.

''ஆச்சரியம்தான்! ஆனா... யோசிச்சுப் பாத்தேன். வேற வழி ஒன்றும் தெரியலே அதான் ஒத்துக்கிட்டேன்னு சொன்னவுடனே... நம்பீட்டாங்க...!'' என்றாள்.

குகப்பிரியா தான் அறவாழியைச் சந்தித்ததையும், பேசினதையும் மட்டும் சொன்னாள். ஆனால் தங்கள் திட்டம் என்ன என்பதைப் பற்றிச் சொல்லவில்லை.

''எங்கே போறோம்?'' என்றாள்.

''எங்க வீட்டுக்கு!'' என்றாள் குகப்பிரியா.

போனார்கள்!

உள்ளே நுழையும் போது, குகப்பிரியாவின் அப்பாவின் குரல் ஒலித்தது.

''சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி...
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லையிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

இசையால் நிறைந்து ஒலித்த அந்த வேண்டுதலைக் கேட்டவுடன் சற்று நேரம் மெய்ம்மறந்து நின்றார்கள் குகப்பிரியாவும் ஸ்மிதாவும்.

''அப்பாவுக்கு மாணிக்கவாசகர் பாடல்கள்ன்னா... ரொம்ப இஷ்டம்...'' என்றாள் குகப்பிரியா.



அப்பா பாடுவதை நிறுத்தி விட்டு அவர்கள் இரு[வ]ரையும் பார்த்தார்.

''வாம்மா... ஸ்மிதா! எங்கே ரொம்ப நாளா உன்னைக் [கா]ணோம்'' என்று வரவேற்றார் அம்மா.

''அம்மா...!'' என்று ஆசையாக மகேஸ்வரியின் அரு[கி]ல் போய்க் காலில் விழுந்தாள் ஸ்மிதா.

''தெரியலம்மா! எப்படியோ விட்டுப் போச்சு! எப்ப[வ]ாவும் நானும் நிவேதிதாவும் வெளியில பாத்தா பேசிக்[கு]வோம்'' என்றாள்.

மகேஸ்வரிக்குப் புரிந்தது. 'ஸ்மிதாவுக்கு இன்னும் திருமணம் அமையவில்லை. நிவேதிதாவுக்குத் திருமணம் ஆகிக் குழந்தையும் வளர்ந்தாயிற்று! பார்க்கும் போதெல்லாம் மனதில் சங்கடம் வரலாம் என்ற எண்ணத்தில் போலும்...! அதற்கு மாறாக இந்தப் பெண் தொடர்ந்து வந்துகிட்டிருந்தா... நமக்கும் ஞாபகம் இருந்திருக்கும் நாமளாவது ஒரு மாப்பிள்ளை பார்த்திருக்கலாம்' என்று எண்ணிக் கொண்டார்.

''அப்புறம்... சொல்லு தாத்தா...!'' என்றான் ஜெயந்தன்.

''என்ன சொல்றது?'' மாணிக்கவாசகர் குதிரை வாங்க அரசன் குடுத்த காசில கோவில் கட்டிட்டாரு...'' என்றார்.

''ஐயய்யோ...'' என்றான் குழந்தை.

''சரி...! அப்புறம் சொல்றேன்...'' என்று கிளம்பிய அப்பாவும் வெளியே வந்து ஸ்மிதாவை வரவேற்றார்.

''ஹை...! ஸ்மிதா ஆன்ட்டி! நாங்க இவங்களைப் பாத்தோமே...'' என்று தாவினான் ஜெயந்தன்.

''ஆமடா... ராஜா!'' என்று மடியில் அமர்த்திக் கொண்டாள். தொடர்ந்து இவர்களோடு தொடர்பு வைத்துக்

கொள்ளாமல் போய் விட்டோமே என்று வருத்த... கொண்டாள் ஸ்மிதா.

"ஹேய்! யாரையோ... பார்க்கப் போறோம்னு சொ... விட்டிருந்தியே!"

"ஆமா... பார்க்கப் போறோம்..." என்றாள் குகப்பி...

அந்த நேரத்தில் நிவேதிதா அலுவலகத்தில் இரு... திரும்பி வந்தாள்.

"பாத்தீங்களா! நான் சொன்ன ஆள் வந்துட்டாங்க..." என்று சிரித்தாள் குகப்பிரியா.

"லொள்ளுதானே...!" என்று அவள் காதை... பிடித்துத் திருகினாள் ஸ்மிதா. நிவேதிதா திரும்பி,

"வாங்க... சார்! உள்ளே வாங்க!" என்று வரவேற்றா... இன்னொரு இளைஞனும் வந்தார்.

"இவர் என்கூட வேலை செய்யறவர்" என்று அறிமு... படுத்தினான் அந்த இளைஞன். வணக்கம் சொன்னா...

"உட்காருங்க! மனோஜ் சார். நிமிஷத்துல காஃபி போ... டுட்டு வரேன்" என்று போனாள் நிவேதிதா.

வெள்ளியங்கிரி மனோஜிடம் கலகலப்பாக ஒ... றிரண்டு வார்த்தைகள் பேசினார்.

அதற்குள் காஃபி வந்தது. அவன் காஃபியைப் பருகி... விட்டு "தாங்க்ஸ் நிவேதிதா... மேடம்! ஐ ஆல்வேஸ் லை... யுவர் காஃபி" என்றவன் வெள்ளியங்கிரியிடம் திரும்பி... "சரிங்க அங்கிள்" கிளம்பறேன், பையன் ஸ்கூல்ல... வெயிட் பண்ணிட்டிருப்பான்" என்று கிளம்பினான்.

குகப்பிரியா திரும்பி அப்பாவிடம் பேசினாள். "அப்பா... ஸ்மிதாக்காகிட்டே நாம ஒரு கெஸ்ட்டை சந்திக்க...



...றோம்னு கூட்டிட்டு வந்தேன். கடைசியில் அக்கா ... அந்த முக்கியமான ஆள்னு சொன்னவுடனே கடுப் ...ட்டாங்க!" என்றாள்.

"ஹேய்...! நிச்சயமா எனக்கு ஏமாந்தம்தான். ஆனா... ... அக்கா எனக்கு முக்கியமானவதான்" என்று ...த்தாள் ஸ்மிதா.

"ஹேய்! குகப்பிரியா...! எங்களுக்குள்ளே கலகம் ...ட்டி விடலாம்னு பாத்தியா...! அது நடக்கவே நடக் ...து" என்று சிரித்தாள் நிவேதிதா.

அதற்குப் பிறகு சற்று நேரம் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டாள் ஸ்மிதா.

குகப்பிரியாவும், நிவேதிதாவும் ஒருவரை ஒருவர் பார்த்து அர்த்தத்துடன் சிரித்துக் கொண்டார்கள்.

## 8

"ஹல்லோ...!" என்றான் அறவாழி.

"நான்தான் அமர்ஜித் பேசறேன்..." என்றான்.

"அண்ணா...!" என்றான் அறவாழி.

அறவாழியிடம் ஒன்றிரண்டு நிமிடங்கள் பேசினான்.

அதற்குப் பிறகு அறவாழி,

"அப்பா...!" என்று குரல் கொடுத்தான் அறவாழி.

சுந்தரவடிவேலு வேகமாக வந்தார்.

"என்னப்பா?" என்றார்.

"அப்பா...! அண்ணா பேசறான்...!" என்றான். அவர் ஆர்வமாக வாங்கிக் கொண்டார்.

"தம்பி...! சொல்லுடா!'' என்றார். அமர்ஜித் ஆ
மாகப் பேசினான். பிறகு,

"எப்ப வர்றே?'' என்றார்.

"அப்பா...! நான் இந்த மாசம் வர்லேப்பா...'' என்றா

"ஏம்ப்பா...!'' என்றார். உள்ளே கொஞ்சம் உறுத்தலா இருந்தது. மனைவி வேறு என்னென்னவோ செய் கொண்டிருக்கிறாள். இந்த முறை நேரில் வைத்து அ னிடம் பேசலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தார்.

"அப்பா...! உடம்பை நல்லாப் பாத்துக்குங்க! அ மாவையும் பாத்துக்குங்க!'' என்றான்.

"ஏம்ப்பா...! அம்மாகிட்டே பேசு!'' என்று அவர் திரும்பி மனைவியை அழைத்தார்.

தெய்வநாயகி வேகமாக வந்தார். அந்த நேரம் மகன் "அப்பா! நேரமாச்சுப்பா...! அப்புறம் பேசறேன்''என்று ஃபோனைத் துண்டித்துக் கொண்டான்.

வேகமாக வந்த தெய்வநாயகி ஏமாற்றத்துடன் நின் றார்!

மகனிடம் கொஞ்ச கொஞ்சமாக நைச்சியமாகப் பேசி வழிக்குக் கொண்டு வர வேண்டும் என்று நினைத்தார். ஆனால் மகன் என்னடா என்றால் நழுவலாக இருக் கிறானே என்று முதன் முதலாகக் கவலை பிறந்தது.

அறவாழி ஏமாந்து நிற்கிற தன் தாயைக் கூர்ந்து கவனித்தான். தனக்குள் சிரித்துக் கொண்டான்.

"ஏங்க! கட் பண்ணிட்டானா?'' என்று கேட்டார் தெய்வ நாயகி.



"ஆமாம்!'' என்று சொன்ன சுந்தரவடிவேலு மேற் கொண்டு அவள் ஏமாற்றம் நிறைந்த முகத்தைப் பார்க்க விரும்பாமல் செய்தித்தாளை எடுத்துக் கையிலே வைத்துக் கொண்டார்.

ஒரு முறையல்ல! இரண்டு மூன்று முறைகள் இந்த மாதிரி நடந்தவுடனே சுந்தரவடிவேலுக்குப் புரிய ஆரம் பித்தது. ஆனால் தெய்வநாயகிக்குப் புரியவில்லை.

ஸ்மிதாவின் குடும்பத்தாருக்குத் தொடர்ந்து நம்பிக்கை கொடுத்துக் கொண்டிருந்தார்.

* * *

சித்ரமாலா தேம்பி தேம்பி அழுவதை ஒரு கையா லாகாத் தனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள் அற வாழியும், குகப்பிரியாவும், நிவேதிதாவும்!

அமர்ஜித்தின் அனுமதியுடன் நடந்ததைச் சொல்ல வேண்டிய கடமை அவர்களுக்கு வந்து சேர்ந்தது. அதை மிகவும் வருத்தத்துடன் செய்ய வேண்டி இருந்தது.

சித்ரமாலா மிகவும் நொந்து போனாள். "அத்தைக்கு நான் என்ன குறை வச்சேன்! அவர்களே எப்படி இப்படி எனக்கு எதிரா நினைக்கலாம். அவர்களும் ஒரு பொண்ணு தானே! அப்படி என்ன எங்களுக்கு குழந்தையே பிறக் காதுன்னு சொல்லிட்டாங்களா?'' என்று கேவிக் கேவி அழுதாள்.

நிவேதிதா ஏதோ சொல்ல ஆரம்பித்தாள். அறவாழி எதுவும் சொல்ல வேண்டாம் என்று சைகை செய்தான். சற்று அழ விட்டார்கள். அதற்குப் பிறகு அறவாழி அழுத்தமான குரலில் சொன்னான்.

"அண்ணி...! அம்மா என்னவோ விவரமில்லாம பண்ணிட்டிருக்காங்க! அப்படி எல்லாம் நாங்க விட்டுட மாட்டோம். இப்படி ஒரு விஷயம் நடக்குதுன்னு நாங்க யாராவது சொல்லி உங்களுக்கு தெரிய வந்துச்சுன்னா நீங்க சங்கடப்படுவீங்க இல்லே...! அதுக்குத்தான் சொல்றோம். நாங்க இருக்கோம். நீங்க எதுக்கும் கவலைப் படாதீங்க! அண்ணன் உங்களைத் தவிர யாரையும் மனசால கூட நினைக்க மாட்டாரு! அண்ணன் உங்க கிட்டே பேசுவார்" என்று விதவிதமாகத் தேற்றினான் அறவாழி.

மெல்ல மெல்லத் தேறினாள் சித்ரமாலா... பிறகு ஒரு பெருமூச்சுடன் சொன்னாள்.

"அத்தை... ரொம்பத் தப்புப் பண்றாங்க... எங்க வாழ்க்கையில மட்டுமில்லை. இன்னொரு பெண்ணோட வாழ்க்கையிலயும் விளையாடறாங்க! தேவையில்லாம இன்னொரு பொண்ணுக்கும் ஆசையைக் காட்டி ஏமாத்தறாங்க!" என்றாள் ஆழ்ந்த கவலை தோய்ந்த குரலில்.

அறவாழி புன்னகைத்தான்.

தன்னுடைய வாழ்க்கை கேள்விக்குறியாக இருக்கிற இந்த நேரத்தில் கூட அண்ணி இன்னொரு பொண்ணுக்காக கவலைப்படறாங்களே! எவ்வளவு நல்ல மனசு...! என்ற பெருமையும் பெருமிதமும் தோன்றியது.

திரும்பி நிவேதிதாவை பார்த்தான். பிறகு அண்ணியிடம் சொன்னான்,

"அண்ணி... அந்தக் கவலையும் படாதீங்க...! ஏன்னா... அவங்க நிவேதிதா மேடத்தோட கிளாஸ்மேட்தானாம். அவங்களும் ஒன்றும் பெரிய இன்டரஸ்ட் காட்டலை?" என்று விளக்கம் சொன்னான்.



மெல்லத் தேறினாள் சித்ரமாலா. இப்போதும் ஒரு கோவிலில்தான் இருந்தார்கள்.

ஈச்சனாரி விநாயகர் கோவில்!

கோவைக்கும் பொள்ளாச்சிக்குமான பாதையில் ஈச்சனாரி விநாயகர் கோவில் இருந்தது மிகப் பெரிய பிள்ளையார் சிலை!

அவர்கள் போன நேரம் அபிஷேகம் வேறு நடந்தது. பூஜை முடித்து விட்டுத்தான் அங்கேயே பார்த்தார்கள். இருந்த ஒரு மண்டபத்தில் அமர்ந்து பேசினார்கள்.

அப்போதுதான் சித்ரமாலா சொன்னாள்.

"தம்பி நானும், நிவேதிதாவும் கொஞ்ச நேரம் அங்கே உட்கார்ந்துகிட்டிருக்கோம். நீ வேண்ணா... குகப்பிரியாவை அந்த லட்சுமி கோவிலுக்கு கூட்டிட்டுப் போயிட்டு வந்துடு" என்றாள்.

அறவாழியின் மனம் நெகிழ்ந்தது! தனக்கும் குகப் பிரியாவுக்கும் வசதியாகப் பேச வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கிறார்கள்.

தனக்கு இவ்வளவு பிரச்சினை இருந்த போதும், அண்ணி தனக்காக எடுக்கிற முயற்சி அவன் மனதில் ஒரு சின்ன ஆசையை ஏற்படுத்தியது.

"இல்லண்ணி...! பரவாயில்லே! நாம எல்லாரும் ஒண்ணாப் போகலாம்" என்று அவன் ஏதோ சொல்ல,

"இல்லையில்லை! நீங்க போயிட்டு வாங்க! நான் கொஞ்சம் நிவுகிட்ட தனியாப் பேசணும்" என்றாள்.

அறவாழி அதற்கு மேல் வாதாடாமல் குகப்பிரியாவை தன் காரில் அழைத்துப் போனான்.

''இப்போ எல்லாம் மக்கள் நிறையக் கோவில்களுக்கு போக ஆரம்பிச்சுட்டாங்க இல்லே'' என்றான் அறவாழி.

''ஆமா! முழுமையா நம்பறதுக்கு ஒரு இடம் ...மில்லே! அது என்னமோ தெரியலே...! தெய்வீக சம்பந்தமான விஷயங்கள்லே நமக்கு ஒரு அமைதி கிடைக்குதில்லே! எங்கப்பாவும் அப்படித்தான் சொல்லுவார். நேரம் கிடைக்கும்போதெல்லாம் ஓம் நமசிவாய... மந்திரத்தை நிதானமான ஒரு ஒலி வகையில ஜெபிச்சுக் கிட்டிருந்தா ஒரு தியானம் மாதிரி ஆகிடுது. அமைதியும் கிடைக்குதுங்கறாங்க'' என்றாள் குகப்பிரியா.

கோவிலில் தரிசனம் செய்தார்கள்! அப்படியே சற்றுத் தள்ளி வந்து அமர்ந்தார்கள்.

''பிரியா! ரொம்பத் தேங்க்ஸ்'' என்றான் அறவாழி.

''எதுக்கு?'' என்றாள் குகப்பிரியா.

''இல்லே! இந்த விஷயத்துல இவ்வளவு அக்கறை எடுத்துக்கறீங்களே அதுக்குத்தான்'' என்றான்.

''அறவாழி... சார்! இதுல ஒரு சங்கடம் என்னன்னா இந்த விஷயத்துல ரெண்டு பக்கமுமே மாட்டியிருக்கவங்க... எங்க அக்காவோட ஃப்ரெண்ட்ஸ்'' என்றாள். அவன் முகத்தைப் பார்த்து கசப்புடன் புன்னகைத்தாள்.

''கவலைப்படாதீங்க... ரெண்டு பேரையுமே தப்பிக்க வச்சுர்லாம்'' என்றான் அறவாழி.

மென்மையாகப் புன்னகைத்தான். பிறகு விளையாட்டாக கேட்பவன் போல,

''அப்புறம்... நீங்க... எப்பக் கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க'' என்றான்.



அவள் அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

'என்ன திடீரென்று இப்படிக் கேட்கிறார்' என்று நினைத்துக் கொண்டாள். ஆனால் புன்னகையுடன் சொன்னாள்.

''இப்ப இவங்க படற பாட்டைப் பார்த்தா கல்யாணம் வாழ்க்கையில ஒரு முக்கியமான விஷயம் இல்லேன்னு தோணுது'' என்றாள்.

''ஐய்யய்யோ... அப்படியெல்லாம் முடிவு பண்ணிடாதீங்க! அப்புறம் யாரோ ஒரு அதிர்ஷ்டசாலிக்குக் கிடைக்க வேண்டிய அதிர்ஷ்டம் கிடைக்காம போயிடப் போகுது'' என்றான்.

அவள் வெட்கத்துடன் புன்னகைத்தாள். அவன் தொடர்ந்து சொன்னான்.

''ஆமாங்க! கால்வலி வருதுங்கறதுக்காக காலையே எடுக்கணுமா? அப்பவே ஏதோ பிரச்சினை வருதுங்கறதுக்காக கல்யாணத்தையே ஒதுக்கிட முடியுமா?'' என்றான்.

அவள் ஒத்துக் கொண்டாள்.

''அதை விடுங்க!'' என்று அவள் ஏதோ சொல்ல ஆரம்பிக்க,

''ஹலோ...! அப்படியெல்லாம் விட முடியாதுங்க! உங்களுக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை வேணும்னு சொல்லுங்க பாப்போம்'' என்றான்.

அவள் உடனே அவனை ஒருவிதமாகப் பார்த்தாள்.

பிறகு, கன்னத்தில் விரலை வைத்துக்கொண்டு சொன்னாள்.

''உங்களை மாதிரி ஒரு ஏமாளியாப் பாருங்க!'' என்றாள். கலகலவென்று சிரித்தாள்.

''வாட்...!'' என்று அவன் திடுக்கிட்டுப் போனது போல் நடித்தான். ''ஓஹோ...! ஏமாளியா...?'' என்று பொய்யாக மிரட்டினான்.

''தப்பாய்ப் புரிஞ்சுக்கிட்டீங்க... சார்! நல்லவர்னு சொன்னேன்'' என்று அவள் திருப்பிப் போடவும்,

''ஆஹா...!'' என்று அவன் சிரித்தான்.

ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்! தங்கள் பார்வையில் தெரிந்த வித்தியாசத்தை உணர்ந்து கொண்டார்கள்.

குகப்பிரியா உடனே பேச்சை மாற்றினாள்.

''சார்! நானும் அக்காவும், ஒரு யோசனை செய்தோம்'' என்றாள்.

''சொல்லுங்க!'' என்று அவன் கேட்டுக் கொண்டான். அதே நேரம்!

ஃபோன் ஒலித்தது.

எடுத்தாள்.

அந்தப் புறம் அமர்ஜித் பேசினான்.

''சொல்லு அண்ணா! கரெக்ட் அண்ணா! நீ புறப்பட்டுப் போனதுக்கப்புறம் நான் அம்மாகிட்டே பேசறேன்'' என்றான்.

''.....!''

''ஆமாண்ணா...! நான் அண்ணிகிட்டே பேசிட்டேண்ணா. என்ன சொல்வாங்க! ரொம்ப துக்கம்! நீயும் பேசிடுண்ணா! அப்புறம் நெக்ஸ்ட் வீக்ல எங்க டிராவல்ஸ்ல மலேஷியா டூர் ஒன்று பிளான் பண்ணியிருக்கோம் உனக்கும், அண்ணிக்கும் டிக்கெட் போட்டிருக்கேன். நீங்க போயிட்டு வாங்க...!'' என்றான்.

அவன் அந்தப்புறம் என்ன சொன்னானோ இவன் உடனே,



''இல்லண்ணா! அண்ணிக்கு மனம் தேறணும். போயிட்டு வாங்க! லீவென்ன லீவு, ரெண்டு நாள்தான் லீவு போடணும். கடைசி ஒரு நாள் கவர்ன்மென்ட் லீவு! இடையிலே சனி, ஞாயிறு டோட்டலி ஒன் வீக்! போயிட்டு வாங்க'' என்றான்.

மேலும் சற்று நேரம் பேசி விட்டு ஃபோனை ஆஃப் செய்தான். குகப்பிரியாவைப் பார்த்து வாஞ்சையாகப் புன்னகைத்தான்.

''கண்டிப்பா... அண்ணிக்கு இப்ப ரீ அஷ்யூரன்ஸ் வேணும் இல்லைங்க...'' என்றான்.

அவள் உச்சுக் கொட்டினாள்... அவன் கேள்விக் குறியாகப் பார்க்க,

''கல்யாணம்னா... ஆயுட்கால பந்தம்கறாங்க! இதுல எங்கே ரீ அஷ்யூரன்ஸ்ஸுக்கான அவசியம் வந்துச்சுன்னு எனக்குப் புரியலே...'' என்றான் கசப்புடன்.

''லெக்சரர்ன்னு ப்ரூவ் பண்றீங்க!'' என்றான்.

''கரெக்ட்தான்! ஆனா... ஒரு விஷயம் என்னன்னா மேலை நாடுகள்ல கல்யாணம்கறது அவர்களது தனிப்பட்ட விவகாரம். ஆனா... நம்ம நாட்ல அது குடும்ப விவகாரம் மாதிரி ஏன்... சமூக விவகாரம் கூட பாருங்க! எங்கம்மா ரொம்ப நல்லவங்க! நல்ல குடும்பத் தலைவி! ஆனா... ஏதோ எங்கண்ணனுக்கு ஏதோ நல்லது பண்றதா நினைச்சு கிட்டுத் தேவையில்லா வேலை பண்றாங்க'' என்றான்.

அவள் மௌனமாக இருந்தாள்.

''சரி போலாமா?'' என்று கிளம்பினார்கள். அவள் அவ
னது மூடை மாற்ற வேண்டும் என்று எண்ணியவள் போல,

''அது எப்படி... சார்! குடும்ப விவகாரங்களை எல்லாம் இப்படி அலசுறீங்க!'' என்றாள்.

''பின்னே? நானும் குடும்பஸ்தன் ஆகப் போறேன்... இல்ல! நான் உங்களை மாதிரி இல்லைப்பா! இந்த பிரச்சினைகளை எல்லாம் பாத்ததுக்கு அப்புறந்தான் குடும்ப வாழ்க்கை வேணும்னு நினைக்கறேன். அப்படித் தான் சிக்கல் இல்லாம எப்படி குடும்ப வாழ்க்கை வாழ்றதுன்னு காட்ட முடியும்?'' என்றான்.

''சார்... பேசறதைப் பார்த்தா பொண்ணெல்லாம் பாத்தாச்சு போல இருக்கு'' என்றாள்.

''அப்படித்தான் வச்சுக்குங்களேன்?'' என்றான்.

அவள் உடனே அதுசரி! அது உங்க பர்ஸனல் மேட்டர்!'' என்றாள்.

''இல்லைங்க! அது உங்க மேட்டரும்தான்'' என்றான். அவள் திடுக்கிட்டுப் போய்ப் பார்க்க 'ஆமாங்க! நீங்க என் ஃபிரண்ட் ஆச்சே! தாராளமாய் இன்வால்வ் ஆகலாம்' என்றாள்.

அவள் சட்டென்று பார்வையைத் திருப்பிக் கொண்டாள். நெஞ்சுக்குள்ளே ஏதோ ஒலித்தது.

அறவாழி ஏதோ தனக்கு செய்தி சொன்னது போலத் தோன்றியது.

இருவரும் அமைதியாகவே காருக்கு வந்தார்கள். அமைதியாகவே மற்ற இருவரும் ஏறிக் கொண்டார்கள். திரும்ப வரும்போது பொதுப்படையான பேச்சாகவே இருந்தது. அறவாழி அவர்கள் இருவரையும் கூட்டம் இல்லாத பஸ் ஒன்றில் ஏற்றி விட்டு விட்டு அண்ணியையும் கொண்டு போய் விட்டு விட்டு வந்தான்.

போவதற்கான அந்த இரண்டு மணி நேரத்தில் அண்ணியிடம் மிகவும் வேடிக்கையாகப் பேசிச் சிரிக்கச் செய்தான்.



''அண்ணி...! அண்ணன் பேசினாங்க?'' அடுத்த வாரம் நீங்க ரெண்டு பேரும் மலேசியா போக ஏற்பாடு பண்ணியிருக்கேன்'' என்றான்.

''ஓ...!'' என்று அவள் ஆச்சரியமானாள். ''ஏற்பாடெல்லாம்?''

''என்ன ஏற்பாடு! பாஸ்போர்ட் ஏற்கனவே இருக்கு. இவ்வளவு பெரிய கம்பெனியில் வேலை செஞ்சுட்டு ஏற்பாடு பண்ண முடியலேன்னா... எப்படி?'' என்று சிரித்தான்.

அண்ணியிடம் அப்படி சிரித்துப் பேசிய அறவாழி வீட்டுக்கு வந்தவுடன் சோக முகம் பூசிக் கொண்டான்.

''ஏண்டா... அறவாழி, ஏன் ஒரு மாதிரி இருக்கே?'' என்றார் தெய்வநாயகி.

''ஏன்? நான் எப்பவும் ஒரே மாதிரியாதான் இருக்கேன்! மாறிகிட்டா இருக்கேன்?'' என்றான் அவன்.

அறைக்குப் போய் விட்டான்.

இப்படி பதிலை எதிர்பார்க்காத தெய்வநாயகி சங்கடமாகக் கணவனைப் பார்த்தார்.

''என் தெய்வா? எனக்கென்னவோ சின்னவனுக்கு அந்த விஷயம் தெரிஞ்சிருக்கும் போல இருக்கு. ஒரு மாதிரி பேசறான். எதுக்கும் ஒப்பனாப் பேசிடேன்'' என்றார்.

''ஒப்பனாப் பேசினாத்தான் வம்பு. ஏற்பாட்டையே கெடுத்துடுவான்!'' என்றார்.

''இல்லே! தெய்வா...! இப்ப நீ செய்றதுதான் சரியில்லை! ஒரு வாரம் டைம் தர்றேன். அதுக்குள்ள நீ பையங்ககிட்டே பேசணும்! இல்லேன்னா... நான் பேசுவேன்'' என்றார்.

அவர்கள் இருவரும் பேசிக் கொண்டதை அறவாழியும் கேட்டு விட்டான். அப்பா மேல் இருந்த கோபம் கொஞ்சம் தணிந்தது.

அந்த ஒரு வாரமும் ஓடியது. அந்த சனிக்கிழமை ஒரு மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு,

''அப்பா... விஷயம் தெரியுமா? அண்ணனும், அண்ணியும் மலேசியா டூர் போயிருக்காப்ல. அதுவும் எப்படித் தெரியுமா? என்கிட்டே எதுவும் சொல்லாம. என் மூலமா ஏற்பாடு செய்யாம நேரடியா எங்க எம்டி கிட்டே பேசி ஏற்பாடு பண்ணியிருக்காங்க! அண்ணனுக்கு நம்ம மேலே ஏதோ கோபம் போல இருக்கு...!'' என்றான்.

அப்பா திகைத்துப் போனார்! மனைவியின் முகத்தைப் பார்த்தார்.

சட்டென்று முடிவெடுத்தார்... சட்டையை எடுத்து மாட்டினார்.

''தம்பி! புறப்படு... கொஞ்சம் நடந்துட்டு வரலாம். உன்கிட்டே பேசணும்...''என்றார்.

அவர்கள் இருவரும் தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் கூட வெளியே நடப்பதை தெய்வநாயகி ஒரு கைலாயாகாத் தனத்துடன் பார்த்தார்.

முதன் முதலாகத் தனிமைப் படுத்தப்பட்டது போல உணர்ந்தார்.

## 9

இரவு நேரம்!

''என்ன சொல்லப் போகிறாய்...?'' என்ற பாடல் மென்மையாக எங்கேயோ ஒலித்தது. கேட்க இனிமையாக இருந்தது! உள்ளம் கொள்ளை போனது.



அறவாழி ஆழ்ந்த மௌனத்தில் கிடந்தான். அவனது தற்போதைய மனநிலைக்கு அந்தப் பாடல் மிகவும் பொருத்தமாக இருந்தது.

பார்த்தாலே பிடிக்கும் என்கிறார்களே அதுபோல குகப்பிரியாவை அவனுக்குப் பிடித்தது என்பது ஒருபுறம். இன்னொரு புறம் அவளது பண்பான நடவடிக்கைகள் சுறுசுறுப்பு இதெல்லாம் மிகவும் பிடித்தது.

யாரோ ஒரு பெண் தன்னிடம் துன்பத்தைப் பகிர்ந்து கொண்டாள் என்று ஏனோ தானோ என்று போய் விடலாம் என்று எண்ணாமல், அவளது துன்பத்தில் பங்கு கொள்வது மட்டுமல்லாமல் சற்றும் தயங்காமல் தன்னைத் தேடி வந்தாளே அது மிகவும் பிடித்திருந்தது.

தந்தையிடம் அமர்ந்து இலக்கியங்களைப் பற்றி ஆர்வமாகக் கேட்கிறாள். அதற்கு விளக்கமும் வேறு சொன்னாளே.

''என்னுடைய துறை இலக்கியமில்லை! ஆனா... நான் பொறந்த நாட்டிலே என்னென்ன இருக்குன்னு தெரிஞ்சுக்கலேன்னா... அது நியாயமில்லே!'' என்று விளக்கம் வேறு தன்னைப் போலவே.

அன்றைக்கு அப்படித்தான்!

தனது தந்தையிடம் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாள். அவன்தான் ஏதோ ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு அவளைப் பார்க்கச் செல்வானே! அந்த மாதிரி அன்று மாலை போயிருந்தான்.

நிவேதிதா இதற்குள்ளாகத் தங்கள் தாயிடமும் தந்தையிடமும் சித்ராமாலாவின் விஷயங்களை கொஞ்சம் கோடி

காட்டியிருந்தாள். அதனால் வெள்ளியங்கிரியும் மகேஸ் வரியும் அது பற்றிப் பேசவில்லை.

சிறியவர்கள் சேர்ந்து ஏதோ செய்கிறார்கள் நன்மை யில் முடிந்தால் சரி என்பது போல் நினைத்துக் கொண் டார்கள்.

குகப்பிரியா ஆர்வமாக வரவேற்றாள்.

என்னவோ முக்கியமான டிஸ்கஷன் போயிட்டிருக்கு போல் என்று அவன் தயங்க அவள் புன்னகைத்தாள்.

''அப்படியெல்லாம் இல்லே! அறிவை வளர்க்கிற நேரம் இது! அப்பா... பக்தி இலக்கியங்கள்ல ரொம்ப ஈடு பாடுள்ளவர். அதான்! அடிக்கடி திருவாசகம் பாடுவாங்க. அதான் மாணிக்கவாசகரைப் பற்றி சொல்லச் சொல்லிக் கேட்கிறோம்'' என்றாள்.

''நானும் கேட்கறேன்'' என்று அமர்ந்தான்.

வெள்ளியங்கிரி ஆர்வமாக ஆரம்பித்தார்.

''மாணிக்கவாசகர் சமயக் குரவர்கள்னு சொல்றமே அந்த நான்கு பேர்ல ஒருத்தர் அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர். இவங்க நாலு பேரும்தான் சமயக் குரவர்கள். இறைவனைத் தோழனா நினைக்கலாம்ங்கற முறையில சுந்தரர் காட்டின மார்க்கம் சகமார்க்கம். இறை வனைத் தந்தையாக நினைக்கிற மார்க்கத்தைக் காட் டினவர் சம்பந்தர். அந்த மார்க்கத்துக்கும் பெயர் சற்புத்திர மார்க்கம் அப்பர் என்கிற திருநாவுக்கரசர் காட்டின மார்க்கம் தாசமார்க்கம். அதாவது தொண்டனா இருக்கறது. மாணிக்கவாசகர் காட்டின மார்க்கம் சன்மார்க்கம் இறை வனைத் தலைவனாகவும் நம்மை பக்தனாகவும் நினைக்கற மார்க்கம்.



அறவாழி மெல்லப் புன்னகைத்தான்.

''ஆமா...! பள்ளிக் கூட நாட்கள்ல படிச்சிருக்கோம்.''

''ஆமாப்பா! எல்லாரும் படிக்கிறோம் ஆனா... மறந் தர்றோம். ''ஐடோன்ட் நோ டாமில்''ன்னு சொல்றதைப் பெருமையா நினைக்கறோம்'' என்றார் வெள்ளியங்கிரி வருத்தமான முகபாவத்துடன்.

''ஆமா...! எனக்கும் அந்தக் கவலையுண்டு'' என்றான் அறவாழி.

''அவ்வளவு... ஏன்? என் பேரையே கொஞ்சம் நெத்தியைச் சுருக்கிட்டுத்தான் கேட்பாங்க! அதென்ன பேரு அறவாழின்னு அப்படீம்பாங்க...!''

''ஆமப்பா... நானும் கேட்கணும்னு நினைச்சேன்... உங்கப்பா... வச்ச பேரா?''

''இல்லைங்க அங்கிள்! எங்கப்பாவுக்கு அப்படி இன்ட் ரஸ்ட் எல்லாம் கிடையாது. எங்கப்பாவோட ஃபிரண்ட் ஒருத்தர் தமிழ்ப்பிரியராம். அவரு வச்ச பேராம்... சரித்திர ஆசிரியர் ஒருத்தர் வச்ச பேருதான் அமர்ஜித். எங்கண்ணன் பேரு... அதுசரி அங்கிள் டாபிக்குக்கு வாங்க!'' என்றான்.

''ஆமாம்பா! மாணிக்கவாசகர் வரலாற்றைச் சொல்ல ணும்னா... பெரிய வரலாறுப்பா. புத்தகம் இருக்கு தரேன்'' என்றார்.

''அவர் பாடல்கள் ரொம்ப உருக்கமா இருக்கும்னு சொல்வாங்க!'' என்றான்.

''ஆமாப்பா...! அடிக்கடி நான் பாடறேனே... அந்தச் சிவபுராணத்துல நிறைய விஷயங்கள் இருக்கு! ஒரு பொருளோட பரிமாணங்கள் என்ன?''

''உயரம், ஆழம், அகலம்... இப்படி...?'' என்றாள் குகப் பிரியா.

''எப்படிச் சொல்றாரு பாருங்க! ஒரு லைன் சொல்றேன்.''

''ஐயா... என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே'' ஆழம், அகலம், நுண்மை. அப்புறம் ஓங்கின்னு சொல்லும்போது உயரம்.

''சேயானே... நணியானே...'' அப்படீங்கறார்... அப்படின்னா... அருகிலும் இருக்கிறார். தூரத்திலும் இருக்கின்றார்ன்னு பொருள் புல்லாகிப் பூடாகிங்கற வரிகள்ல பரிணாம வளர்ச்சியையே சொல்லிடறார் அப்படீங்கறாங்க?''

''அருமை! அருமை!'' என்றான் அறவாழி.

''அதுமட்டுமில்லப்பா! நாம இன்னைக்குச் சொல்றோமே அலிங்களுக்குக் கேர் குடுக்கணும்னு... அவரு எப்பவுமே இறைவனைப் பற்றிப் பாடும்போது ''ஆணாகிப் பெண்ணாகி அலியாகி அப்படீன்னுதான் பாடுவாரு...'' என்றார்.

''ஸ்ப்ளென்டிட்'' என்றவன் ''அப்படிச் சொல்றதைவிட அருமை! அருமைன்னு சொல்லணும் இல்லே...!'' என்றான்.

எல்லாரும் சிரித்தார்கள்.

அன்றைக்குப் பேசிக் கொண்டிருந்ததெல்லாம் இப்போது நினைவுக்கு வந்தது!

அழகான குடும்பம்! அன்பான குடும்பம்! என்றுதான் முதலில் அவர்கள் குடும்பத்தைப் பற்றி நினைத்தான். அப்போதெல்லாம் தோன்றியது. குடும்பத்தின் கஷ்டங்களை இவர்கள் அறிந்திருப்பார்களா என்று. ஆனால் ஸ்மிதாவின் பிரச்சினையில் அவள் பொறுப்பெடுத்துக்



கொண்டதற்குப் பிறகு அந்த சந்தேகம் முழுமையாக மறைந்தது.

அஷ்டலட்சுமி கோவிலில் வைத்துத்தான் மனதின் போக்கை ஓரளவு விவரமாக சொல்லிவிட்டோம் என்று தோன்றியது. அவள் புரிந்து கொண்டாளா? புரிந்து கொண்டவள்போலத்தான் தெரிந்தது. ஆனால் பதில் வரவில்லையே! ஆனால் எதிர்ப்பும் வரவில்லையே!

அவன் தன்னைத்தானே தேற்றிக் கொண்டான். எப்படியும் நெகடிவான பதில் வந்தாலும் அது நாசூக்காகவே சொல்லப்படும் என்று தோன்றியது.

இந்தக் காத்திருப்புக் கடினமான இருந்தது. ஓரளவு வேதனையும், இன்பமும் கலந்தாற்போல இருந்தது.

எப்போதோ படித்த கவிதைகள் எல்லாம் வந்து சென்றன. புன்னகையுடனே படுக்கப் போனான்.

* * *

''வேண்டாங்க! அப்படியெல்லாம் எதுவும் செய்ய வேண்டாம்'' என்று கிட்டத்தட்ட காலில் விழாத குறையாகக் கெஞ்சினாள் சித்ரமாலா.

''இல்லே... சித்ரமாலா... வேற வழியே இல்லே! வீணா வார்த்தைகளைப் பரிமாறிகிட்டு கசப்பை வளர்த்துக்கறதைவிட ஒதுங்கிக்கறதுதான் நல்லது'' என்றான் அமர்ஜித் அழுத்தமாக.

சித்ரமாலாவுக்கு மேற்கொண்டு எதுவும் பேச வழியிருக்கவில்லை. மறுக்கவும் வழியில்லை.

''அப்ப சரி...! இந்த விஷயம் எதுவும் நான் அத்தை மாமாகிட்டே பேச மாட்டேன். நீங்கதான் டீல் பண்ணிக்கணும்!'' என்றாள்.

''ஓ...கே!'' என்றான். மறுபடியும் யோசித்தான்.

''சரி...! இப்படி சொல்லு...! உங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லே...! அதனாலே ஒரு ஆறு மாசம் அங்கே யிருந்தே வேலைக்கு வர்றேன்னு சொல்லு...! மறுபடி... அது வேண்டாம்! மேலே சொன்ன முடிவுதான் சரி...'' என்றான் அழுத்தமாக.

''இத பாருங்க! அவங்க ஏதோ தெரியாம நடக்கறாங்க! அதற்காக நாம நம்ம கடமையில இருந்து விலக முடியுமா?'' என்றாள்.

''இப்ப யாரு கடமையில இருந்து விலகப் போறா... இப்படி யெல்லாம் நடந்துக்கக் கூடாதுன்னு அவங்களுக்குத் தெரி யணும். இல்லே...! அப்புறம் காலம் வரும்போது சேருவோம்'' என்று மேலும் சற்று நேரம் பேசி சமாதானம் செய்தான்.

அதே நேரத்தில்...!

தெய்வநாயகி சற்றுக் கவலையோடு கணவரிடம் கேட்டார்.

''ஏங்க! சின்னவன்கிட்டே பேசினீங்களே! அவன் என்ன சொன்னான்?''

''தெய்வா...! இந்த யோசனையைக் கேட்டு சின்னவனுக்கு ரொம்ப கோபம்! எப்படியும் இன்னேரம் பெரியவனுக்கு காதுக்குப் போயிருக்கும்! இனி என்னென்ன நடக்கப் போகுதோ...?'' என்றார்.

''என்னங்க... இப்படி சொல்றீங்க?'' என்றார்.

''ஆமா...! பின்னே... நீ யாரு சொன்னாலும் கேட்காம ஏற்பாடு செய்யறே! இப்ப சிக்கல்ல மாட்டிகிட்டே! நான் முடிஞ்ச வரைக்கும் சமாதானம் பண்ணப் பார்க்கறேன். ஆனா... பொண்ணு வீட்டுக்காரங்களுக்கு நீ ஏகமா நம்



பிக்கை குடுத்திருக்கியே... எப்படி சமாதானம் சொல்லப் போறே...''

தெய்வநாயகி விழித்தார்.

''தெய்வா! சொன்னாப் புரிஞ்சுக்கணும்! ரெண்டாம் கல்யாணம்ன்னா என்ன விளையாட்டா நினைச்சியா? சட்டப் பிரச்சினை வரும்! சித்ராவும் படிச்ச பொண்ணு! அது மட்டும் இல்லே! குழந்தை இது வரைக்கும் பிறக் கலைங்கறதைத் தவிர வேற ஏதாவது குறை உண்டா. ரொம்ப அருமையான பொண்ணு!'' என்றார் காட்டமாக.

தெய்வநாயகி சுரத்தில்லாமல் சொன்னார்.

''ஆமா! அது இல்லேனு யாரு சொன்னா?''

''அப்புறம்...? அந்தப் பொண்ணோட வாழ்க்கைக்கே வேட்டு வைக்கிறியே... இது எந்த விதத்துல நியாயம்?''

''இப்ப என்னங்க செய்யறது?''

''நா வேண்ணா ஒண்ணு செய்யறேன்!? பசங்க கிட்டே பேசறேன்'' என்றார்.

அறவாழி உள்ளே நுழைந்தான்.

''என்னப்பா...?'' என்றார்.

''இல்லப்பா... தலைவலியா இருந்தது கொஞ்சம் தூங்கணும்'' என்றான்.

அறவாழி தூங்கப் போனான்.

தந்தையும், தாயும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

உண்மையிலேயே முதல் நாளிரவு சரியாக தூக்க மில்லை என்பதால் தலைவலித்தது. அதனால்தான் லீவு போட்டு விட்டு வந்திருந்தான். அதுவும் அல்லாமல் இன்னொரு வேடிக்கையும் அவனுக்காகக் காத்திருந்தது.

''என்னங்க...! இவனும் ஒட்டாமலே பேசறான்'' என்றார் தெய்வநாயகி கவலையுடன்.

சுந்தரவடிவேலு தோளைக் குலுக்கினார். அந்த நேரம் அழைப்பு மணி அடித்தது!

கதவைத் திறந்தார்கள்!

ஸ்மிதாவின் அம்மாவும், அப்பாவும் உள்ளே வந்தார்கள். அப்போது கூட பக்தவச்சலத்தின் முகத்தில் வித்தியாசம் தெரிந்தது. வாய் கோணிக் கொண்டிருந்தது.

சுந்தரவடிவேலு முகத்தைச் சுருக்கிக் கொண்டு மனைவியைப் பார்த்தார். தெய்வநாயகிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. விழித்தார்.

"வணக்கம்மா!" என்றார் துளசிமணி.

"வணக்கம்...! உட்காருங்க!" என்றார் தெய்வநாயகி. அமர்ந்தார்கள்.

"அம்மா...! முதல்ல ரொம்ப ஆர்வமா இருந்தீங்க! ஆனா... போன வாரத்துல இருந்து ஒண்ணும் பேசவே மாட்டேங்கறீங்க! நான்தான் முதல்லயே சொல்லிட்டேனே! எங்களால சிம்பிளாத்தான் பண்ண முடியும்னு. வேற ஏதாவது எதிர்பார்க்கறீங்களோ?" என்று கேட்டார்.

துளசிமணியைப் பார்க்க அவளுக்குப் பாவமாக இருந்தது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. அறவாழி உள்ளே இருந்து வெளியே வந்தான்.

"வாங்க...!" என்று வரவேற்றான். திரும்பி அம்மாவைப் பார்த்தான். தெய்வநாயகி விதிர் விதிர்த்துப் போனார்.

சுந்தரவடிவேலுதான் துணைக்கு வந்தார்.

"தம்பி...! நான் அண்ணைக்குச் சொல்லலே... அவங்க தான்" என்றார்.

"ஓ!" என்றான். பிறகு அவர்கள் அமர்ந்திருந்த சோஃபாவுக்கு நேர் எதிரில் இருந்த சோஃபாவில் அமர்ந்தான். அதில் ஒருவிதமான உறுதி தெரிந்தது.



"அம்மா...! இவங்களுக்கு காஃபி..." என்று இழுத்தான்.

சுந்தரவடிவேலு வந்து அருகிலே அமர்ந்தார். மகனின் கையைத் தொட்டு அமர்ந்திருந்தார். அறவாழி பேச ஆரம்பித்தான்.

"அம்மா...! நீங்க மன்னிக்கணும்! எங்க அண்ணனுக்கும் குழந்தையில்லேங்கற கவலையில அம்மா இப்படியெல்லாம் ஏற்பாடு பண்ணிட்டாங்க! உங்களுக்கு நடந்த விஷயம் தெரியாதில்லே! எங்கண்ணனுக்கு இந்த விஷயத்துல ஆர்வம் இல்லே..." என்றான்.

கணவனும், மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பக்தவச்சலம் குழறிக் கொண்டு ஆரம்பித்தார்.

"என்னங்கய்யா! நினைச்சுகிட்டிருக்கீங்க? நாங்க பாட்டுக்குப் பேசாம இருந்தோம். வலிய வந்து ஆசையை வளர்த்து விட்டுட்டு இப்ப இப்படிப் பேசறீங்க?"

அறவாழிக்குக் கோபம் வந்தது.

"என்ன... என்ன ஆசை காட்டினோம். பேச்சு வார்த்தைதானே நடந்திருக்கு! உறுதியா பண்ணிட்டோம்."

அதற்குப் பிறகு வார்த்தைகள் தடித்தன! பக்தவச்சலத்துக்கு, தான் ஏதோ முக்கியமானவராக மாறிவிட்டாற் போலத் தோன்றியது போலும்! புகுந்து விளையாடி விட்டார்.

அக்கம் பக்கத்துக்காரர்கள் கூட எட்டிப் பார்த்தார்கள். சுந்தரவடிவேலு தான் இடையில் புகுந்து சமாதானப் படுத்தி அனுப்பினார். பிறகு மகனிடம் திரும்பி "என்னய்யா... இது?" என்று கேட்டார்.

''என்னப்பா பேசறீங்க? தலையிருக்க வாலாடினா என்னென்ன விளைவுகள் ஏற்படும்னு அம்மாவுக்குத் தெரிய வேண்டாமா?'' என்றான்.

கடுப்புடன் உள்ளே போனான்.

தெய்வநாயகி உண்மையிலேயே திகைத்துப் போனவராய் கணவனைப் பார்த்தார்.

''இப்படித்தான் நடக்கும்!'' என்று முணுமுணுத்து விட்டு அவரும் இன்னொரு அறைக்குள் போய் முடங்கினார்.

தெய்வநாயகி நொந்து போனார்.

'பாவம்...! அந்த ஸ்மிதாப் பொண்ணு! கல்யாணம் ஆகாத கன்னிப் பொண்ணு. வயது கொஞ்சம் கூட இருந்தாலும் நல்ல பொண்ணு. அவ மனசுலயும் தேவையில்லாமல் ஆசையை வளர்த்துட்டமோன்னு தோணுது' என்று கவலையில் ஆழ்ந்து போனார்.

எதுக்குமே உதவாதவர் என்று வருணிக்கப்பட்ட பக்தவச்சலம் என்னவோ கேள்வி கேட்டு விட்டுப்போன விதம் பார்த்தால் நாம் ஏதோ விஷயத்தில் மாட்டிக் கொண்டோம் என்று தோன்றியது.

அப்படித்தான் குரங்கு போல அவர் விழித்துக் கொண்டு இருக்கையில் அமர்ஜித்தும் சித்ரமாலாவும் தாங்கள் திட்டமிட்டபடி எல்லா ஏற்பாடுகளும் செய்து கொண்டிருந்தார்கள் என்றால் யாரைப் பற்றிக் கவலைப்பட்டாரோ அவள் வேறு விதமான மனநிலையில் இருந்தாள்.

''அப்படியா... சொல்றீங்க? மாற்றமில்லையே! உறுதியா யோசிச்சுக்கிட்டீகளா?'' என்று ஒரு இளைஞரிடம் கேட்டுக் கொண்டிருந்தாள்.



''கண்டிப்பா! என் வாழ்க்கையையே உங்கிட்டே ஒப்படைச்சுட்டேன். புரிஞ்சு நடந்துக்க!'' என்று அவன் உல்லாசமாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.

சற்று நேரத்திற்குப் பிறகு அந்த இளைஞனின் பைக்கில் ஏறி அமர்ந்தாள். இருவரும் சிரித்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினார்கள்.

## 10

''தெய்வநாயகி... நான் சொல்லப் போறதைக் கேட்டு மனசைத் தேத்திக்கோ...'' என்றார் சுந்தரவடிவேலு.

தெய்வநாயகி கொஞ்சம் பயத்துடனேதான் இந்த வார்த்தைகளை எதிர்கொண்டார்.

''சொல்லுங்க...'' என்றார் குரலே எழும்பாத குரலில்.

''தெய்வா! உன் பெரிய மகனும், மருமகளும் தனிக்குடித்தனம் போறதா இருக்காங்களாம். அதுவும் இந்த விஷயத்துல தீர்க்கமான முடிவு உன் பெரிய மகனோடதுதான். இதைவிடக் கொடுமை என்னன்னா... இந்த விஷயத்தை நம்ம மகன் நம்ம கிட்டே சொல்லலே! மருமகதான் ஃபோன் பண்ணிச் சொன்னா'' என்றார்.

தெய்வநாயகி தலையிலே இடி விழுந்தாற்போல அமர்ந்துவிட்டார்.

'நான் முதல்லயே சொன்னேன். நீ கேட்கலை. ஏதோ வட நாட்டு கிராமங்கள்ல அப்படி நடக்குது இப்படி நடக்குதுன்னு பாத்துட்டு நீ இங்க வந்து அதே மாதிரி நடக்கணும்னு நினைச்சா முடியுமா. மருமக படிச்ச

பொண்ணா இருந்தாலும் ரொம்ப பண்பாத்தான் நடந்து கிட்டா. உன்னைத் தாயா பாத்துகிட்டா... ஆனா... நீ...வாய்ப்புக் கிடைச்சவுடனே மாமியார்னு காட்டிட்டே. உன் மகனையும் நீ புரிஞ்சுக்கலே!'' என்றார்.

தெய்வநாயகிக்கும் பேச்சே எழவில்லை. பேச வாயெழாமல் மேலும் கீழும் தலையாட்டினார். சுந்தர வடிவேலு தொடர்ந்தார்.

''சொல்லப் போனா... உன் மகனுக்குத்தான் ரொம்ப வருத்தம். அவன் அறவாழிகிட்டே சொன்னானாம். ''அம்மா... என்னடா... என்னை விளையாட்டு பொம்மைனு நினைச்சாங்களா? இத்தனை நாள் என் வொய்ஃபோட வாழ்ந்த வாழ்க்கைக்கு என்னடா அர்த்தம் அவளை மனுஷியாத் தெரியலியா! இல்லை என்னைத்தான் மனுஷனாத் தெரியலியான்னு அது மட்டுமில்லை... என் மேலயும் கோபம்...! அப்பா எப்படிடா... இதையெல்லாம் வேடிக்கை பாத்துகிட்டு இருந்தாங்க'' அப்படீன்னு கேட்டானாம்.''

''... ...?''

''அதான்டா! மாமனார் வீட்டுக்குப் பக்கத்துலயே ஒரு வீடு பாத்துருக்கேன். சித்ரா அங்கயே இருக்கட்டும். கொஞ்ச நாளைக்கு நான் நம்ம வீட்டுக்கு வரலை. வந்தா வார்த்தை தடிக்கும்! அப்பாகிட்டேயோ அம்மாகிட்டயோ நான் எதுவும் ஏடாகூடமாப் பேச விரும்பலை... அப்படீன்னானாம்.''

''ஓஹோ... சித்ரா இதுக்கு ஒத்துக்கிட்டாளாம்?'' என்றார்.

''பின்னே? அவளைப் பேசவே விடலையாம். நீ வச்ச வேட்டே அந்தப் பொண்ணுக்குத்தான். இருந்தாலும்



அந்தப் பொண்ணு உனக்கு சப்போர்ட்டாதான் பேசியிருக்கு...'' என்றார்.

தெய்வநாயகிக்கு யாரோ ''பட'' பட்டென்று அறைந்தாற் போல இருந்தது. அப்படியே அமர்ந்துவிட்டார்.

''இப்ப என்ன செய்யப் போறே?'' என்று கேட்டார் சுந்தரவடிவேலு.

''என்னங்க...? என்ன செய்யப் போறேன்னு சம்பந்தமில்லாதவங்க மாதிரிக் கேட்கறீங்க?'' என்றார் தெய்வநாயகி.

''ஆமா... பின்னே? என்னை என்ன செய்யச் சொல்றே! நான் சொன்ன எதையுமே நீ கேட்கலை. நீ பாட்டுக்கு என்னவோ திட்டம் போட்டே...! இப்ப இப்படி அடி வாங்கிட்டு உட்கார்ந்திருக்கே...'' என்றார்.

அந்த நேரத்தில் தெய்வநாயகியைப் பார்க்க அவருக்கே பாவமாக இருந்தது.

''அது மட்டுமா ஒண்ணுத்துக்கும் ஆகாத குடிகாரன் எல்லாம் வந்து மிரட்டிட்டுப் போறான்'' என்றார்.

தெய்வநாயகிக்கு முகத்தில் பீதி கிளம்பியது.

''இப்ப என்னங்க... பண்றது?'' என்றார்.

சுந்தரவடிவேலு நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

''நாம என்ன பண்றது?'' என்று சற்று நேரம் மௌனம் சாதித்தவர்,

''வேண்ணா... ஒண்ணு செய்! அறவாழிகிட்டே பேசு. நான் செஞ்சதெல்லாம் தப்புன்னு சொல்லு! அவன் ஏதாவது ஏற்பாடு செய்வான்'' என்றார்.

தெய்வநாயகியின் முகத்தில் நிம்மதி தெரிந்தது.

"ஆமாங்க! அறவாழி ரெண்டு திட்டுத் திட்டினாலும் கைவிட மாட்டான்" என்றார்.

பெரியமகன் கைவிட்டு விட்டான் என்ற வருத்தம் தெரிந்தது. அதைப் புரிந்து கொண்ட கணவர் சொன்னார்.

"உன்னோட பெரிய மகனும் உன்னைக் கைவிடலை! நீ தான் எல்லை மீறி நடந்துகிட்டே!" என்றார்.

தெய்வநாயகி ஒத்துக் கொண்டார். இப்போதைக்கு எப்படியாவது மகன் தன்னை இந்தப் பிரச்சினையில் இருந்து விடுவித்து விட்டால் போதும் என்று எண்ணினார்.

அன்றைக்கெல்லாம் இதைப் பற்றியே மீண்டும் மீண்டும் பேசினார்கள்.

அப்போதுதான் தெய்வநாயகி அந்த யோசனையைச் சொன்னார்.

"ஏங்க...! பெரியவனோட கோபத்தைச் சமாளிக்கிறதுக்கு ஒரு வழி இருக்குங்க! பேசாம சின்னவனுக்கு ஒரு பொண்ணைப் பார்க்கலாம். கல்யாண ஏற்பாடுன்னு செஞ்சா... அவன் வந்து முன்னாலே நின்னுதானே ஆகணும்" என்றார் ஆர்வமாக.

சுந்தரவடிவேலு சிரித்தார். "நீ இன்னும் காதைச் சுத்தி மூக்கைத் தொடற வேலையை விடமாட்டேங்கற?"

"சரி பார்க்கலாம்" என்றார்.

அறவாழி வேறு விதமாக அதிர்ச்சி வைத்திருப்பான் என்று பாவம் அப்போது அவர்களுக்குத் தெரியவில்லை.

* * *

அறவாழி அன்றைக்கு வரும்போது ஒன்பதரை மணி ஆகிவிட்டது.



தனக்காக சாப்பிடாமல் அமர்ந்திருக்கும் அம்மாவைப் பார்த்தவுடன் அவனுக்கு உள்ளுக்குள் சிரிப்பு.

"என்னம்மா?" என்றான்.

"நீ சாப்பிடலையே. அதுக்காக உட்கார்ந்திருக்கேன்" என்றார் அம்மா.

"ஓஹோ! நான் ஆஃபீஸ்ல லைட்டா சாப்பிட்டேன். வொர்க் இருந்துச்சு. அதான் பரவால்லே! நீ ஆசையா உட்காந்துகிட்டிருக்கே..." என்று சாப்பிடப் போனான்.

அம்மா அவனுக்குப் பிடித்த பூரியும் உருளைக் கிழங்கும் செய்திருந்தார். அவனும் ருசித்து சாப்பிட்டான்.

அவன் அருகிலேயே அமர்ந்து பரிமாறினார் தெய்வநாயகி.

சாப்பிட்டு முடித்துவிட்டு, "அம்மா...! மசால் சூப்பர்ம்மா..." என்று பாராட்டினான் மகன்.

"சரிம்மா... நான் ரூமுக்குப் போறேன்" என்று போனான். அம்மாவும் பின்னாலேயே போனார்.

"தம்பி...! நான் உன்கிட்டே பேசணும்..." என்றார்.

ரொம்பவும் வேலையிருப்பவன் போல வாட்சைப் பார்த்தான் அறவாழி.

"கொஞ்சம் வேலையிருக்கேம்மா..." என்றான். அம்மாவின் முகத்தைப் பாத்துவிட்டு "சரிம்மா...!" உட்காரு...! என்றான்.

அமர்ந்தார்.

"தம்பி...! ரெண்டு நாளைக்கு முன்னாலே... ரெண்டு பேர் வந்தாங்களே..." என்று ஆரம்பித்தார். அறவாழிக்குக் கோபம் பொங்கிக் கொண்டுதான் வந்தது.

ஆனால் இப்போதே பொங்கி விட்டால் பின்னாலே தனக்கும் ஆக வேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறதே.. அதற்காகப் பொறுமையாகப் போவோம் என்று எண்ணி அமைதியானான்.

தெய்வநாயகி மனசைத் திறந்த வெள்ளம் போல கொட்டித் தீர்த்துவிட்டார். கடைசியில்,

"அமர்ஜித் வேற கோபிச்சுக்கறான் தனிக்குடித்தனம் போறானாம். அந்தப் பொண்ணு வீட்டுக்காரங்க வேற நெருக்கறாங்க. என்ன செய்றதுன்னே தெரியலே..." என்று அழுதே விட்டார்.

கொஞ்ச நேரம் அழவிட்டான் அறவாழி. பிறகு பேசி னான்.

"அம்மா...! அண்ணன் கொஞ்ச நாளைக்கு உங் களைச் சந்திக்காம இருக்கறதுதான் நல்லது. ஏன்னா... ரொம்பக் கோபத்துல இருக்காரு. நேரில் சந்திச்சா சங் கடம்தான். விட்டுடுங்க" என்றான்.

அம்மா அழுகையை நிறுத்தி விட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

"அம்மா...! அண்ணனும், அண்ணியும் ரொம்ப அன் பான தம்பதிங்கம்மா! நீங்க பாட்டுக்கு விளையாட்டுப் பிள்ளைங்க மணல்வீடு கட்டின மாதிரி என்னென்னவோ திட்டம் போடறீங்க. சரி வருமா! அது மட்டும் இல்ல...! இப்படிக் கொஞ்சம் யோசனை பண்ணிப் பாரு...! அப்பா... அந்தக் காலத்துல இந்த மாதிரி செஞ்சிருந்தா நீங்க எப்படி ஃபீல் பண்ணியிருப்பீங்க?" என்றான்.

அம்மா முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண் டார்.



"சரி விடும்மா...! போனது போகட்டும் ஆகறதைப் பார்ப்போம்" என்றான்.

"தம்பி..!" என்று மறுபடியும் தயாரானார் அம்மா.

"என்னம்மா..." என்றான் மகன்.

"அந்த ஸ்மிதா. வீட்ல வேற ரொம்பக் கோபமா இருக்காங்க! அந்தப் பொண்ணு மனசுலயும் ஆசையைத் தூண்டி விட்டுட்டேன்" என்றார் வருத்தத்துடன்.

"வருத்தப் படாதீங்க.. அம்மா! அந்த விஷயத்தை நான் பார்த்துக்கறேன்" என்றான்.

அம்மா நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

அவனது பாசம் அவனையும் மீறிப் பொங்கியது. அம்மாவின் தலையைத் தடவிக் கொடுத்தான்.

"போதும்மா! இனிமேல் என்ன திட்டம் போட்டாலும் எல்லார்கிட்டயும் கலந்தாலோசித்துட்டுத் திட்டம் போடுங்க" என்று சிரித்தார்.

சுந்தரவடிவேலு இந்நேரமும் அறை வாயிலில் நின்று கொண்டு இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந் தவர் சேர்ந்து சிரித்தார்.

இந்த நேரத்திலேயே தன்னுடைய அடுத்த கோரிக் கையை வைத்தார் தெய்வநாயகி.

"தம்பி! இப்ப கோபம் எல்லாம் தீர்ந்து எல்லோரும் மறுபடியும் சேரணும்னா... அதுக்கு ஒரு வழி இருக்கு.. அது என்னன்னா.." என்று இழுத்தார்.

"சொல்லும்மா.." என்றான் அறவாழி.

"ஒரே வழி.. என்னன்னா..! உனக்குக் கல்யாணம் பண்ண வேண்டியது தான்" என்றார்.

மகன் கடகடவென்று சிரித்தான்.

''நல்லா.. ஆச்சும்மா..!'' என்றான்.

''இல்ல தம்பி..! நிஜமாத்தான்'' என்றார்.

''அம்மா..! அவசரப் படாதீங்க! முதல்ல.. அந்த [illegible] தாவுக்கு ஏதாவது வழி பண்ணனும். நாங்க [illegible] சில ஏற்பாடுகள் ஏற்கனவே பண்ணியிருக்கோம் [illegible] என்றான்.

''நாங்களா?''

''ஆமா! ஸ்மிதா வேற யாருமில்லே. அண்ணியோட ஃப்ரெண்டு நிவேதிதா இருக்காங்க இல்லே! அவங் களோட ஃப்ரெண்டுதான்.''

''ஓஹோ..!'' அவங்களுக்கு இதெல்லாம் தெரியுமா?'' என்றார் அம்மா.

''ஆமா! ஸ்மிதா..வே சொல்லியிருக்காங்க! அப்பத்தான் விஷயமே என் காதுக்கு வந்தது. அதனால் தான் வேற ஒரு ஏற்பாடு செஞ்சோம்'' என்றான்.

குகப்பிரியாவின் வீட்டுக்கு ஸ்மிதா வந்திருந்த போது அந்த இளைஞனும் வந்திருந்தான். மனோஜ் என்று பெயர்.

நிவேதிதாவுடன் வேலை செய்பவர். மனைவி இல்லை யென்று தெரியும் ஒரு குழந்தை இருக்குது. ''எதற்கும் முயற்சி செய்து பார்ப்போம்'' என்று அவனிடம் பேசி னார்கள் குகப்பிரியாவும், நிவேதிதாவும்.

மனோஜ் முதலில் கொஞ்சம் தயங்கினார். ''நான் கல்யாணமே பண்ணிக்க வேண்டாம்னு நினைக்கிறேன். ஏன்னா.. வர்றவ இந்தக் குழந்தையை எப்படி வைச்சுப் பான்னு தெரியலியே'' என்றான்.



குகப்பிரியா சொன்னாள். ''சார்! நீங்க சொல்றது [illegible]தான். ஸ்மிதாக்கா ரொம்ப நல்லவங்க! கஷ்டப் [illegible] குடும்பத்துல இருந்து வர்றாங்க. வாழ்க்கையோட [illegible]ங்களைத் தெரிஞ்சவங்க. அதனால.. கண்டிப்பா நீங்க அவங்களைக் கல்யாணம் பண்ணிக்கலாம்'' என்றாள்.

நிவேதிதாவும் தன் பங்குக்கு ''மனோஜ்.. சார்! என்ன இருந்தாலும் ஒரு குழந்தையை நல்லபடியா வளர்க்கற துக்கு ஒரு பொண்ணும் வேணும்! ஸ்மிதாவைக் கல்யாணம் பண்ணினா அந்த நோக்கமும் நிறைவேறும்'' என்றாள்.

கொஞ்சம் கொஞ்சமாக மனோஜ் மனமும் அசைய ஆரம்பித்தது. சிந்திக்க ஆரம்பித்தான். குகப்பிரியா அற வாழியிடம் இது பற்றி பேசினாள்.

அறவாழி உற்சாகமானான். ''செகண்ட் வைஃபா ஆகற துக்கு ஸ்மிதா ஒத்துப்பாங்களா?'' என்று கேட்டவன் நாக்கைக் கடித்துக் கொண்டான்.

தன் அண்ணன் விஷயத்தில் இதுதானே ஏற்பாடு என்று நினைவுக்கு வரவும் தான் அப்படி ஒரு கேள்வி. ''சரி.. அடுத்தது.. நாம மனோஜையும், ஸ்மிதாவையும் சந்திக்க வைப்போம்'' என்றான்

அதற்காகத்தான் ஸ்மிதா குகப்பிரியாவின் வீட்டில் இருக்கிற நேரமாகப் பார்த்து மனோஜை வரவேற்றார்கள் மனோஜுக்கு ஸ்மிதாவைப் பிடித்தது.

அடுத்த கட்டப் பேச்சு வார்த்தையில் தான். அவர் களே எதிர்பாராத அந்த விஷயம் வெளியானது.

அறவாழி விவரமாகச் சொல்லவும் அம்மா மிக... அக்கறையோடு கேட்டுக் கொண்டார். தான் பட்... விளையாட்டுத் தனமாக சிக்கல் முடிச்சுகளைப் போட்... கொண்டிருந்தாலும், மகன் அக்கறையுடன் அந்த முடிச்சுகளை அவிழ்ப்பதற்கான செயல்களில் ஈடுபட்டு... கொண்டே வந்திருக்கிறான் என்பது புரியவும் மன... நெகிழ்ந்து போனார்.

சுந்தரவடிவேலுவும் கூட கொஞ்சம் வெட்கிப் போனா... இந்த விஷயத்தில் தான் தன் கடமையைத் தாம... மாகத்தான் செய்ய ஆரம்பித்தோம் என்பது புரிந்த... ஆனால் இளையமகன் சிந்தித்து சிந்தித்துக் காரிய... களைச் செய்திருக்கிறான் என்பது புரிந்த போது பெருமிதம் அடைந்தார்.

''நல்ல வேலை செஞ்சப்பா!'' என்று பாராட்டினார்.

''அப்பா..! இப்ப நீங்க ஒரே வரியில் மேட்டரை முடிச்சுட்டீங்க! ஆனா.. அதை முடிக்கறதுக்காக நாங்க எவ்வளவு திட்டம் போட்டோம் தெரியுமா? சும்மா சொல்லக் கூடாது. அந்த குகப்பிரியா இதுக்காக ரொம்ப மெனக்கெட்டாங்க'' என்று குகப்பிரியாவைப் பற்றியும் போட்டு வைத்தான்.

''பாவம்! நல்ல பொண்ணு..!'' என்றார் அம்மா.

அப்பாவிடமும் ''ஆமா..! குடும்பத்துக்கேத்த பொண்ணு'' என்றான். ஆனால் முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல்.

அப்பாவுக்கு ஏதோ புரிகிற மாதிரி இருந்தது. தெய்வ நாயகிக்கு அதுவும் புரியவில்லை. அவர் தன் பிரச்சினை யிலேயே ஆழ்ந்திருந்தவர் சட்டென்று பூமிக்கு வந்தாற் போல.



''எம்பா! இனிமே அந்தத் துளசிமணியம்மா நம்ம கிட்ட தகராறுக்கு வரமாட்டாங்க இல்லே!'' என்று கேட் டார்.

''எதுக்கு வரப் போறாங்க! அதுக்குத்தான் வேண்டிய ஏற்பாடெல்லாம் பண்ணியாச்சே!'' என்றான்.

இப்போது சட்டென்று அப்பா குறுக்கிட்டார்.

''என் தம்பி..! அப்ப நீ: அம்மா சொன்ன யோச னையப் பற்றி என்ன நினைக்கிறே..? என்றார்.

''என்ன யோசனை?''

''அதான்..! நீ கல்யாணம் பண்ணிக்கலாமே இது வரைக்கும் அம்மா சொன்ன யோசனைகள்லயே இது தான் நல்ல யோசனையா எனக்குத் தெரியுது.''

''......!''

''கோபதாபங்கள் ஆறும். எல்லாரும் ஒண்ணாச் சேர்ந்து நல்ல காரியத்துல ஈடுபடும்போது சுமுகமும் வரும்!''

அறவாழி இப்போது தயக்கத்துடன் இழுத்தான்.

''அந்த மனோஜ் விஷயத்துல இன்னொரு சஸ்பென் ஸும் இருக்குப்பா..!''

''அதை விடப்பா..! அதான் கல்யாணம் முடிவாயிருக் கில்ல! மத்த சஸ்பென்ஸெல்லாம் அப்புறம் பார்த்துக் கலாம். நீ உன் முடிவைச் சொல்லு..'' என்றார்.

அறவாழி நிமிர்ந்து இப்போது தாய் தந்தையைப் பார்த் தான்.

''பண்ணிக்கிறேன்.. ஆனா ..!'' என்று இழுத்து நிறுத் தினான். மேற்கொண்டு அவன் சொல்வதைக் கேட்ட தாய் தந்தையர் சிந்தனையில் ஆழ்ந்தார்கள்.

அதே நேரம்!

குகப்பிரியாவும் அவள் வீட்டில் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

## 11

சுற்றிலும் நோட்டுப் புத்தகங்கள் இருந்தன!

திருத்துகிறேன் பேர் வழி என்று அமர்ந்து கொண்டிருந்தாள் குகப்பிரியா. ஆனால் மனம் ஏனோ அதில் செல்ல மறுத்தது.

எப்படியோ ஸ்மிதா அக்காவின் பிரச்சினை முடிந்தது. அது குறித்து மனம் அமைதி தானே அடைய வேண்டும். ஆனால் அமைதி அடைய மறுக்கிறதே.

ஒரு பக்கம் சந்தோஷமாக இருந்தது. நடக்க இருக்கிற கல்யாணத்தை நிறுத்தி விட்டீர்களே என்று ஸ்மிதாவின் பெற்றோர் தங்கள் மேல் பாய்ந்தால் என்ன செய்வது என்ற பயம் நிவேதிதாவுக்கும், குகப்பிரியாவுக்கும் இருந்தது. ஆனால் மலை போல் வந்த துன்பம் பனிபோல் விலகினாற் போல பிரச்சினை சுமுகமாக இப்படி முடிந்ததால் குகப்பிரியா உண்மையில் மகிழ்ச்சிதானே அடைய வேண்டும். விடுதலையுணர்வுதானே இருக்க வேண்டும்.

மாறாக மனத்தில் ஒரு வெற்றிடம் தோன்றுகிறதே? அதிலும் ஸ்மிதாவுக்கும் மனோஜுக்குமான கல்யாணப் பேச்சு வார்த்தையில் இன்னொரு சுவாரசியமான திருப்பமும் கூட சேர்ந்திருந்தது.



ஸ்மிதாவும், மனோஜும் தனியாகப் பேசிக் கொள்வது நல்லது என்று சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தாள் அவர்களும் சந்தித்தார்கள்.

மனோஜிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தாள் ஸ்மிதா.

''ஸ்மிதா நல்ல பிளேயராமே?'' என்று ஆரம்பித்தான் மனோஜ்.

''ம்..!''

''என்னென்ன கேம் விளையாடுவீங்க?'' என்றான்.

''வாலி பால், ஃபுட்பால், த்ரோபால், எல்லாமே'' என்றாள் ஸ்மிதா.

''கொஞ்சம் எச்சரிக்கையாகத்தான் இருக்கணும் போல இருக்கு'' என்றான் அவன். புரியாமல் விழித்தாள்.

''இல்லே கோபத்துல பாத்திரம் கீத்திரம் எடுத்து வீசினீங்கன்னா குறி பாத்து இல்ல அடிப்பீங்க'' என்றான்.

அவள் சிரித்து விட்டாள்.

''அப்பாடா! சிரிச்சுட்டீங்க!'' என்றான். அவள் புன்னகைத்தாள்.

''சரி..! உங்களைப் பத்திச் சொல்லுங்க'' என்றாள்.

''எல்லாம் ஏற்கனவே உங்களுக்குத் தெரிஞ்சதுதான்.''

''ஆனா.. எனக்குத்தான் கொஞ்சம் கவலையாய் இருக்கு!'' என்றாள்.

''என்ன கவலை?''

''இல்லே! நீங்க உங்க ஃபர்ஸ்ட் வைஃபோட ரொம்ப மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்திருக்கீங்க! அதனால

தான் இத்தனை நாள் கல்யாணம் வேண்டாம்னு சொல்லியிருக்கீங்க! உங்க எதிர்பார்ப்புக்கு... நல்ல..."

அவன் குறும்பாகப் புன்னகைத்தான்.

"அதை விடுங்க! உங்களுக்கு வெடி.. சிவகாசி தெரியுமா..?" என்றான்.

அவள் விழிக்க.. அவன் தொடர்ந்தான்.

"எனக்கும் இது முதல் கல்யாணம்தாங்க" என்றான். அவள் ஆச்சரியமாய்ப் பார்க்க அவன் புன்னகைத்தான்.

"ஆமாங்க..! ஒரு லட்சியம்னு வச்சுக்குங்களேன். கல்யாணம் வேண்டாம். ஆனா.. ஒரு அனாதைக் குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்கணும்னு அதைத்தான் இப்ப நான் செஞ்சுகிட்டிருக்கேன். என் பையன் இருக்கானே விக்னேஷ்.. ஹி இஸ் நாட் மை ஓன் சன். ஆனா என் மகன் வளர்ப்பு மகன்" என்றான்

அவள் முகத்தின் பாவத்தில் அவன் மேல் மதிப்புத் தோன்றியது.

"ஆமாங்க..! அப்புறம் குகப்பிரியாதான் உங்க லட்சியத்தோட இதையும் சேர்த்துக்குங்க. ஸ்மிதாக்கா மாதிரி ஒரு நல்ல பொண்ணுக்கு வாழ்க்கை குடுக்கணும்னு அதையும் சேர்த்துக்கங்கன்னு சொன்னாங்க."

மிகக் கவனமாக ஒரு ஏழைப் பொண்ணுக்கு ஒரு பெண்ணுக்கு வாழ்க்கை கொடுப்பது என்று சொல்வதைத் தவிர்க்கிறான் என்று தோன்றியது.

அவன் தொடர்ந்தான். "முக்கியமா... நான் ஏன் உங்களைச் சந்திக்கணும்னு நினைச்சேன்னா... இந்த லட்சியத்துக்கு நீங்க எப்பவும் உறுதுணையா இருக்கணும்.



நமக்கே குழந்தைகள் பிறந்தாலும் அவன்தான் நம்ம மூத்த மகன், அதுக்கு ஒத்துக்கணும்" என்றான்.

"கண்டிப்பா...! உங்களையும், அவனையும் ரெண்டு கண்ணாப் பாத்துக்குவேன்" என்றாள்.

"அப்புறம்! நம்ம குழந்தையை என்ன செய்வீங்க... மூக்கா... வச்சுப்பீங்களா" என்றான் அவன் சிரிக்காமல்.

அவள் சிரித்து விட்டாள். "மூச்சா வச்சுப்பேன்" என்றாள்.

"குட்... தட்ஸ் ரியலி குட்! நல்லா சமாளிக்கிறீங்க" என்றான். மேலும் தொடர்ந்து.

"ஆமா...! அது எப்ப நடக்கும்?"

"எது?"

"நமக்கு குழந்தை பிறக்கறது?" என்றான். அவன் சிரிக்காமல் ஜோக் அடிக்கக் கூடியவன் என்று புரிந்து கொண்டிருந்தாள்.

"நமக்கு கல்யாணம் நடந்தப்புறம்" என்று அவளும் சிரிக்காமல் சொன்னாள்.

இப்போது அவன் சிரித்தான். இப்படியே கலகலப்பும் சிரிப்புமாக தாங்கள் பெரிய பேசிய பேச்சுக்களை அவன் பகிர்ந்து கொண்ட போது குகப்பிரியாவும் நிவேதிதாவும் மகிழ்ந்து போனார்கள்.

இப்படி முடிந்த விஷயம் உண்மையில் அவளுக்கு மன நிறைவைத்தானே தர வேண்டும்? ஆனால் ஏதோ அவளுக்குக் குழப்பம் தோன்றியது.

சட்டென்று பொறி தட்டியது.

ROHINI

காரணம் காரணம்... என்னவென்றால் இந்தப் பிரச் சினைக்கு முடிவு தெரிந்துவிட்டால் எந்தக் காரணத்தை வைத்துக் கொண்டு அறவாழியை சந்திக்க முடியும் என்பதுதான் கவலை என்று தெரிந்தது.

திடுக்கிட்டுப் போனாள்.

“இது என்ன...! நானே எப்படி மாப்பிள்ளை செலக்ட் பண்ண முடியும்? பெரியவங்க இருக்காங்க இல்லே...!” என்ற பயம் தோன்றியது.

உடனே மனதுக்கு சமாதானம் சொல்லிக் கொண் டாள்.

அறவாழியை எல்லாருக்கும் பிடிக்கும். அப்பா கூட அன்னைக்கே சொன்னாரே? அறவாழி ரொம்ப நல்லவர் என்று.

“அதனாலே...?” என்று இன்னொரு மனது கேள்வி கேட்டது.

“நல்லவர் என்று ஒரு இளைஞரைச் சொல்லி விட்டால் பொண்ணைத் தூக்கிக் கொடுப்பார்களா?”

“ஏன் கொடுக்க மாட்டார்கள்? எத்தனை பணம், வசதி என்று இருந்தாலும் நல்ல குணம் உள்ள மாப்பிள்ளைகள் கிடைப்பதுதானே பெரிய கஷ்டமாக இருக்கிறது.”

வாதப் பிரதிவாதங்களை மீறிய ஒரு குளிர்ச்சி மனதில் தோன்றியது. அறவாழி கூட அவ்வப்போது ஒரு மாதிரி தானே பார்க்கிறார். லேசாகக் கணைவிட்டாற் போல வார்த்தைகளை விட்டுப் பார்க்கிறார். கண்டிப்பாக எண்ணம் இருக்கும் போல இருக்கிறது. “நீங்களே வந்து



பெண் கேளுங்க” என்று கோடி காட்டி விட்டாற் போதாதா?”

“அவரிடம் எப்படி நேரடியாகக் கேட்பது?” என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கையிலேயே அறவாழி யிடமிருந்து போன் வந்தது.

“ஹலோ...!” என்றாள்.

நேரம் பார்த்தாள். இரவு எட்டு மணி.

“மேடம்... குகப்பிரியா?” என்றான்.

“சார்... மேடம்... எல்லாம் எதுக்கு? சும்மா குகப்பிரி யான்னே கூப்பிடுங்க” என்றாள்.

“நீங்க மட்டும் சார்ன்னு கூப்பிடலாமா?” என்றான்.

“நீங்க என்ன இருந்தாலும் பெரியவங்க.”

“மேடம்...! ஒரு காலேஜ்ல லெக்சரரா இருக்கீங்க... இப்படி ஆர்த்தடாக்ஸா இருக்கீங்க...”

“சரி! அறவாழின்னு கூப்பிடறேன்” என்றாள். குரல் குழைந்தது “சொல்லுங்க... என்ன விஷயம்?” என்றாள்.

“இல்லே...! ஸ்மிதாவுக்கும் மனோஜ்க்கும் மேரேஜ் டேட் ஃபிக்ஸ் பண்ணியாச்சு... ரெஜிஸ்டர் மேரேஜ்” என் றான்.

“ரியலி....?” என்று அவள் குதூகலமானாள்.

“ஆமா...! விஷயம் தெரியுமா? மனோஜ் நமக்கு நண்பராயிட்டார் தெரியுமா? முதல்ல லட்சியம்னு அதைப் பத்தி மட்டுமே பேசுவார். இல்லே இப்ப என்ன டன்னா கவிதையெல்லாம் கோட் பண்றார் தெரியுமா?”

''என்னுடையது என்று

நினைத்திருந்தான்

இதுவரையில்

வளர்த்து வந்தேன்

ஆனால்

முதல் முறை

உன்னைப் பார்த்ததுமே

பழக்கப்பட்டவர் பின்னால் ஓடும்

நாய்க்குட்டி மாதிரி

உன் பின்னால் ஓடுகிறதே

இந்த மனசுன்னு''

ஒரு கவிதை தபூ சங்கர் எழுதினது கோட் பண்ணினார். நான் என்ன பண்ணினேன் தெரியுமா? ''விழியீர்ப்பு விசை''ங்கற அந்தக் கவிதைத் தொகுப்பை விலைக்கு வாங்கிட்டேன்.''

அவள் எதும் பதில் பேசவில்லை என்றவுடன் அவனுக்குள் அச்சம் எழுந்தது.

''மேடம்...! என்னடா... இப்படிக் கவிதையைச் சொல்றானேன்னு தப்பா நினைச்சுட்டீங்களா?'' என்றான் பதைப்புடன்.

''இல்லல்லே! கவிதை பிடிக்கும்... சொல்லுங்க'' என்றாள்.

அவளிடமும் குரலில் குழைவு தெரிந்தது. அவன் மனதில் நிம்மதி தோன்றியது.



''இன்னொரு கவிதை சொல்லட்டுமா?'' என்றான்.

''ம்...!''

''எனக்குப் பெண் கிடைப்பது

முக்கியமில்லை

என் காதலுக்கொரு

காதலி கிடைக்க வேண்டும்''

என்றான்.

''ம்...!'' என்றாள். தொண்டையில் விக்கினாற் போல உணர்ந்தாள்.

''என்னிடம்

கொட்டிக் கிடக்கும் காதலை

எதைக் கொடுத்தும்

வாங்கி விட முடியாது

காதலைத் தவிர''

என்றான்.

''....''

''குகப்பிரியா?'' என்றான் குழைந்து போன குரலில்.

''ம்...!''

''ஏதாவது புரியுதுங்களா?''

''என்ன புரியணும்?''

''இல்லே.. கவிதை புரியுதா?''

''கவிதை புரியுது. கவிதை சொன்ன ஆளையும் புரியுது...!'' என்றாள். தன்னை மீறிய துணிச்சலுடன். ஒரு

சுமையான மௌனம் நிலவியது. பிறகு அவன் ... வென்று சிரித்தான்.

‘‘அப்பாடா...!’’ என்றான்.

‘‘என்னவாம்?’’

‘‘எல்லாமே ஓ.கே. ஆயிடுங்கறது புரிஞ்ச ... தோஷம்... ப்ரியா’’ என்றான்.

‘‘ஒண்ணும் புரியவே இல்லையே?’’ என்றாள்.

‘‘புரிய வைப்போம்! புரிய வைப்போம் முதல்ல நாம பேசுவோம். அந்த மருதமலைக் கோவில்ல! ஓ.கே. குட்நைட்’’ என்றான்.

எல்லை மீறிப் பேசி விடுவோமோ என்ற பயத்தில்தான் அவன் அப்படி வைக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

இன்னொரு பக்கமும் அதே போலப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்தது.

மனோஜும், ஸ்மிதாவும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

‘‘பையன் தூங்கிட்டானா?’’ என்றாள் ஸ்மிதா.

‘‘பையன் தூங்கிட்டான் ஸ்மிதா...! பையனோட அப்பாவுக்குத்தான் தூக்கமே வர்லே’’ என்றான் மனோஜ்.

‘‘அந்த ஆளா? அவரு என்னமோ கல்யாணமே வேண்டாம்னு சொல்லிகிட்டிருந்தாராம். இப்ப என்ன இப்படிக் கடலை போடறாரு...’’ என்றாள்.

‘‘அந்த ஆளா? ஏய்...!’’ என்று சிரித்தான். மனோஜ் பிறகு ‘‘பையனுக்கு ஏகமா ஐஸ் வச்சுட்ட மாதிரி தெரியுது. ஸ்மிதாம்மா... எப்ப வருவாங்க வீட்டுக்குன்னு குடைய றான்’’ என்றான்.



‘‘ஆமா...! அவனை இன்ஃப்ளுயன்ஸ் பண்ணினாத் தானே வீட்ல குப்பை கொட்ட முடியும்’’ என்றாள்.

‘‘விவரமான ஆள்தான் நீ’’ என்று மனோஜ் சிரித்தாலும் கொஞ்ச நாள் பழக்கத்திலேயே அவள் தனது வளர்ப்பு மகனை மிகவும் நேசிக்கிறாள் என்று தெரிந்தது அன்றைக்கொரு நாள்!

‘‘ஏங்க...! பேசாம நாம குழந்தை வேண்டாம்னு ஆபரேஷன் பண்ணிப்போமா?’’ என்றாள்.

அவன் ஆச்சரியமாகப் பார்க்க, ‘‘ஆமாங்க...! இவனுக்காக நீங்க வாழ்க்கையையே விட்டுக் கொடுக்கத் தயாரா இருந்தவராச்சே! இப்படி ஒரு முடிவு எடுத்துட்டா அப்புறம் இந்தக் குழந்தையை எப்படிப் பாத்துக்குவாளோங்கற கவலை இருக்காதில்லை’’ என்றாள்.

அவன் அவளை ஆழமாகப் பார்த்தான்.

‘‘பாரு... ஸ்மிதா...! அந்த மாதிரி சந்தேகம் கொஞ்சம் இருந்திருந்தாலும் நான் இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துகிட்டே இருக்க மாட்டேன். நீ வாழ்க்கையோட கஷ்ட நஷ்டம் புரிஞ்சவங்கறதுக்காகத்தான் இந்தக் கல்யாணத்துக்கு நான் ஒத்துகிட்டேன்’’ என்றான்.

அவள் நெகிழ்ந்தாள்.

‘‘கண்டிப்பா... உங்க நம்பிக்கையைக் காப்பாத்துவேன். அது மட்டுமில்லீங்க! அவனாலதான் எனக்கு இந்த வாழ்க்கையே கிடைச்சிருக்குங்கறதை நான் எப்பவும் மறக்க மாட்டேன்’’என்றாள்.

இப்படிப்பட்ட பேச்சுக்களால் எல்லாம் மனோஜ் மனம் நிறைவடைந்திருந்தான்.

அதனால் தனக்கும் அவளைப் பிடிச்சிருக்கு என்பதை அவ்வப்போது பல விதங்களில் வெளிப்படுத்தினான். அதில் ஒரு விதம்தான் இப்படி போனில் பேசுவது.

ஒரு நாள் பேரிளம் பெண்களின் நிலை பற்றி ஒரு கவிதை சொன்னான். சத்யா என்ற ஒருவர் எழுதியதாகச் சொன்னான்.

வெற்றுப் பார்வை
ஏக்கப் பெருமூச்சு
தளர்ந்த உற்சாகம்
அவளின் அடையாளம்

பதின்பருவத்தில் முளைவிட்ட
ஆசை அரும்புகள்
மொட்டாகவே கருகி விட்டது
போல ஒரு உணர்வு

ஒரு காலத்தில்
நொடிக்கொரு தடவை
முகத்தின் அழகை
கண்ணாடி பார்த்து
சீர்செய்யத் தோன்றும்

இப்போதெல்லாம்
கண்ணாடி பார்க்காமலே
பொழுதுகள் போய்விடுகின்றன,

எங்காவது கேட்கும்
மேளச் சத்தமும்
மங்கல ஒலியும்



கொண்டாட்டங்களும்
தன்வரை சம்மந்தம்
இல்லாதது போலானது.

அவள் விடும் பெருமூச்சு
இரைச்சலாகிப் போனது
அவளுக்கே!

அவனும் தான் பெண்களைப் பற்றிப் படித்த சில நல்ல கவிதைகளைச் சொன்னான்.

அவள் மனம் நிறையப் புன்னகைப்பதைப் பார்த்து ரசித்துக் கொண்டான்.

அதெல்லாம் இப்போது நினைவு வர அதைப் பற்றியும் சற்று நேம் பேசினான். பிறகு,

"ஹேய்...! நீ சொன்னியே பையனோட அப்பா அதான் அந்த ஆள்.. உனக்கு ஒரு சஸ்பென்ஸ் வச்சிருக்கான் தெரியுமா?"

"என்னவாம்?"

"அந்த ஆள் ஒரு பொண்ணை ரெஜிஸ்டர் மேரேஜ் பண்றானாம். தேதி கூட குறிச்சாச்சாம்" என்றான்.

"ஓஹோ...!" என்றாள் அவள் குரல் குழைய "ஆமாம்...! வர்ற மாசம் பதினெட்டாம் தேதி" என்றான்.

அப்படியே செய்தார்கள். அந்தத் திருமணத்தில் ஸ்மிதாவின் பெற்றோர்களுடன் அமர்ஜித்தும், சித்ரமாலாவும் கலந்து கொண்டார்கள். அறவாழி, குகப்பிரியா, நிவேதிதா ஏன் அறவாழியின் பெற்றோர்கள் கூடக் கலந்து கொண்டார்கள்.

அங்கேதான் அது நிகழ்ந்தது!

தெய்வநாயகியும் வெள்ளியங்கிரியும் அந்தக் கூட்டத்தில் இருப்பதைப் பார்த்தாற் போலவே அமர்ஜித் காட்டிக் கொள்ளவில்லை. சித்ரமாலாதான் பேசினாள். அது மட்டுமில்லை, விழா முடிந்து புறப்படும் வரை தன்னிடம் பேச முயன்ற தாயை வெகு லாவகமாகப் புறந்தள்ளி விட்டான் அமர்ஜித்.

தெய்வநாயகி நொந்து போனார்.

## 12

கெட்டி மேளம்! கெட்டி மேளம்!

யாரோ குரல் கொடுத்தார்கள்! மேளம் முழங்கியது.

குகப்பிரியாவின் கழுத்தில் மங்கலநாண் பூட்டினான் அறவாழி. மெல்லிய புன்னகையுடன் அவளைப் பார்த்தான்.

நல்ல கூட்டம் வந்திருந்தது. இத்தனைக்கும் முக்கிய மானவர்களை மட்டுமே அழைத்திருந்தார்கள்.

வந்தவர்கள் போனபின் எல்லாம் முடிந்து கூட்டம் போனபின் ஓய்வாக அமர்ந்தார்கள் குகப்பிரியாவும், அறவாழியும்.

நினைவுகள் மெல்லப் பின்னோக்கி ஓடின. குகப்பிரியாவுக்கும் தன் மேல் ஈடுபாடுதான் என்று புரிந்தவுடனே அறவாழி மேற்கொண்டு முயற்சிகள் எடுத்தான்.

அப்போதுதான் எதிர்பாராமல் அந்தக் கேள்வி எழுந்தது. எழுப்பியவர் வேறு யாருமல்ல மகேஸ்வரிதான்.



''ஏன்... தம்பி! உங்களுக்கு எங்க பொண்ணைப் பிடிச்சிருக்கு. எங்க பொண்ணுக்கும் உங்களைப் பிடிச்சிருக்கு. எல்லாம் சரிதான். ஆனா நாளைக்கு இவளுக்குக் குழந்தை பிறக்க லேட்டாச்சுன்னா உங்கம்மா வேறு பொண்ணு பார்ப்பார்களே!'' என்று கேட்டாள்.

வேண்டுமென்றேதான் கேட்டார். அவருக்கு அற வாழியைப் பற்றி நன்றாகத் தெரிந்திருந்தது. நிவேதி தாவும், குகப்பிரியாவும், அறவாழியும் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் ஸ்மிதாவுக்காக அவர்கள்பட்ட பாடுகளும் அவருக்குத் தெரிந்துதான் இருந்தது. இருந்தாலும் வேண்டுமென்றேதான் கேட்டார். அவருடைய நோக்கம் அந்தக் கேள்வி அவனுடைய தாயைச் சென்றடைய வேண்டும். கொஞ்சமாவது அதற்கு அவர் வருத்தப்பட வேண்டும் என்பதுதான்.

தெய்வநாயகி உண்மையிலேயே வருத்தப்பட்டார். வருத்தப்பட்டார் என்பது மட்டுமல்ல, நேரடியாக மகேஸ்வரியிடம் வந்து விளக்கம் சொன்னார்.

''போதும்மா...! ஒரு தடவை நான் தப்பு செய்து பெரிய மகனோட அன்பை இழந்துட்டு ஏங்கிட்டு இருக்கறது போதாதா! இனியொரு தடவை இப்படி தப்புப் பண்ணுவேனா...? கண்டிப்பாய் பண்ண மாட்டேன்!'' என்று அழுது புலம்பித் தள்ளிவிட்டார்.

மகேஸ்வரிக்கே ''ஏண்டா... இப்படியொரு பிரச்சினையைக் கிளப்பினோம்'' என்றாகிவிட்டது.

''போனது போகட்டும்... என்ன இருந்தாலும் நான் பொண்ணைப் பெத்தவ இல்லையா? என்னோட கவலையையும் நான் தெரிவிக்கணும் இல்லையா?''

''நியாயம்தான்'' என்று வருத்தத்தோடு ஒத்துக் கொண் டார் தெய்வநாயகி.

சுந்தரவடிவேலு தான் இடையில் புகுந்து ''அம்மா... என்னையெல்லாம் மீறி எந்தத் தப்பும் நடந்துடாது. அப்படியெல்லாம் விட்டுரமாட்டோம்.''

இந்தப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு மறுபடியும் யாரும் இதைப் பற்றிப் பேசவில்லை. மகிழ்ச்சியுடன் ஏற்பாடுகள் செய்தார்கள்.

அறவாழி அதோடு விடவில்லை.

அமர்ஜித்திடமும் பேசினான். ''அண்ணா! போனது போகட்டும். அம்மா ரொம்ப வருத்தப் படறாங்க. இனி மேலும் ரொம்பப் போட்டு வருத்தாதேண்ணா...'' என் றான்.

''இல்லடா! அம்மா வாழ்க்கைன்னா என்ன. நினைச் சாங்க! சட்டென்று எனக்கே தெரியாம பொண்ணு பாக்கறதுன்னா... என்னடா... இது...!'' என்றான் வருத் தத்துடன்.

''மகன் தன் சொல்படியெல்லாம் ஆடுவான்னு ஒரு நம்பிக்கைதான்'' என்று சிரித்தான் அறவாழி.

''டேய்! அறவாழி...! ஒரு பாயிண்ட் புரிஞ்சுக்க... சித்தா என்ன தெரியுமா சொல்றா...'' பாவம்! அந்தை... அவங்களுக்கு குழந்தையைக் கொஞ்சணும்னு ஆசை...! அவசரப் பட்டுட்டாங்க! அப்படின்னா...''

அறவாழி சிந்தனையுடன் உள்வாங்கிக் கொண்டான் பிறகு தொடர்ந்து சொன்னான்.

''அண்ணா...! இதுல இன்னொரு ஆங்கிளும் இருக்கு! நீ கோபிச்சுக்கிட்டதால அவங்க சமாதானம் படுத்த



றாங்க. நீ இதை லைட்டா எடுத்திருந்தேன்னா அண்ணி வருத்தப்பட்டிருப்பாங்க...'' என்றான்.

''எப்படிடா... இதைப் போய் லைட்டா எடுத்துக்க முடியும்! உங்கண்ணி ரொம்ப நல்ல டைப்புடா! அவளைப் போய் நான் எப்படிடா... வருத்தப் படுத்திப் பார்ப்பேன்'' என்றான் சகோதரன்.

''சரிண்ணா...! இப்ப என் மேரேஜுக்கு நீ வந்து ஏற்பாடுகள் செய்ய வேண்டாமா?'' என்றான்.

''கண்டிப்பா...!'' என்றான்.

''அப்ப எப்ப வருவே?''

''கவலைப் படாதடா... தம்பி...! இங்க டிரான்ஸ் ஃபருக்காக நான் ரொம்ப பிரஷர் குடுத்துக்கிட்டிருக் கேன். டிரெயினிங் முடிஞ்சுது. அதிர்ஷ்டவசமா கோய முத்தூர் பிராஞ்ச்க்காரர் வேறே ஊர் கேட்கறார். அதனால வாய்மொழியா சரின்னு சொல்லிட்டாங்க! இன்னும் ஆர்டர்தான் பாக்கி. அப்படி ஆர்டர் கைக்குக் கிடைச்சா, நெக்ஸ்ட் மன்த்தே வந்துடுவேன்'' என்றான்.

''ஹைய்யா...! ரொம்ப நல்ல நியூஸ் ஆச்சே!?'' என்று மகிழ்ந்த அறவாழி.

''வந்ததுக்கப்புறம்... தனிக்குடித்தனமா?'' என்றான் இறங்கிய குரலில்.

''இல்லடா...! வீட்டுக்கே வந்துர்றேன். ஆனா அதுக்கப் புறமும் அம்மாகிட்டே கொஞ்ச நாள் முறுக்கிட்டுத்தான் இருப்பேன். அப்பத்தான் அம்மாவுக்கு புரியும்.''

''சரிண்ணா... உன் இஷ்டம்! ரொம்பத்தான் வருந் தாதே... அவங்களும் நம்மளைப் பெத்த தாய்!'' என்றான் அறவாழி.

அமர்ஜித் மெல்ல இளகினான்.

அமர்ஜித் விரும்பினாற் போலவே ஆரா... கிடைத்தது. வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். ... கொஞ்சம் முறுக்கினாற் போலத்தான் நடந்து ... டான். ஆனால் அம்மா தன்னுடைய நடத்தை... மிகவும் வருத்தப்படுகிறாள் என்று தெரிந்தவுடன் ... லப் பேச ஆரம்பித்து விட்டான்.

மெது மெதுவாக மீண்டும் பழையபடி வீட்டு நிலைமை முன்னேறியது.

மெல்ல அந்த நினைவுகள் வந்து அலைமோதிய கண்ணில் கனவுகள் நிறைந்தாற் போல இருந்த அவளை நிமிர்ந்து பார்த்தாள் குகப்பிரியா.

அறவாழி குறும்புச் சிரிப்புடன் அவளைப் பார்த்தான்.

''ஏன் பிரியா? உங்கப்பா எப்படி ரெண்டு மூணு நாளா... திருவாசகம் பாடாம இருக்காங்க?'' என்றான்.

''அதெல்லாம்.. மனசுக்குள்ள பாடிகிட்டுத்தான் இருப் பாரு! பாருங்க கூட்டம் குறைந்தவுடனே அந்த சோல... போய் உட்காந்தவரு! இன்னும் எழுந்திருக்கலே! உள் ளுக்குள்ளே திருவாசகம் ஓடிக்கிட்டிருக்கும்'' என்றாள்.

''அப்படிப் போடு! அழகான வரிகள் இல்லே! உங்க அப்பா இல்லல்லே.. எங்க மாமனார் அடிக்கடி பாடறதைக் கேட்டு எனக்கும் கொஞ்சம் மனப்பாடம் ஆயிடுச்சு! அதுல ஒரு முக்கியமான வரி ''மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே'' அப்படீனு அது எனக்கு ரொம்பப் பிடிச்சுது. என் வாழ்வில் வந்த மாசற்ற சோதி நீ தான். எப்பவும் இதே மாதிரி மலர்ந்த முகத்தோட நீ நடமாடிக்கிட்டு இருக்கணும்! என்றான்.

''கண்டிப்பா..'' என்றாள் அவள்.

''அதே சமயம் நிவேதிதாவின் கணவன் சீதாராம னும் அமர்ஜித்தும் சித்ராமாலாவும் அவர்கள் அருகில் வந்தார்கள் சுற்றிலும் அமர்ந்தார்கள்.

சித்ரமாலா லேசாகக் களைத்தாற் போலத் தெரிந்தாள். அலைச்சல் காரணமாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டான் அறவாழி.

இவர்கள் அமர்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு ஸ்மிதா வும், மனோஜும் அருகில் வந்தார்கள்.

''என்ன க்ளோஸ் ரிலேடிவ்ஸ் மீட்டா? இல்லே... நாங்களும் வரலாமா?'' என்றான் மனோஜ்.

அமர்ஜித் முதலில் ஸ்மிதாவிடம் பேசவே தயங்கி னான். ஆனால் அம்மாவின் ஏற்பாட்டில் ஸ்மிதாவுக்கும் விருப்பமில்லை என்பது தெரியவும் மனம் தேறிக் கொண்டான்.

''இனிமே நீங்களும் எங்களுக்குக் க்ளோஸ் ரிலேடிவ்ஸ் ஆச்சே...!'' என்றாள் நிவேதிதா.

சற்று நேரம் கலகலப்பாகப் பேசினார்கள். மனோஜ் ஸ்மிதாவிடம் திரும்பி ''ஸ்மிதா... நியாயப்படி பார்த்தா... அறவாழி உனக்கு ரொம்பத் தேங்க்ஸ் சொல்லணும். உன்னோட விஷயமாத்தானே ரெண்டு பேரும் பேசிப் பேசி... ஆலோசனை... பண்ணி... பண்ணி'' என்று இழுத்து நிறுத்தினான். எல்லோரும் சிரித்தார்கள்.

''ஆமா...! நிஜமாவே தேங்க்ஸ் சொல்லணும்'' என்றான் அறவாழி.

மறுபடியும் சிரித்தார்கள்.

''இன்னொரு விதமாவும் சொல்லலாம்'' என்றான் மனோஜ்.

ROHINI

எல்லாரும் அவன் முகத்தைப் பார்த்தார்கள்.

"அமர்ஜித் பெரிய விபத்தில இருந்து தப்பிச்சுட்டாரு! ஆனா... நான் மாட்டிகிட்டேன்னா... அறவாழி இன்னொரு விதமா மாட்டிகிட்டாரு..." என்றான்.

ஸ்மிதா முறைத்தாள். அறவாழியோ ரசித்துச் சிரித்தான்.

"பாத்தீங்களா... முறைக்கறா! இனிமேப் பாருங்க..! ஒவ்வொரு வார்த்தைக்கும் அப்ருவல் வாங்கணும்" என்றான்.

மறுபடியும் எல்லாரும் சிரித்தார்கள். ஸ்மிதா கூடச் சிரித்து விட்டாள்.

"என்னமோ எல்லாம் சினிமாக் கதை மாதிரி நடந்து போயிருச்சு..." என்றாள் நிவேதிதா.

"அப்படியா... சொல்றீங்க? அப்ப இன்னொரு விஷயமும் நடக்கணுமே" என்றான் மனோஜ்.

அடுத்த சிரிப்பு வெடிக்குத் தயாராக எல்லாரும் அவனைப் பார்க்க அவன் சிரித்துக் கொண்டே சொன்னான்.

"சினிமாத்தனமா இருக்கணும்னா... எப்படி முடியணும் தெரியுமா? இப்ப சித்ரமாலா மேடம் மயக்கம் போட்டு விழுவாங்க. நாம எல்லாரும் பதறிப் போய் பாக்கணும். திடீர்னு கல்யாணக் கூட்டத்துல இருந்து டாக்டர் ஒருத்தர் "தள்ளுங்க! நான் டாக்டர்... நான் செக் பண்ணிப் பாக்கறேன்னுட்டு... வரணும்... அப்புறம்... நாடி பிடிச்சுப் பாத்துட்டு மேடம் கன்சீவ் ஆயிருக்காங்க... அப்படீன்னு சொல்லணும்" என்றான்.

சட்டென ஒரு அமைதி நிலவியது.



நிவேதிதா ஸ்மிதாவை ஒரு அர்த்தமுள்ள பார்வையாகப் பார்க்க அவள் சற்றே அசடு வழியப் புன்னகைத்தாள்.

அறவாழி அண்ணியின் முகத்தைப் பார்த்தான். சித்ரமாலாவின் முகத்தில் லேசாக வெட்கம் படிந்தது.

"என்ன... சித்ரா... சொல்லிரலாமா?" என்றான் அமர்ஜித்.

அவள் சரியென்பது போலத் தலையாட்ட அமர்ஜித் அவர்களிடம் சொன்னான்.

"அப்படியெல்லாம் டிராமா எதுவும் நடக்கலேன்னாலும் விஷயம் என்னவோ அப்படித்தான். கன்ஃபார்ம் ஆயிருச்சு மேடம் இஸ் ஆன் ஃபாமிலி வே" என்றான்.

"ஹோ...!" என்று மற்றவர்கள் கூச்சல் எழுப்ப மண்டபத்தில் இருந்த மற்றவர்கள் எல்லாரும் ஒரு முறை திரும்பிப் பார்த்தார்கள்.

"சும்மாயிருங்க! எதுக்கு ஆர்ப்பாட்டம் பண்றீங்க" என்றாள் சித்ரமாலா வெட்கத்துடன்.

"ஆமாப்பா..! அடக்கியே வாசிங்க...! அப்புறம் ஆளாளுக்கு விசாரிக்க ஆரம்பிச்சுருவாங்க" என்றான் அமர்ஜித்.

அதுவும் நல்லதுதான் என்று நினைத்தோ என்னவோ எல்லாரும் அமைதியானார்கள்.

உடனே மறுபடியும் வேறு வேறு விஷயங்களுக்குத் தாவினார்கள்.

சூழ்நிலையில் மகிழ்ச்சி கலந்தது.

* * *

அறையில் காத்துக் கொண்டிருந்தான் அறவாழி.

குகப்பிரியா உள்ளே நுழைந்தாள்.

முதலிரவுச் சடங்கு குறித்த எந்தவிதமான ஆர்ப்பாட்டமும் வேண்டாம் என்று அறவாழி சொல்லியிருந்தான். அதனால் குகப்பிரியாவின் வீட்டினர் எளிமையாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

"வெல்கம் மேடம்!" என்று வரவேற்றான் அறவாழி. அருகிலே அமர வைத்துக் கொண்டான்.

பலமுறை பேசிய விஷயம்தான் என்றாலும் அவளை இயல்புக்குக் கொண்டு வருவதற்காகவோ என்னவோ மறுபடியும் கேட்டான்.

"என்... பிரியா! எந்தக் கட்டத்துல உனக்கு என்னை, பிடிச்சிருந்ததுங்கறதைப் புரிஞ்சுகிட்டே...?" என்றான் அறவாழி.

அவள் அவன் முகம் பார்த்தாள். பிறகு குழைந்த குரலில் கேட்டாள்.

"பால்... பழம்... இதெல்லாம்?" என்று இழுத்தாள்.

"அய்யோ! அதெல்லாம்... சும்மா ஃபார்மாலிட்டீஸ். நாம கொஞ்ச நேரம் பேசலாம்" என்றான்.

"ம்...!" என்றாள், அதே குழைவுடன்.

"நான் கேட்ட கேள்விக்கு பதில் வர்லையே" என்றான்.

எத்தனையோ முறை தனிமையில் பேசி இருந்தாலும் கணவனும் மனைவியான முதல் சந்திப்பில் அவளுக்குள் இருந்த தயக்கம் அவனுக்குப் புரிந்தது. அதற்காகவே இந்த இயல்புப் பேச்சு.

"முத முதல்ல... உங்க வீட்ல வந்தப்ப எங்க அக்கா அறிமுகப்படுத்தினாளே... அப்பவே எனக்கு மனசுல பட்டுது."



"அப்படிப்போடு! இப்பத்தான் அப்பாவோட மகிமையே அம்மாவுக்குப் புரியுது. முதல் பார்வையிலேயே ஹார்ட்டை அடிச்சுட்டேனா?" என்றான்.

"ஐய... போதுமே... பெருமை...!" என்றாள் குகப்பிரியா.

"அப்புறம்... உங்களுக்கு எப்ப ஐடியா... வந்துச்சுன்னு கேட்க மாட்டியா?" என்றான்.

"கேட்காட்டியும் சொல்லத்தானே போறீங்க!" என்றாள் குகப்பிரியா.

"ஆமா..! நினைக்க நினைக்க சந்தோஷம்தானே! என்னவோ... எனக்கும் முதல் பார்வையிலேயே பிடிச்சுத்தான் இருந்துச்சுன்னு நினைக்கிறேன். அப்புறம் ஜெயந்தனைக் கூட்டிகிட்டு ஒரு தடவை வந்தப்ப பார்த்தேனே... அப்பவே கொஞ்சம் தீவிரமாயிருச்சு...!" என்றான்.

"ம்...!" என்றாள், அவள் அவன் தோளில் சாய்ந்தபடியே.

"அப்புறம் ஸ்மிதாவுக்காக சோக முகத்தோட வந்து நின்னயே.. அப்ப முழுசா... விழுந்தாச்சு...!" என்றான்.

அவள் திடீரென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"எங்க..! கல்யாணம்னு ஆனா காதல் மாறிடுமா என்ன?" என்றாள்.

"அதெல்லாம் சும்மா! காதல் கொஞ்சம் பொறுப்போட கூடின விஷயமா மாறிடும். அதுவே அன்பா.. குடும்பப் பொறுப்பா மாறிடும் தெரியுமா?" என்றான்.

"இத பார்றா! இவளுக்கு எந்த மாதிரிக் கவலையெல்லாம் வருது! இன்னும் நாம குடும்ப நடத்தவே ஆரம்பிக்கலை..." என்று குழைவாகவும் ஆழ்ந்த குரலிலும் சிரித்தான்.

''முதல்ல அதை ஆரம்பிப்போம்'' என்று [illegible] கைகளுக்குள் அணைத்தான்.

''என் மேல் விழுந்த மழைத்துளியே இத்தனை [illegible] எங்கிருந்தாய் அப்படீன்னு ஏதாவது பாடணுமா?'' [illegible]

அவளிடம் பதிலில்லை!

''மலர்ந்த மலர்ச்சுடரே...'' என்றான். அவள் [illegible] மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

''தபூசங்கர் கவிதை சொல்லட்டுமா!'' என்றான்.

''ம்...!'' என்றாள் அவள்.

''நீ என்னிடம்

எதை வேண்டுமானாலும் கேள்!

நான் உன்னிடம்

காதலை மட்டுமே கேட்டுக் கொண்டிருப்பேன்'' என்றான்.

அவள் முகம் இன்னமும் அழுந்தியது.

''காதலிக்கும் போது

கவிதைக் கிடைத்தது

காதலிக்கப் படும்போதுதான்

வாழ்க்கை கிடைக்கிறது'' என்றான்.

கனிவும், அர்த்தம் காதலுமாக

வாழ்க்கை அவர்களுக்குக் கிடைத்திருக்க... அந்தப் பாதையில் அவர்கள் செல்லக் காத்திருக்கையில் நம்மால் தொல்லை எதற்கு!

மௌனம் கடந்த ஆனந்தம் அங்கே அருவியாகப் பாய்ந்து கொண்டிருந்தது. இனியதொரு வாழ்க்கை அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தது. அவள் மலர்ந்த மலர்ச்சுடராக இருக்கையில் அவன் தேனருந்தும் வண்டானான்.

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.